
ISSN 2012 - 9157

# ஆறுதல்

இதழ் - 03

கல்வி - சமூகம் - பண்பாடு

மார்ச் - ஏப்ரல் - மே - 2016



"அடிப்படை வசதிகளை கொண்டிராத ரியூசன்களை மூடிவிட வேண்டும் இதற்கு சட்டத்தில் இடமிருக்கின்றது"

-கலாநிதி எதிர்வீரசிங்கம்



இயற்கையோடு இணைந்து...



உளவியல் அடிப்படைகளும் தற்காலப் பிரயோகமும்

காலாண்டிதழ்

# Harikanan
**PRINTERS OF THE NORTH**



harikananprinters




**Head Office:**
#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
W www.harikanan.com
E print@harikanan.com
T +94 21 222 2717|8

## ஆறுதல் - காலண்டிதழ்

கல்வி - சமூகம் பண்பாடு

மார்ச் - ஏப்ரல் - மே - 2016

இதழ் - 03

**நிர்வாக ஆசிரியர்**

சுந்தரம் டிவகலாலா

**ஆசிரியர் குழு :**

மு.விவேகானந்தன் (விவேக்)

ந.அனந்தராஜ்

ஜனதா ஜோர்ஜ்

**ஆலோசகர் குழு :**

பேராசிரியர் செ.மோகனதாஸ்

பேராசிரியர் தயா சோமசுந்தரம்

பேராசிரியர் செ.சிவலிங்கராஜா

பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்

ச.கிருபானந்தன்

Dr.ஆர்.பரமேஸ்வரன்

**வெளியீடு :**

ஆறுதல்

இல.51, வைமன் வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்,

இலங்கை.

**தொடர்புகள் :**

தொ.பே.021 222 7092

**மின்னஞ்சல் :**

aruthalmag@gmail.com

**விலை : 50 ரூபா**


# நேர்காணல்

கலாநிதி
எதிர்வீரசிங்கம்





இயற்கையோடு
இணைந்து....

மாணவர்களின் கல்வியில்
பெற்றோரின் பங்கு





மாறிவரும்
தமிழர் பண்பாடு

தொல்லை தரும்
தொற்றா நோய்கள்



மேலும்....

எண்ணம்

# ஒளியை நோக்கிய எமது கல்விப் பயணத்தை முன்னெடுப்போம்!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்லாது, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே மலையகத்திலும், தென்னிலங்கையிலும் வாழ்கின்ற தமிழ் மாணவர்களின் கல்வி நிலையின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை தற்பொழுது, கல்வித்துறையுடன் தொடர்புடைய கல்வியாளர்களிடமே உள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாணமும், வடக்கு மாகாணமும், கல்வித் தரவரிசையில் முறையே 8 ஆம், 9 ஆம் நிலைக்குப் பின்தள்ளப்பட்டுள்ளமையானது, ஏமாற்றத்தைத் தருவதாக உள்ளது.

பதின்மூன்று வருடங்கள் முறையான பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த ஒரு பிள்ளை பின்னர், இந்த மண்ணில் உரிய முறையிலான கல்வி அடைவை எட்ட முடியாமைக்கான காரணத்தை அறிவதிலும், அவற்றிற்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் இதுவரை ஈடுபட முன்வராமையும் கவலை அளிக்கின்றது.

கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள் வெறுமனே பார்வையாளர்களாக மட்டும் நின்று விடாது, கல்வி அபிவிருத்தியில் பிரதான பங்காளிகளாகவும் மாற வேண்டும். 2009 ஆம் ஆண்டின் முன்னர் கடுமையான யுத்தம் நடைபெற்ற காலப்பகுதிகளிலும், அதற்கு முன்னர், எரிபொருள் தடைகள், கற்றல் உபகரணங்களுக்கான தடைகள் போன்ற ஒடுக்கு முறைகள் நிலவிய காலப்பகுதியிலும், வடபகுதியின் கல்வித் தரத்தில் இத்தகைய வீழ்ச்சி ஏற்படவில்லை. அந்த நாட்களில் சேவையாற்றிய கல்விச் செயலாளர்களில் இருந்து, கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என ஒவ்வொரு படிமுறை களிலும் தமது கடமைகளை அர்ப்பணிப்போடு மேற்கொண்டு வந்தமையை எம்மால் மறந்துவிட முடியாது.

இன்று அவர்களில் பலர் எம்மிடையே இல்லாத போதிலும், அவர்கள் முன்னெடுத்த அணுகுமுறைகளை இன்றைய இளம் சந்ததியினர் பாடமாகக் கொண்டு எமது குழந்தைகளின் வாழ்வை மேம்படுத்த கடுமையாக உழைக்க வேண்டும் என்பதே "ஆறுதலின்" எதிர்பார்க்கை யாகும்.

அவ்வாறான ஒரு கல்வி மறுமலர்ச்சியை மீண்டும் எமது மண்ணில் தோற்றுவிக்க வேண்டுமானால், கல்வித்துறை சார்ந்த ஒவ்வொருவரும் தம்மைத்தாமே சுயமதிப்பீட்டிற்கு உட்படுத்திக் கொள்வதன் மூலம், அவற்றிற்கான பரிகார நடவடிக்கைகளை இனங்கண்டு அவற்றைச் செயற்படுத்துவதும் இலகுவாக இருக்கும்.

அந்த வகையில் கல்வித்துறை சார்ந்த நிறுவனமாக கடந்த பத்து வருடங்களாக தமிழ் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் பல செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வரும் ஆறுதல் நிறுவனம், கல்வி அபிவிருத்தியை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு, தமிழ் பேசும் மாணவர்களுக்கும், கல்வியாளர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பயன்படக்கூடிய வகையில், "ஆறுதல்" என்ற காலாண்டிதழை வெளியிடுகின்றது.

"ஆறுதல்" கல்வித்துறை சார்ந்தவர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்து வதிலும், அவர்களின் எண்ணங்களையும், கருத்து வெளிப்பாடுகளையும் வெளிக்கொண்டுவரும் ஒரு ஊடகமாகவும் செயற்படும் என்ற நம்பிக்கையுடன், ஒளியை நோக்கிய எமது கல்விப் பயணத்தை முன்னெடுப்போம்.

–ஆசிரிய பீடம்

# "அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்காத ரியூற்றரிகளை மூடிவிட வேண்டும் இதற்கு சட்டத்தில் இடம் இருக்கின்றது" - கலாநிதி நா.எதிர்வீரசிங்கம்



வடமாகாணத்தின் கல்வித் தரம் முன்னர் இருந்த நிலையை விட குறைந்து கொண்டு வருவதையிட்டு பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களும், கல்வியாளர்களும் கவலை தெரிவித்து வருகின்ற நேரத்தில், வடமாகாணத்தின் கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் ஆலோசக ராக இருக்கும், கலாநிதி எதிர்வீரசிங்கம் அவர்களை, அவருடைய அலுவலகத்தில் ஆறுதல் நிறுவனத்தின் சார்பில் சந்தித்தபோது பெற்ற அனுபவங்களை ஆறுதல் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

கலாநிதி நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் அவர்கள் 1958 இல் ஜப்பானில் டோக்கியோ வில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையின் சார்பில் பங்குபற்றி உயரம்பாய்தலில் புதிய ஆசிய சாதனையை நிறுவியதோடு, தங்கப்பதக்கத்தையும் பெற்று, இலங்கைக்கும், தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்த்துக் கொடுத்த ஒருவர். இலங்கை, சியராலியோனி, பப்புவா நியுகினி, நைஜீரியா ஆகிய நாடுகளின் பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், யுனெஸ்கோவிலும் ஐந்து ஆண்டுகள் பணியாற்றி தற்பொழுது வடக்கு கிழக்கு மாணவர்களின் கல்வி, பண்பாடு மற்றும் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்.

செவ்வி கண்டவர் : ந.அனந்தராஜ்

**✧ நீண்டகாலமாக பல ஆக்கபூர்வமான விடயங் களை மேற்கொண்டு வருகின்றீர்கள். நீங்கள் ஆற்றுகின்ற பணி எங்களைப் போன்றோரைத் தவிர இளைய சமூகத்திற்கு தெரியாது. ஆனால், இன்றைக்கும் நீங்கள் கல்விக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றீர் கள். அந்தவகையில் உங்களின் வேலைத்திட் டங்கள், கல்வித்தரம் உயர்த்துவதற்கு என்ன வழிமுறைகளைப் பின்பற்றலாம், உலக கல்வித் தரத்துடன் எங்களது கல்வித் தரத்தை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பன போன்றவற்றிற்கான ஆலோசனைகளை வழங்குவீர்களாயின், அவை எமது வாசகர் களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் அதேவேளை பாடசாலைக் கல்விக்கு மேலதிக மாக, இயங்கும் ரியூற்றரிகளைப் பற்றியும் என்ன கருதுகின்றீர்கள்?**


எதிர் : இதற்கு என்ன காரணம் என்றால் புலமைப்பரிசில் பரீட்சை, O/L, A/L ஆகிய வற்றில் சித்தியடைய வேண்டும் என்ற தேவையுள்ளதால், அதில்தான் மாணவர்கள் தமது முழுக் கவனத்தையும் செலுத்து

கின்றனர். பிள்ளைகள், வெட்டுப் புள்ளிக்கும் மேலாக அதிக மதிப்பெண்களைப் பெற வேண்டும் என பெற்றோர்கள் எதிர்பார்க்கின் றார்கள். அதேவேளை ஆசிரியர்களோ, தமது வகுப்புக்களில் உள்ள மாணவர்களில் இருந்து அதிகளவான தேர்ச்சி விகிதத்தையே எதிர்பார்க்கின்றார்கள். அதற்கும் மேலதிக மாக பெற்றோர்கள் பாடசாலை நேரத்திற்கு பின்பு பிரத்தியேக வகுப்புக்களுக்காக அதிகளவிலான பணத்தையும் செலவு செய்கின்றனர்.

தனியார் கல்வி நிலையங்களில் ஒரு வகுப்பறையில் 400 இற்கும் அதிகமான மாணவர்களை வைத்துக் கற்பிக்கின்றார் கள். ஒரு சிறிய வாங்கிலில் பலர் நெருக்க மாக இருப்பார்கள், ஆசிரியரோ அவர் களுக்கு அருகில் செல்ல முடியாத நிலையில் இருப்பதுடன், எந்தவித கலந்துரையாடலோ, அல்லது செயல்முறை சார்ந்த கற்றலோ அல்லது வினாக்களை வினாவுவதோ இன்றி வகுப்புகள் நடைபெறும். இதுபற்றி எந்த ஒரு பெற்றோரும் கவலைப்படுவ தாகவும் தெரியவில்லை. ஆசிரியர் சொல்வதைக் கேட்டு குறிப்பு எடுத்துவிட்டு கடந்த கால வினாத்தாள்களுக்கான் விடைகளுடனும் மாணவர்கள் வீட்டுக்குச் சென்று விடுவார் கள். ஆனால் பாடசாலையில் ஏதாவது குறைபாடு என்றால் அதிகமாகக் குறைகளைக் கூறிக் கொண்டிருப்பார்கள்.

பாடசாலையில் 30 மணித்தியாலங்கள் வரை ஒரு வாரத்திற்குக் கற்பித்தல் நடை பெறுகின்றது. இலவசமாகவே கல்வி வழங்கப்படுகின்றது. அதனைச் சரியான முறையில் பயன்படுத் தாது, ரியுற்றரிகளுக்குப் பெருமளவு பணத் தைக் கொடுக்கின்றார்கள். அதேவேளை பாடசாலைகளில் கற்பிக்கும் ஒரு சில ஆசிரியர்களும், பாடசாலை விட்டதும் 2 மணிக்கு ரியூசனுக்கு ஓடுகின்றார்கள்.

ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியில், ரியூற்றரிகளின் பங்களிப்பா அல்லது பாடசாலைகளின் பங்களிப்பா அதிகம் என்ற இந்த வினாக்களுக்கான புள்ளிவிபரம் எதுவும் எங்களிடம் இல்லை. அதேவேளை, ரியூற்றரிகள் பற்றிய புள்ளிவிபரங்களைக் கூட எங்களால் பெறமுடியாமல் உள்ளது. பாடசாலைகளில் உள்ள A/L வகுப்புகளில் கற்கும் பிள்ளைகள் ஜனவரியில் இருந்து பரீட்சை நடைபெறும் வரை பாடசாலை களுக்குச் சமுகமளிப்பதில்லை. அதுமட்டு மல்லாது, வேறு மாவட்டங்களில் கற்கும் மாணவர்களும் யாழ்ப்பாணத்திற்கு வந்து பாடசாலை நேரங்களில் ரியூற்றரிகளுக்குப் போகின்றார்கள்.



எங்களுடைய பரிந்துரைகளின்படி இந்த வருடம் தொடக்கம் A/L பிள்ளைகளுக்கு ஜூன் கடைசிப் பகுதி வரைக்கும் ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும் என்ற சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அது நடைமுறைப்படுத்தப்படுவதை கல்வி வலயங்களும், கோட்டங்களும் கண்காணிக்க வேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களை பிரதேச செயலகங்களும், உள்ளூராட்சி மன்றங்களும் கண்காணிக்க வேண்டும். உணவகங்களுக்கு வழங்கப்படும் A,B,C போன்ற சான்றிதழ்கள் ரியூற்றரிகளுக்கும் வழங்க வேண்டும். அடிப்படை வசதிகளைக் கொண்ருக்காத ரியூற்றரிகளை மூடிவிட வேண்டும். இதற்கு சட்டத்தில் இடம் இருக்கின்றது.

✣ **இன்று ஒப்பீட்டளவில் பார்க்கும் போது யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை முன்னர் இருந்ததை விட குறிப்பாக 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சரிந்து கொண்டு போவதைப் பார்க்கும் பொழுது கவலையாக இருக்கின்றது. இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண மாணவர்களின் கல்வித்தரம் குறைந்து வருவது பற்றிய உங்களுடைய கருத்து என்ன?**

எதிர்: ஆம்... நீங்கள் குறிப்பிட்ட விடயங்களை நானும் ஏற்கின்றேன். இது தொடர்பாக 2013 இல் வடமாகாணத்தின் கல்வித் தரத்தை உயர்த்துவது தொடர்பாக மீளாய்வு செய்து அதனை உயர்த்துவதற்கான செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஆலோசனையை கல்வி அமைச்சர் முன்வைத்த பொழுது, அவர் பதவியேற்ற மறுநாளே அறுபது பேர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டு, அதில் இருந்து உருவாக்கப்பட்டதே Northern Education System Review (NESR) என்ற அமைப்பாகும். அதனூடாக எமது பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவற்றுக்கான காரணங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

அப்பிரச்சினைகள் ஒவ்வொன்றுக்குமான தீர்வுகளும் வரையறுக்கப்பட்டு ஒரு முழுமையான அறிக்கையாகத் தயாரித்து, 2014 ஆம் ஆண்டு ஆடிப்பிறப்பன்று அதனை வெளியிட்டோம். அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்துகையை மதிப்பீடு செய்ய சுயாதீன கண்காணிப்பு குழுவாகச் செயற்படக் கூடிய வகையில், 'பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு முறைகள் ஆயம்' (Reccommondation Implementation and Monitoring Panel RIM) என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டது. கல்வி அபிவிருத்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பும் அதற்கு வழங்கப்பட்டது. அது ஒரு சட்டரீதியான அமைப்பாக இருப்பதால். அதற்கென தற்பொழுது ஒரு செயலகமும் ஆளணிகளும் உருவாக்கப்பட்டுள்ளன."

✣ **தங்களால் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையை நானும் பார்வையிட்டுள்ளேன். முற்போக்கான பல விடயங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. ஆனால் அந்த அறிக்கை வெளியிடப்பட்டு, ஒரு வருடம் கடந்தும் பாடசாலைகளில் அவை நடைமுறைப்படுத்தப் பட்டதாகத் தெரியவில்லையே..... அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளில் 50 வீதமானவற்றை நடைமுறைப்படுத்தினாலேயே எமது பாடசாலைகளின் கல்வித்தரம் ஒரு வருடத்திற்குள் உயர்ந்திருக்கும். ஆனால் இன்றும் கூட**

**எமது மாகாணம் 9 ஆவது நிலையில் உள்ளதையும் நீங்கள் அறிவீர்கள். அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் என்ன தடைகளை எதிர்நோக்குகின்றீர்கள்? அதனை பாடசாலைகளில் இறுக்கமாக நடைமுறைப் படுத்துவதற்குத் தயக்கமாக உள்ளதா....?**

எதிர்: "இல்லை.... அப்படி ஒரு தயக்கமோ அல்லது அச்சமோ இல்லை.... முதற்கட்டமாக அதில் குறிப்பிட்ட 17 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சுற்றறிக்கை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எமது மாகாணத்தில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களில் பலர், கடந்தகால போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் அவர்கள் பெருமளவு மன உளைச்சல்களை அடைந்துள்ளனர். எனவே முதற்கட்டமாக ஆசிரியர்களை அந்த மன உளைச்சலில் இருந்தும் மீட்டெடுப்பதற்கான ஒரு அணுகுமுறையை ஏற்படுத்த வேண்டும்.

எங்களுடைய அந்தப் பணியில், பேராசிரியர். தயா சோமசுந்தரம், Dr. சிவயோகன், Dr.அம்பலவாணர், Dr.விமலேந்திரன், மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் எல்லோரும் ஈடுபட்டுள்ளனர். எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் இந்தியாவில் இருந்தும் ஒரு நிபுணத்துவ ஆலோசகர் வருகை தரவுள்ளார்.

இன்று சர்வசாதாரணமாக ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தண்டனையும் வழங்கி வருகின்றார்கள். மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற தண்டனை தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக, பாடசாலைகளுக்கு முதலில் மருத்துவர்களை அனுப்பினோம். கைகளால், கால்களால், பிடரியில், கன்னத்தில் தாராளமாக அடி விழுவதாகவும் அவர்கள் கூறினார்கள். ஒரு பெற்றோர் கருத்துத் தெரிவித்த பொழுது, மாணவர் தலைவர்களும் (prefects) பிள்ளைகளுக்கு அடிப்பதாகக் கூறினார். அப்பொழுதுதான் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்தோம்... இது தொடர்பாக எழுமாற்றாக ஒரு ஆய்வு செய்ய வேண்டும் என்றும், இதில் சில பாடசாலைகளில் இருந்து குறைந்தளவான பிள்ளைகளைத் தெரிந்து, அவர்களிடம் சில வினாக்களைக் கேட்டு, பின்பு அவற்றைத் தொகுத்து நெறிப்படுத்தும் குழுவிற்கு கையளித்தேன். அதன் அடிப்படையில் சில நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம்.

பாடசாலை அதிபர்களின் சில முறையற்ற செயற்பாடுகளைக் குறைப்பதற்காக, நாங்கள் வகுப்பறை முகாமைத்துவம் என்ற ஒரு இறுவட்டைத் தயாரித்து அதில், 6000 இறுவட்டுக்கள் வரை பிரதி எடுத்து அதிபர்கள் ஆசிரியர்களுக்கு கொடுத்தோம். மேலும் 3000 இறுவட்டுக்கள் தயாரிக்க வேண்டியுள்ளது. ஆனால் அதற்கு முன்னர், அவர்களுக்கான பயிற்சியை வழங்குவதற்காக Physcosocial well being என்ற குழு மூலம் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அதனை நாங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றோம்.

இது தொடர்பான சுற்றறிக்கையில், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கையெழுத்திட்டுள்ளனர். பாடசாலைகளில் அதிபர்கள் இது தொடர்பான பதிவேடுகளைப் பேணிக் கொள்ள வேண்டும். அதாவது ஒரு மாணவனுக்குத் தண்டனை வழங்கினால், எந்த ஆசிரியர்?, எதற்காக?, யாருக்கு அடித்தார்? என்பது தொடர்பாக அந்தப் பதிவேடு

களில் குறிப்பிடப்பட வேண்டும். அந்த விபரம் எங்களுடைய குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் எங்களுடைய குழுவும் சென்று பார்வையிட்டு ஒரு விசாரணையை மேற்கொள்ளும். அந்த விசாரணை மூலம் அதற்கான ஒரு தீர்ப்பும் வழங்கப்படும்.

ஆசிரியர்கள் கோபமாக இருக்கும் வேளைகளில், இவ்வாறு நிகழ்வதாகக் காரணம் கூறப்படுகின்றது. ஆசிரியர்களில் அதிகமானவர்கள், போரால் பாதிக்கப்பட்டுள்ளதால் கோபம் உடனே வருகின்றது எனவும் சொல்வார்கள். அல்லது தங்களுடைய வீட்டுப் பிரச்சினைகள் மற்றும் மனக் குழப்பங்கள் காரணமாகப் பிள்ளைகளைத் அடித்துத் துன்புறுத்துகின்றனர். இவ்வாறாக பிள்ளைகளை எப்படிக் கையாளுவது என்று தெரியாத நிலையிலேயே பல ஆசிரியர்கள் இருக்கின்றார்கள்.

ஏனெனில், உளரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கான சில பயிற்சிகளையும் கொடுக்க வேண்டும். திருமதி. தாரா டி மெல் என்பவர் 2005 ஆம் ஆண்டளவில் கல்விச் செயலாளராக இருந்தபொழுது, தண்டனைகள் வழங்குவது தொடர்பான ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருந்தார். அதில் இது தொடர்பாக விரிவாக உள்ளது. அதை நாங்கள் மீண்டும் பிரதிபண்ணி அனைத்து அதிபர்களுக்கும், அனுப்பி ஒவ்வொருவரும் வாசித்து விளங்கிக் கொண்டதாக கையெழுத்திட்டு மாகாணக் கல்விச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும். எனவே எமது கல்வி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இவ்வாறான பரிந்துரைகளை முடிந்த வரை 2016 ஆம் ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

**✧ பாடசாலைகளில் சிறந்த பெறுபேற்றினைக் காட்டாத அதிபர், ஆசிரியர்களையோ, அல்லது குறைவான அடைவுமட்டத்தைக் காட்டுகின்ற கல்வி அலுவலகர்களையோ அகற்றி விட்டு ஆற்றல் உள்ளவர்களை நியமித்தால் கல்வித் தரம் உயர வாய்ப்பு ஏற்படுமல்லவா? அத்துடன் தரங்கணிப்புப் படிவத்தை ஆசிரியர்கள் பூர்த்தி செய்து வருட ஆரம்பத்தில் கையளிக்கின்றனர். ஆனால் அவை தொடர்பான எந்த நடவடிக்கையும், வருட முடிவில் எடுக்கப்படுவதில்லை. இதுபற்றி தாங்கள் ஏதாவது நடிவடிக்கை எடுக்க முடியாதா? நீங்கள் கல்வி அபிவிருத்திக் குழுவில் இருப்பதால் அதனை வடமாகாணத்தில் கடுமையாக நடைமுறைப்படுத்த முடியாதா?**

எதிர்: கல்வித்தரம் வீழ்ந்து கொண்டு போவதைத் தடுக்க நீங்கள் குறிப்பிட்டது போன்று, நாங்கள் எல்லோரும் ஒருங்கிணைந்துதான் முயற்சி எடுக்க வேண்டும். இங்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கான நடைமுறை உள்ளது. பல்கலைக் கழகம் அல்லது கல்வியியல் கல்லூரிகளில் 15வாரம் அல்லது 10 வாரங்களைக் கொண்ட பயிற்சி ஒன்றைக் கொடுக்க வேண்டும். அதற்கு எங்களுடைய பல்கலைக்கழகமும் ஒப்புதல் அளிக்க வேண்டும். அதற்காக கல்வி அமைச்சு பல்கலைக்கழகங்களை அணுகி ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள வேண்டும்.

நீங்கள் குறிப்பிட்டது போன்று தரங் கணிப்பில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தைச் செயற்படுத்தாத அதிபர் ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகளை பதவி இறக்கம் செய்யும் நடைமுறையைப் பின்பற்றி ஒரு இறுக்கமான கல்வி முறைமையை இங்கு கொண்டுவந்தால் காலப்போக்கில் எல்லாமே திருந்திவிடும். அதற்கு எல்லா

மட்டத்தில் இருந்தும் ஒத்துழைப்புக்கள் கிடைக்க வேண்டும். மாணவர்களின் அடைவை உயர்த்தாத ஆசிரியர்கள் மீதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் எம்மால் ஒரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பாடசாலைகளிலும், கல்வி அலுவலகங்களி லும் கண்காணிப்புச் செய்து, குறைபாடுகள் இருப்பின், அவை தொடர்பான விசாரணை களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளும் உள்ளன. ஆனால் இன்னும் அது நடை முறைப்படுத்தப்படவில்லை. கல்வித்துறை எவரது தலையீடுமின்றி சுதந்திரமாக இயங்க வேண்டும் என்பதில் நாங்களும் கவனம் எடுத்து வருகின்றோம்.

**✧ ஆசிரியர்களின் பரம்பல் கூட சரியான முறையில் இடம்பெறவில்லை என்ற குற்றச் சாட்டுக்கள் அதிபர்கள் மற்றும் பெற்றோர் மட்டத்தில் முன்வைக்கப்படுகின்றன. சில பாடசாலைகளில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் ஒளிந்து இருக்கின்றார்கள். வன்னிப் பிரதேசங்களிலும், தீவக வலயத்தி லும் ஆசிரியர் பற்றாக்குறை மோசமாக உள்ளது. தேவைக்கு மேலதிகமாக ஆசிரியர் களை ஒரு அதிபர் வைத்திருந்தால், அவர் களுக்கு வழங்கப்பட்ட சம்பளப் பணம் முழுவ தையும் அந்தப் பாடசாலை அதிபரிடம் இருந்தே அறவிட வேண்டும் என்று 1990களில் தாரா டி மெல் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில், குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்தியிருந் தால் ஆசிரியர் பங்கீடு சமமானதாக இருந்திருக் கும். ஏனெனில் தற்பொழுது வடமாகாணத்தில் ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாகவே புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இவ்வாறான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தும் இருப்பதை அனுமதிக்கக்கூடாதல்லவா?**

எதிர்: நீங்கள் குறிப்பிட்டது போன்று தாரா டி மெல் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட அந்த சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். இதுபற்றி நிச்சயமாகக் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடி விரைவில் ஒரு முடிவுக்கு வருவோம். இன்றுள்ள ஆசிரியர் வகுதிகளில் ஒரு குறிப்பிட்ட பாட வகுதியினரே அதிகளவில் காணப்படு வதால், பாடசாலைகளின் தேவை அடிப் படையில் ஆசிரியர்களைப் பங்கீடு செய்ய முடியவில்லை. பல்கலைக்கழகங்களிலும் கூட கலைத்துறை மாணவர்களை அதிகள வில் வெளியீடு செய்து வருகின்றனர். பல்கலைக்கழகங்களும், கல்வியியல் கல்லூரிகளும் எந்த வகையான ஆசிரியர் களுக்குத் தேவையுள்ளதோ அதற்கேற்ப தெரிவுகளை மேற்கொண்டு பயிற்சிகளை வழங்க வேண்டும். கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பற்றாக்குறை நிலவுகின் றது. ஆனால் நுண்கலைத்துறை, கலைத் துறை போன்றவற்றில் வெற்றிடங்கள் இல்லை. இந்த நிலையில், எமது பல்கலைக் கழகங்களில் விஞ்ஞானத்துறை அனுமதிக் கான கோட்டாவைச் சரியாக நிரப்ப முடிய வில்லை. 150 மாணவர்களுக்கான தேவை இருந்தால், அதில், 100 மாணவர்களை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு நிரப்புகின்றார்கள். அவர்கள் பயிற்சி முடிந்ததும் தமது மாவட்டங்களுக்குச் சென்று விடுவார்கள்.

அதேவேளை, எங்களுடைய மெறிற் சித்திகளும் (merit pass) குறைந்து வருகின் றன. முன்னர் எங்களுடைய மாணவர்களில் அதிகளவானோர் மெறிற் சித்திகளைப் பெற்றதால், அதிகளவான தமிழ் மாணவர் கள் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லக் கூடியதாக இருந்தது. ஆனால் இன்று

மாவட்ட ரீதியான கோட்டாவையாவது வழங்குங்கள் என்று கேட்க வேண்டிய நிலையில் உள்ளோம். இதற்கு எமது பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும் கடுமையாக வேலை செய்து மெறிற் சித்திகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

அதேவேளை கல்வித் திணைக்களங்களில் கணித பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சேவைக்கால ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்படும் பொழுது, பாடசாலைகளில் திறமையாகக் கற்பித்துக் கொண்டிருக்கும் கணித ஆசிரியர்களைத் தெரிவுசெய்து அந்தப் பதவிகளுக்கு நியமித்து விடுவதால், பாடசாலைக் கற்றல், கற்பித்தல் பாதிக்கப்படுகின்றது. அவர்களுக்கான கொடுப்பனவுகள்கூட ஆசிரியர் சம்பளங்களின் கோட்டாவில் இருந்தே, வழங்கப்படுகின்றது. விசேட கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. அவர்களை Performing ADE எனக் கூறி அந்த ஆளணியை அப்படியே வைத்திருக்கின்றனர். எதிர்காலத்தில் Performing நியமனங்கள் வழங்கப்படக் கூடாது என்ற சுற்றறிக்கையும் எங்களால் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறானவர்கள் பரீட்சைகள் மூலமே நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும், அவர்கள் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் மீண்டும் பழைய இடங்களுக்கே அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவித்து விட்டோம்.

வடமாகாணத்தில் நாங்கள் பெரிய அளவில் மேற்கொண்ட Symposium இற்கு மத்திய கல்வி அமைச்சில் இருந்து கல்வி அமைச்சருடன் 28 பேர் வருகைதந்து, எங்களுடைய நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருந்தவர்கள், எங்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தத் தொடங்கி விட்டார்கள். கடந்த 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டத்திலும், எங்களுடைய சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கியுள்ளார்கள்.

இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்கும் சேர்த்தே இந்த நிதியை ஒதுக்கியுள்ளார்கள். நீங்கள் குறிப்பிட்டது போன்று இந்தப் பிரச்சினைகளெல்லாம் பெரும்பாலான மாகாணங்களில் உள்ளன. ஆனால் எங்களுடைய பிரச்சனைகளில் 30% மானவை, போரினால் ஏற்பட்டவை. போர்க்காலத்தில் இடம்பெயர்வின் போது தற்காலிகமாக இருந்த ஏற்பாடுகளையே தற்பொழுதும் செய்கின்றார்கள். போர்க்காலத்தில் அவசரத்திற்கு அதனைச் செய்யலாம். தற்பொழுது செய்ய முடியாது. எங்களால் முன்மொழியப்பட்ட 230 பரிந்துரைகளில் 135 பரிந்துரைகளை வலயங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரைக் கேட்கத் தேவையில்லை. அவர்களே அவற்றை நடைமுறைப்படுத்தலாம். அதற்கான சுற்றறிக்கையும் அனுப்பப்பட்டுள்ளது.

நாங்கள் இங்கு பரிந்துரை செய்வதையெல்லாம் தற்பொழுது தென்னிலங்கையில் நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். ஆனால், எங்களுடைய வலயங்களில் தற்பொழுதுதான் நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளார்கள். இந்த விடயத்தில் RIM எமது பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்."

**✧ தேசிய கல்வி நிறுவகம் (NIE) என்ற அமைப்பு பாட விதானங்களைத் தயாரித்தல், பாடநூல்களை அச்சிடுதல், கற்றல், கற்பித்தல் தொடர்பான இறுவட்டுக்களை வெளியிடுதல், ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் டிப்ளோமா கற்கைநெறி போன்ற பட்டப் பின் கல்வியை வழங்குதல் போன்றவற்றைச் செய்து வருகின்றது. ஆனால் அதனால் சிங்கள மாணவர்களே பெரிதும் நன்மை அடைகின் றனர். உயர்தர மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய கைந்நூல்கள், இறுவட்டுக்கள் போன்ற வற்றை பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே வெளியிடுகின்றனர். பல பயனுடைய கருத்தரங் குகள்கூட சிங்கள மொழியிலேயே நடத்தப்படு கின்றன. எமது மாணவர்களின் கல்வியிலான பின்னடைவுக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கின்றது. இந்த நிலையில் வடமாகாணத் திற்கென சுதந்திரமாகச் செயற்படக்கூடிய வகையில் "மாகாணக் கல்வி நிறுவகம்" (Provincial Institution of Education- PIE) என்ற பெயரில், ஒரு நிறுவகத்தை உருவாக்கிச் செயற்படுத்த முடியாதா? ஏனென்றால் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் கல்வி அபிவிருத்தி தொடர்பான அதிகாரங்கள் மாகாண சபை யிடமே வழங்கப்பட்டுள்ளதல்லவா?**

எதிர்: "ஆம்.... நீங்கள் மிகவும் நல்ல ஒரு கேள்வியைக் கேட்டிருக்கின்றீர்கள்... எங்க ளுடைய பரிந்துரைகளில் "Institute of Tamil medium Education" (ITME). என்ற அமைப்பை உருவாக்குவதற்கு முன் மொழிந்திருக் கின்றோம்.

தென்னிலங்கையில் அமைக்கப்பட் டுள்ள தேசிய கல்வி நிறுவகம் (NIE) கல்வி அமைச்சுடன் இணைந்து எவ்வாறு வேலை செய்கின்றதோ அதேபோல் எங்களுடைய மாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து வேலை செய்யக்கூடிய வகையில் பரிந்துரை செய்திருக்கின்றோம். ITME என்ற அந்த நிறுவனம் தான் எமது பிரதேசத்தில் பாடசாலைகளில் பாடவிதானம், கற்பித்தல் முறையியல், ஆசிரியர் பயிற்சிகள், ஆய்வும், வெளியீடும், கற்றல், கற்பித்தல் சாதனங்களைத் தயாரித்தல், தரவு நிரற் படுத்தல் என்பவற்றிற்குப் பொறுப்பாக இருக்கும்.

NIE பெரும்பாலானவற்றைச் சிங்களத்திலேயே செய்கின்றது. அதனை அவர்கள் தமிழில் மொழி பெயர்த்து எங்களு க்கு அனுப்பமாட்டார்கள். அவற்றை இங்கு நாங்கள் தான் தயாரிக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில், கல்வித் திணைக் களத்தில், மற்றும் பாடசாலைகளில் கடமை யாற்றும் அனுபவம் மிக்கவர்களைக் கொண்டே, நாங்கள் தயாரித்து வழங்க வேண்டும். NIE மிகவும் சிறந்த வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், அவை சிங்களத்திலேயே உள்ள தால், சிங்களமொழிப் பிள்ளைகள் பயன டையும் வகையில், சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை NIE யிடம் இருந்து நாங்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ள லாம். அவர்களுடன் இணைந்து செயற்பட லாம். தற்பொழுது NIE க்கான கிளைகள் வைக்கின்றார்கள். அவற்றை எங்களுடன் இணைந்து செயற்படுவதற்கு மட்டும் வையுங்கள். ஆனால், எங்களுடைய வேலை யைச் செய்வதற்காக இங்கு NIE தேவை யில்லை என்று நாங்கள் அறிவித்திருக் கின்றோம். ITME இற்கு ஒரு இயக்குனரைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். நிரந்தரமாக

நாங்கள் அவரை நியமிக்க வேண்டும். ஒழுங்கமைப்பு மற்றும் திட்டமிடலுக்கான ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். தற்பொழுது இடமில்லாததால், RIM அலுவலகத்திற்கு அருகே தற்காலிகமாக இடம் ஒதுக்கியுள்ளோம். அதனை முன்பு புலோலியில் வலயக்கல்வி பணிமனை இருந்த இடத்தில் நிரந்தரமாக அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

'Institute of Tamil medium Education' (ITME) என்ற நிறுவகத்தின் முதல் பணியாக சேவைக்காலப் பயற்சிகளை வழங்குவது, கற்றல் உபகரணங்களைத் தயாரித்தல், தரவு நிரற்படுத்தல் என்பனவே இருக்கும். பாடசாலை மட்டத்தில் இருந்து தரவுகளைச் சேகரித்து ஒழுங்கமைப்பதற்கு Education Management Information Sysytem- EMIS என்ற பிரிவையும் உருவாக்கியுள்ளோம்.


ITME சிறப்பாக இயங்குவதற்குப் போதியளவு தகைமை பெற்ற ஆளணிகள் தேவை. இதற்கு முதுமாணி, மற்றும் கலாநிதி (Phd.) பட்டம் பெற்றவர்களைத் தேடி எடுக்க வேண்டும். எங்களுடைய ஆளணியினருக்கு நாங்களே பயிற்சிகளையும் வழங்க வேண்டும். அவர்களைத் தெரிவு செய்து, சிங்கப்பூர், தென்னிந்தியா, பெங்களூர், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு அனுப்பி பயிற்சிகளை வழங்கிய பின்னர், அவர்கள் இங்கு வந்து வேலை செய்ய வேண்டும். சில வேளைகளில் நாங்கள் வெளியூரில் இருந்தும் தகுதியான ஆட்களை எடுக்க வேண்டி வரலாம். இதற்காக ஆளணி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (Staff Development programme) ஒன்றையும் தயாரித்து வைத்திருக்கின்றோம்.

அது ITMEக்கு மட்டுமல்ல மாகாணக் கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு, வலயங்களில் கல்வி நிர்வாகக் கடமை புரிந்து வருபவர்கள் அனைவருக்கும் ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்களின் தரங்களை உயர்த்தினால் தான் எங்களுடைய மாணவர்களின் கல்வித் தரத்தையும் உயர்த்தலாம். பல்கலைக்கழகங்களில் வழங்கப்படுகின்ற பட்டப்பின் படிப்பு, முதுமாணிப்பட்டம் போன்றவற்றை, சிறந்தவை என்று கூற மாட்டேன். அதேபோன்று வெளிவாரிப் பட்டப்படிப்புக்களும் ஒரு பிரச்சனையாக உள்ளன.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் விஞ்ஞானப் பயிற்சியை முடித்தவர் கள் வெளிவாரிகலைப் பட்டத்தை முடித்து விட்டு பாடசாலைகளில் போய், பட்டதாரிச் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பதை நிறுத்தி விடுகின்றார்கள். கல்வியியற் கல்லூரிகளும், க.பொ.த உயர்தரத்தில் சித்தியெய்தி, வேறு எங்கும் போக முடியாத நிலையில், ஆரம்பப் பயிற்சி ஆசிரியர்களாகப் பயிற்சி பெறுகின்றார்கள். இவை போன்ற குறைபாடுகளை ITME திருத்த வேண்டும்.

**கலாநிதி எதிர்வீரசிங்கம் அவர்கள் வழங்கியுள்ள காத்திரமான கருத்துக்கள் அடுத்த இதழிலும் தொடரும்.**

இதழிலும் தொடரும்.



-அருட்பணி தே.ரவிராஜ்

# இயற்கையோடு இணைந்து....

சுற்றுப்புறம் என்பதை சூழல் என்றும், சூழல் என்பதை இயற்கை உலகு என்றும் அழைக்கலாம். நான் இங்கு சொல்ல வரும் விடயம் சுற்றுப்புறவியல் / சூழலியல் (Ecology) ஆகும். சுற்றுப்புற வியல் அல்லது சூழலியல் என்பது உயிரினங்கள் இணைந்து வாழும் சுற்றுச் சூழல் அல்லது இயற்கை உலகு பற்றிய கல்வியாகும். இங்கு இயற்கை வளங்களான விலங்கியல் உலகு (Fauna), தாவரவியல் (Flora), நீர் வளம், நிலவளம், காற்று, கனிம வளங்கள் என்பன சுற்றுப்புறவியலின் பிரதான உள்ளடக்கங்கள் ஆகும். அதாவது உயிரினங்களுக்கும் அவற்றின் பௌதீக மண்டலத்திற்கும் இடையிலான இன்றியமையாத உறவுநிலையே பேசு பொருளாகும்.

உறவுநிலை என்று கூறும்பொழுது, பிரதானமாக நான் கூற விரும்புவது மனிதனுக்கும் அவனது உயிரியல் மண்டலத்திற்கும் இடையிலான உறவுநிலை பற்றியே. மனித உறவுகளுக்கு அப்பால் இன்று, மனிதன் இயற்கையுடனான அவனது உறவுநிலை பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இயற்கையின் சமநிலையில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களே சமகால மனிதனை சுற்றுப்புறவியல் பற்றி அவசர அவசரமாக சிந்திக்க நிர்ப்பந்தித்துள்ளது.

தொழில்நுட்பவியலுலக மனிதனின் சீற்றத்தை விட, இயற்கையின் சீற்றம் அதிகரித்துச் செல்கின்றதை நாம் வெளிப்படையாக உணர முடிகின்றது. சீரற்ற காலநிலை அதனால் ஏற்படும் கனமழை, வெள்ளப்பெருக்கு, அதிகூடிய வெப்பநிலை, அதனால் உருகிவரும் பனிமலைகள், அதன் விளைவாக உண்டாகும் கடலின் நீர்மட்டத்தின் அதிகரிப்பும்- இதனால் பல கிராமங்கள், நகரங்கள் ஏன்

சில நாடுகளே நீருக்குள் மூழ்கும் அபாய நிலை, உலகை உலுப்பிய சுனாமி என்று இயற்கையின் அழிவு பற்றி அடுக்கிக் கொண்டு செல்கையில் நெஞ்சம் ஒரு முறை பதறுகின்றது. இவற்றுக்கு காரணம் யார்..? நாங்கள் ஒவ்வொருவருமே,

ஒப்பீட்டளவில் இன்று உலகின் சனத் தொகை திடீரென அதிகரித்துள்ளது என்பது உண்மைதான். அதனால் மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்ய இயற்கை வளங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவையும் அவனுக்குள்ளது. எனவே, அவன் காடுகளை அழித்து குடியேறுகின் றான், பயிர் செய்கின்றான், அத்தோடு தொழிற்சாலைகளையும் அமைக்கின்றான். மனிதனுக்கு இவ்வாறான தேவைகள் இருப் பினும் இத்தேவை களைப் பூர்த்தி செய்யும் தருணத்தில் இயற்கை உலகு மட்டில் அவன் எவ்வளவு தூரம் பொறுப்புணர் வோடு செயற்படுகின்றான் என்பதும், அழிக் கப்படும் காடுகளை மற்றும் பயன்படுத் தப்படும் இயற்கை வளங்களை மீளமைப் பதற்கும் வரவிருக்கும் எதிர்கால சந்ததியி னருக்காக பாதுகாத்து வைப்பதற்கும் விளைகின்றான் என்பதும் பெரும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

இன்று மரங்கள் அழிக்கப்படும் வீதம், நடப்படும் வீதத்தோடு ஒப்பிடும் போது அதிகமாகும். காபனீரொட்சைட்டை உள்வாங்கும் மரங்கள் அருகிப் போகும் அதேவேளையில், அதிகூடிய வாகனங்கள், இயந்திரங்களின் பாவனை மற்றும் அதிகரித்து வரும் தொழிற்சாலைகள் காரணமாக காபனீரொட்சைட் வெளிவிடும் அளவு அதிகரித்துள்ளது. அதிகூடிய வெப்ப நிலை, அதனால் சீரற்ற காலநிலை என்பன வற்றிற்கு இத்தகைய நடவடிக்கைகளும் பிரதான காரணங்களாக அமைகின்றன. இன்று வீடுகளிலும், அலுவலகங்களிலும் ஏன் ஆலயங்களிலும் கூட குளிரூட்டிகள் பொருத்த எத்தனிக்கும் இந்த தலைமுறை மரங்கள் நடுவது பற்றி எள்ளளவும் எண்ணா மலிருப்பது வேதனைக்குரியது.

இங்கே எனது சூழலியல் விரிவுரை யாளர் சொன்ன அழகான கூற்று ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். "இயற்கையை நீ அன்பு செய்தால் இயற்கை உன்னை அன்பு செய்யும், மாறாக இயற்கைக்கு நீ தீங்கு செய்தால் பதிலுக்கு அதுவும் உனக் குத் தீங்கிழைக்க ஒருபோதும் தயக்கம் காட்டாது" இயற்கையின் சீற்றத்தால் மனிதன் சந்திக்கும் ஆபத்தானது பேராபத் தாக அமையும் என்பதில் எதுவித ஐயப் பாடும் இல்லை.

எமது பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் காலத்தின் தேவை கருதி சுற்றுப்புறவியல் பற்றிய 'Laudato Si' என்னும் சுற்றுமடலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இயற்கையின் அழகு பற்றியும் அதைப் பாதுகாக்க வேண்டிய தேவை பற்றியும் அவர் பேசுகின்ற கருத்துக்களை உலகத் தார் அனைவரும் இன, மத பேதமின்றி வாசித்தறிய வேண்டியது அவசியமாகும். அச்சுற்று மடலில் அவர் இயற்கை உலகை அதாவது, நாம் வாழும் சூழலை எமது இல்லம் (Our Home) என்று உருவகிப்பதும் இயற்கையுடனான உறவை ஒரு இல்ல உறவு போன்று அழகானதாகவும், ஆரோக் கியமானதாகவும் இருக்க வேண்டும் என்று ஒப்பிட்டுப் பேசுவதும் அழகான விடயங் களே. மேலும் அவர் இயற்கை உலகில் ஒவ்வொரு உயிரினமும் ஒன்றில் ஒன்று தங்கி வாழுகின்றன ( Interdependance) என்பதை ஒருபோதும் நாம் மறந்துவிடக் கூடாது என்பதை ஆணித்தரமாக வலியுறுத் துகின்றார்.

அண்மையில் சென்னையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் பற்றி கூறுகையில், பலரும் பலவிதமான விமர்சனங்களை முன்வைத்து விவாதிக்கின்றனர். சிலர் அதையொரு அரசியற்களமாக மாற்றி அரசியல் இலாபம் தேடுகின்றனர். ஆனால் இதுபற்றி பல சூழலியலாளர்களின் கருத்துக்களில் என்னை சிந்திக்கத் தூண்டிய ஒரு விடயத்தை முன்வைக்க விரும்புகின்றேன்.

அதாவது அதிகூடிய மழைவீழ்ச்சி ஏற்பட, காலநிலை காரணமாக அமைந்தாலும், வெள்ளம் தேங்குவதற்கு பிரதான காரணம் என்ன என்ற கேள்வி எழுகின்ற தருணத்தில் தமிழ் நாட்டில் காணப்பட்ட 36,000 ஏரிகளில் இன்று 6000 ஏரிகளைக் காணவில்லை எனும் திடுக்கிடும் தகவல் எல்லோரையும் சிந்திக்க வைத்தது.



இது மனிதன் எவ்வளவு சுயநலமாக சிந்திக்கவும், செயற்படவும் தொடங்கி விட்டான் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். 6000 ஏரிகளைத் தின்ற தமிழ்நாட்டு அரசு, வடிகால் அமைப்பை சீராக அமைக்கத் தவறியதும், மண்ணின் வளத்தைத் தின்றொழிக்கும் அசுரர்களாகிய பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களைக் கண்மூடித்தனமாக வீசி எறிந்ததும் சென்னை வெள்ளக் காட்டிற்கு வழிவகுத்த காரணிகளில் பிரதானவை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது சென்னைக்கு மட்டுமல்ல உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்குமான விழிப்புணர்வுச் செய்தியே.

அண்மையில் நான் ஓர் கருத்தமர்வுக்குச் சென்றிருந்தேன், அங்கே பல புத்திஜீவிகள் கூடியிருந்து தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டபோது, அங்கிருந்த ஓர் பிரபலமான எழுத்தாளர் எங்கள் தமிழர் தாயகத்தின் நிலவளம், நீர்வளம் பற்றிக் குறிப்பிடுகையில் சொன்ன ஓர் கருத்து என்னை ஆழமாகப் பாதித்தது, "கிழக்கு மாகாணத்தில் முன்பு காணப்பட்ட குளங்களில் பல இன்று மாயமாக மறைந்து விட்டன" என்று அவர் குறிப்பிட்டார். இவ்விடத்தில் யாழ். மாநக ராட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தில் காணப்பட்ட சில குளங்கள் நிரவப்பட்டு, அவற்றின் மீது இன்று உயரமான கட்டடங்கள் நிமிர்ந்து நிற்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இதை நான் இங்கே குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம். யாழ். நகரானது மக்கள் அதிகமாக வாழுகின்ற இடமும், அதிகமான கட்டடங்கள் அமைந்திருக்கும் நகர்புறமும் ஆகையால், நகரத்தின் சூழலின் வெப்ப நிலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் நிலக்கீழ் நீரைப் பாதுகாக்கும் நோக்குடனுமே ஆங்காங்கே சிறிய குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை யாழ். நகரின் பொக்கிஷங்கள் என்பது எம்மில் பலருக்குப் புரியவில்லை.

மேலும் அவர் கூறுகையில் "நாங்கள் சிட்டுக் குருவிகளை விற்று கோபுரங்களை வாங்கியவர்கள்" என்றும் குறிப்பிட்டார். அதாவது இன்று எம் வயல் வெளிகளிலும் ஏன் எங்கள் குடிமனைகள் மத்தியிலும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் தொலை பேசிக் கோபுரங்களைக் குறித்தே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொலைபேசிக் கோபுரங்களில் இருந்து எழும் அலை வரிசைகளின் தாக்கம் சிட்டுக் குருவிகள் போன்ற பல உயிரினங் களின் வாழ்வியல் சூழலில் மாற்றங்களை உண்டுபண்ணுகின்றன. அதனால் அவை இந்த அசாதாரண சூழ்நிலையில் வாழ முடியாமல் எங்கள் குடியிருப்புக்களை விட்டு அவை குடிபெயர்ந்திருப்பது குறிப்பிடத் தக்கது. சிலருடைய கருத்துப்படி அலை வரிசைகள் பறவைகளின் இனவிருத்தியைக கூட தடை செய்கின்றன என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

சிட்டுக்குருவிகள் இல்லாதுபோனால் நமக்கு என்ன நட்டம் என்று நம்மில் பலர் கேட்கலாம். சிட்டுக் குருவிகள் மட்டுமல்ல, நாம் வாழும் சூழலின் சமநிலையைப் பாதுகாக்க எம் கண்களுக்குத் தெரியாத பல நுண்ணுயிரங்கிகளையும் பாதுகாக்க வேண்டிய கடமை எமக்குள்ளது. இங்கே நம் திருத்தந்தை பிரான்சிஸ் தனது சுற்று மடலில் குறிப்பிட்ட விடயத்தை மீண்டும் ஒருமுறை குறிப்பிட விரும்புகின்றேன்.

"இயற்கை உலகில் ஒவ்வொரு உயிரினமும் ஒன்றில் ஒன்று தங்கி வாழு கின்றன. (Interdependence) என்பதை ஒரு போதும் நாம் மறந்துவிடக் கூடாது" சிட்டுக் குருவிகளின் சிறகடிப்பிலேயே பல தாவரங்களின் உயிர்கள் உற்பத்தியாகின் றன என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டும். அதாவது பல தாவரங்களின் மகரந்தச் சேர்க்கைக்கு சிட்டுக்குருவிகளின் பங்களிப்பு அளப் பெரியது.

பரிசுத்த பாப்பரசரின் கருத்துக்க ளோடு சேர்த்து இவ்விடத்தில் அன்று செவ்விந்திய தலைவரான சியாட்டில், செவ்விந்திய தேசத்தை அமெரிக்க குடியரசு விலைபேசிய போது, அந்நேரத்தில் அமெரிக்க குடியரசின் அதிபரான பிராங் கிளின் பியர்ஸ் என்பவருக்கு எழுதிய கடிதத்தை ஒரு கணம் நினைவுபடுத்துவது மிகவும் பொருத்தமானது.

"வெள்ளையர்களால் எங்கள் வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்ள முடியாது. பூமி மனிதனுக்கு உரிமையானது அல்ல: மனிதன் தான் பூமிக்கு உரிமையான வன். பூமிக்கு எது நேர்ந்தாலும் அது பூமி யின் பிள்ளைகளுக்கும் நேரிடும். எனவே வானத்தையோ, பூமியையோ விற்கவோ, வாங்கவோ எம்மால் எவ்வாறு இயலும்? அந்த எண்ணமே எங்களுக்கு புதிரானது.

விலங்குகள் இல்லாமல் மனிதன் எப்படி வாழ்வான்? எல்லா விலங்குகளும் இந்த பூமியில் இருந்து மறைந்து போய்விடு மானால் பிசாசுத் தனிமையில் மனிதன் இறந்து போய்விடுவான். விலங்குகளுக்கு நேர்வது நாளை மனிதனுக்கும் நேரிடும். எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவையே.

நீரின் முணுமுணுப்பு என் தந்தை யின் தந்தையினுடைய குரல், எங்கள் காலடியில் உள்ள நிலம் எம் மூதாதையரின் சாம்பல். இதை நீங்கள் உங்கள் பிள்ளை

களுக்கு கற்பிக்க வேண்டும். இந்தப் பூமி எங்களின் தாய் என நாங்கள் நம்புவதை உங்கள் குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுங்கள்.

நதிகள் எங்கள் சகோதரர்கள். அவர்கள் எங்கள் தாகத்தைத் தீர்க்கின்றார்கள், எங்கள் படகுகளைச் சுமக்கின்றார்கள், எங்கள் குழந்தைகளின் பசியாற்றுகின்றார்கள். நாங்கள் உங்களுக்கு எமது நிலத்தை விற்றால், நதிகள் எங்களுக்கும், உங்களுக்குமான சகோதரர்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்க வேண்டும். அதை உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் நீங்கள் எந்தவொரு சகோதரனிடமும் காட்டும் கருணையை நதிகளிடமும் காட்ட வேண்டும்.

வெள்ளை மனிதன் உருவாக்கிய நகரங்களில் அமைதியே இல்லை வசந்த காலத்து இலைகள் உதிர்வதைக் கேட்கவோ, பூச்சிகள் தங்கள் சிறகுகளை உரசிக் கொள்ளும் ஓசையை அறியவோ சாத்தியமில்லை. நகரங்களின் குழப்பமான ஓசைகள் செவியை அவமதிப்பதாகத் தோன்றுகின்றன.

“சிவப்பு மனிதனுக்கு காற்று மிகவும் மதிப்புடையது. ஏனென்றால் எல்லா உயிர்களும் பகிர்ந்து கொள்வது ஒரே சுவாசத்தைத் தான், விலங்குகளும் மரங்களும் ஒரே சுவாசத்தைத் தான் சுவாசிக்கின்றன. வெள்ளை மனிதன் தான் சுவாசிக்கும் காற்றை அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை....”

இவ்வாறு அன்று செவ்விந்தியத் தலைவர் சியாட்டில் இயற்கையை மதிக்க வெள்ளையர்களின் எதிர்கால தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுக்குமாறு வெள்ளையர்களுக்குக் கூறிய அறிவுரையை நாங்களும் எங்கள் எதிர்கால தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதனை இங்கே வலியுறுத்த விரும்புகின்றேன்.

எனவே, இயற்கையோடு இணைந்து வாழும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவோம். மரங்களை நடுவோம் மானிட உலகைக் காப்பாற்றுவோம்.


ஏரிகளை அமைத்து விரயமாகும் மழை நீரைச் சேகரித்து எங்கள் சூழலைப் பசுமையாக்குவோம். இயற்கை உரங்களை உபயோகிப்போம். ஆரோக்கியமான காய்கறிகளை எங்கள் சந்தைகளுக்கு அறிமுகம் செய்வோம். விக்கினமற்ற உணவுகளை அறிமுகம் செய்து ஆரோக்கியமான அடுத்த தலைமுறையொன்றைக் கட்டியெழுப்புவோம்.


பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையைக் கட்டுப்படுத்துவோம். பாவனை செய்த பொலித்தீன் பொருட்களை முறையாகச் சேகரித்து மீள்பாவனைக்கு வழி சமைப்போம். பொலித்தீனும், பிளாஸ்ரிக்கும் எம் நிலங்களுக்கு புற்றுநோய் போன்றவை என்பதை எம் நினைவில் கொள்வோம்.

ஆகவே பரிசுத்த தந்தையோடும் செவ்விந்திய தலைவர் சியாட்டிலோ இணைந்து கொள்வோம் இயற்கையை அன்பு செய்வோம். இயல்பு நிலைக்குத் திரும்புவோம்.

# ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்







- கணினி தட்டச்சு வேலைகள்
- ஒவ்செற் பிறிண்டிங்
- லெமினேற்றிங்
- புத்தகம் கட்டுதல்
- மற்றும் சகலவிதமான அச்சுவேலைகள்

## ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்


இல.63, B.A. தம்பி லேன், யாழ்ப்பாணம்.

021 491 2110, 077 532 4572


PAPER HOUSE
பாடசாலை ,அலுவலக,
அச்சக காகிதங்கள்,
அப்பியாசக் கொப்பிகள்,
எமது பொருட்கள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்
கொள்ளலாம்.
இல.300,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# மாணவர்களின் கல்வியில் பெற்றோரின் பங்கு

கல்வி முறைகளினுடைய வரலாற்றை நாம் நுனுக்கமாக நோக்கின் அவை காலத்துக்கு காலம் பல மாற்றங்கள் அடைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. மாணவர்கள் ஒரு சமூகத்தின்



உறுப்பினர்கள். அவர்கள் ஒரு சமூகத்தில் வாழ வேண்டியவர்கள். அதாவது வாழப் போகும் ஒரு சமூகத்தின் ஒழுக்கங்கள், நியமங்கள், விழுமியங்கள் என்பவற்றை நன்கு உள்வாங்காது போனால் அச்சமூகத்தில் ஒரு முறையான பயனுள்ள பிரவேசிக்கத்தக்க உறுப்பினராக எவரும் விளங்க முடியாது.

மாணவ சமூகம் சரியான ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாவிட்டால் அது நீடித்து நிலைக்க முடியாது. இவ்வாறு ஒழுங்கான மாணவ சமூகத்தைக் கட்டி எழுப்ப அடித்தளம் ஏற்படுத்துவதில் பாடசாலையின் பங்குடன் பெற்றோரின் பங்கும் முக்கியப் படுகின்றது.

மாணவர்கள் பாடசாலையில் கல்வி கற்கும் நேரத்திலும் பார்க்க, வீட்டில் அவர்கள் கல்விசார் நடவடிக்கைகளில் ஈடுபடும் நேரம் கூடுதலாகவே காணப்படுகின்றது. ஆகவே பெற்றோர்கள் மாணவர்களின் கல்வி சார் நடவடிக்கைகளை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. வீட்டில் கல்வி கற்கக்கூடிய சூழலை ஏற்படுத்துதல்.
2. பெற்றோர்கள் மாணவர்கள் உறவில் சுமுகமான முறையை வளர்த்தல்.
3. மாணவர்களின் சுய நம்பிக்கையை வளர்த்தல்.
4. கல்வி கற்றலில் ஆர்வத்தைத் தூண்டுதல்.

5. மாணவரின் நல்ல வேலைகளைப் பாராட்டுதல்

6. மாணவர்களின் துணிவாற்றலை ஊக்குவித்தல்

7. மாணவர்களின் சுய கற்றலை ஊக்கு வித்தல்.

8. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் எதிர் தாக்கத்தை ஏற்படுத்தும் விளைவுகளை விளக்குதல்.

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலாக தற்கால இயந்திர மயப்பட்ட வாழ்க்கை முறையில் மாணவர்களுடன் பெற்றோர்கள் கூடுதலான நேரத்தைச் செலவிடல் வேண்டும். உண்மையிலே தற்காலத்தில் பெற்றோர்கள் அனைவரும் தமது பிள்ளை களின் கல்வி பற்றியும் எதிர்காலம் பற்றியும் சிந்தித்து செயற்படுகின்றார்கள். மேல் நடுத்தர குடும்பங்களின் பெற்றோர்கள் மாத்திரமன்றி முன்னேறத் துடிக்கும் சாதா ரண தொழிலாளர் குடும்ப பெற்றோர்களும் கூட தமது பிள்ளைகள் நன்றாக படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்றே எண்ணுகிறார்கள். இது எமது சமூகத்தில் ஒரு ஆரோக்கியமான நிலையாகும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் கல்வியில் மிகவும் மந்த நிலையில் இருந்த மலையக பெருந்தோட்டப் பகுதி பெற்றோர்கள்கூட இப்போது கல்வி பற்றிக் சிந்திக்கின்றார்கள்.

இவர்களது விழிப்புணர்வினால் இன்று பல மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்த உயர்மட்ட இலக்குக ளையும் அறுவடையாக்கியுள்ளனர். அவர் கள் மத்தியில் பாடசாலை இடைவிலகலும், படிக்கும் வயதில் வேலைக்கு செல்லலும், தற்போதைய புள்ளிவிபரக் கணிப்பீட்டின் படி மிகவும் குறைவடைந்துள்ளது.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை கடந்த மூன்று தசாப்த யுத்தம் மாணவர் களின் கல்வி நடவடிக்கையைப் புரட்டிப் போட்டுவிட்டது. இன்றுகூட அதே நிலை தொடர்வதைக் காணக்கூடியதாகவே உள்ளது. வீடிழந்து வாழ்விழந்து இடம் பெயர்ந்து ஓடிய வாழ்க்கைக்கு மத்தியிலும் ஒரு சில மாணவர்கள் சாதனையாளர்களாக உயர் அடைவு மட்டத்தை எட்டியுள்ளனர்.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் முதலாவதும் முக்கியமானதுமான வழிகாட் டிகள் பெற்றோர்கள். மாணவர்களை நெறிப் படுத்துவதிலும் வழிப்படுத்துவதிலும் பெற்றோரின் பங்கு மகத்தானது. தமது பிள்ளைகளை வழிப்படுத்தி நெறிப்படுத் துவதில் இவர்கள் அயராது உழைக்கின் றனர். முன்பள்ளியும் பாடசாலையும் அடுத்த கட்ட நகர்வுகளாகும் இங்கு ஆசிரியரின் பங்கு பிரதானமாகின்றது.

**திருமதி . ச. முருகானந்தன்**
**(ஓய்வுநிலை ஆசிரியர்)**

கல்வியின் நோக்கம் மாணவர்களின் அறிவுதிறன், மனப்பாங்குகளை வளர்ப் பதும் அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதும் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுமாகும். எனினும் நவீன உலகின் கல்வி முறையில் முதல் மூன்று விடயங்களும் அடக்கி வாசிக்கப்பட்டு நான்காவது விடயமான வேலை வாய்ப்பைப் பெற்றோர்களும்

ஆசிரியர்களும் கல்வியின் இலக்காகக் கருதி கல்வியைப் பட்டத்துடனும், வேலை வாய்ப்புடனும் பொருத்தி பார்ப்பது இன்றைய வழமையாகி விட்டது.

இவர்களது வகிபாகத்தினால் இன்றைய மாணவர்களை நற்பிரஜையாக்கு வதிலும் அவர்களின் அறிவுத்திறன் மனப் பாங்குகளை வளர்ப்பதிலும் சோடை போகும் நிலை உருவாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

இதனால் எதிர்கால சந்ததியினரின் பண்பாற்றல் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. படித்தவர்கள் கூட இன்றும் மனித நேயமற்ற வர்களாக உருவாகியுள்ளமைக்கு இதுவே காரணமாகும். ஆட்சிப்பீடத்திலும் சரி அதிகாரிகள் மட்டத்திலும் சரி, ஏன் சாதாரண மக்களிடையேயும் இன்று மனிதாபிமானம், மனச்சாட்சி என்பன மறந்து போயுள்ளன.

கல்வியின் சறுக்கலாகவே இதனை நோக்க முடியும். இன்று பரவலாகி வரும் வன்முறை, போதைப்பொருள் பாவனை என்பவற்றிற்கும் இது துணை போகின்றது.

பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகள் எதிர்காலத்தல் மருத்துவரா கவோ, பொறியிலாளராகவோ கணக்களா ராகவோ சட்டத்தரணியாகவோ வர வேண்டும் என நினைக்கிறார்களே அன்றி, நற்பிரஜையாக வரவேண்டும் அல்லது அவர்கள் விரும்பிய வழியில் தமது கல்வியை முன்னெடுக்க வேண்டும் என்று நினைப்பதில்லை.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரசில் பரீட்சையில் தொடங்கும் பெற்றோரின் உந்துதல் பிள்ளைகள் மேல், பின்னர் சாதராணதரம், உயர்தரம் என பெற்றோ ரால் ஊட்டப்பட்டு உரையாடியவாறே சிந்தனைகளுக்குள் முடங்கி விடுகிறார்கள்

பல பெற்றோர்கள் பிள்ளைகளின் விருப்பத்தைப் பற்றியோ, அவர்களுக்கு இலகு வான துறை பற்றியோ சிந்திக்காது தமது விருப்பங்களையே பிள்ளைகள் மீது திணிக்கிறார்கள்.

பிள்ளைகள் தமது விருப்பத்திற்கு மாறாக பெற்றோரின் விருப்பங்களை வேண்டா வெறுப்புடன் ஆர்வமில்லாமல் பின்பற்றுகின்ற நிலை காணப்படுகின்றது. இதனால் சோர்வான மனப்பான்மையுடன் அவர்களது செயற்பாடும் குன்றி முன்னேற் றம் அடையும் நிலையில் இருந்து சறுக்கி விடுகிறார்கள்.

தூரநோக்கு இலட்சியம் இலக்கு யாவும் படிப்படியாக, இயல்பாக ஏற்படும் போதே மாணவன் வெற்றியடைகிறான். இதனால் திட்டவட்டமான தெளிவான எல்லைகளை நிர்ணயித்து பயணித்தாலே கல்வியில் வெற்றியடையலாம்.

எனவே பெற்றோர்களும் சரி, ஆசிரியர் களும் சரி பிள்ளைகள் மீது கல்வியைத் திணிக்காது, கற்றிட அவர்களுக்குச் சரியான முறையில் வழிகாட்டி நல்வழிப்படுத்த வேண்டும். அப்போதுதான் கல்வியறிவுமிக்க ஒளிமயமான ஒரு சமூதாயத்தை நாம் காண முடியும்.

# முண்டப்பனைகளின் தேசம்

எம் மண்ணின் அடையாளம்
தொலைக்கப்படவில்லை
அழிக்கப்பட்டிருந்தது.

ஒற்றைக்காலில் நின்று எம்
வீரத்தை, பண்பாட்டை,
இருப்பை
உலகுக்கறிவித்த
அந்தக் கற்பகத்தருக்கள்.

என் வீட்டிற்கும்
கூரைக்கும்,
மதிலுக்கும், வேலிக்கும்,
சிலநேரம் என் மானம்
காக்க மறைவுக்கும்
ஆதரவு நல்கிய
பெருந்தகைகள் உன்
பரம்பரைகள்
நேற்றைய என் காதலை
உலகறியச் செய்து
தங்கள் கருவுடலில் என் பொறிப்புக்களை
வெளிப்படுத்திய கரும்பலகைகள் நீங்கள்.
எத்தனை முறை என்னவளின் பெயரை உன்
அனுமதியின்றி...
என் பெயரோடு எழுதியிருப்பேன் உன்னில்..

என் காதலுக்கும்,
வீட்டுக்கும், முகவரியாய்,
அமைந்தாய் நீ
என் பசிக்கு பால் மது தந்து
பழம் தந்து புசிக்கச் செய்வித்த
அட்சய பாத்திரமும் நீதானே
நுங்காய் கிழங்காய் ஒடியலாய் கூழாய்
பணியாரமாய்..
பதுங்கி உயிர்காக்கும் பங்கராயும்
எங்கள் அடுதீக்கும் சுடு தீக்கும் அச்சாரமாய்
எத்தனை அவதாரங்கள் எடுத்தாய் நீ!

இன்று நான் வீதியிலிறங்கி
உன்னை ஸ்பரிசிக்க முடியாது
ஆயுத முனைகளில்
உன் எல்லைப் பாதுகாப்பு
நெஞ்சம் வெடித்தது
நேர்மை துடித்தது
உன் அண்டை வர முடியவில்லை
என்னால் மறக்க முடியவில்லை.
உலகிற்கு எங்கள் அடையாளமாய்
எமது இருப்புக்கு மட்டுமல்ல
எங்கள் இடப் பெயர்வுக்கும்

உனைக்கடந்து வாகனத்தில்
நான் பயணிக்கையில்
ஒரு நிமிடம் நீல வானில்
எட்டியுயர்ந்து
முட்ட நின்ற உன்
தலையையும்
என் வீட்டுக் கலங்கரை விளக்கமாய் நின்ற
உன் கரங்களையும் காணாது
திகைத்து.. விறைத்தே போனேன்.

நகர முடியாமல்
நான் பட்ட துன்பம்
உயிருக்கான நகர்வை
மட்டுமே செய்தேன்.
என் தேசத்தின் அடையாளம்
அழிக்கப்பட்டிருந்தது
அறிந்தோ அறியாமலோ
என் தேசம்
முண்டப்பனைகளின் தேசமாக
மாறிப்போயிருந்தது

முண்டப் பனைகளே!!!!!!
உங்கள் தலைகளோடு
வாய்களும் கொய்யப்பட
நிலம் பிழந்து கல் பிழந்து
விருட்சமாய் வேரூன்றிய
உனதிருப்பை
வன் முறையால் என்ன செய்ய முடியும்?
உன் ஒற்றைக் கால் தவங்கள் நிறைவேறும்

நீ தலை கொய்யப்படலாம்
உன் நினைவுகளும்
உன் நிழல் சுமந்த கணங்களும்
உன்னை எம் நினைவிலிருந்து அழிக்காது.
நீ சாகலாம்
உன் வரலாறு சாகாது!

ரோ.றொஷான்

# மாறிவரும் தமிழர் பண்பாடு



ஈழத் தமிழரது வாழ்க்கையில் பண்பாட்டு மாற்றங்கள் பல தடவைகள் நிகழ்ந்துள்ளன. இவற்றுள் காலனித்துவ ஆட்சியின்போது ஏற்பட்ட மாற்றங்கள் கணிசமானவை. சாதகமானவையும் இவற்றிலுள்ளன. பாதகமானவையுமுள்ளன. இவற்றைவிட எண்பதுகள் தொடக்கம் தமிழர்களது புலப்பெயர்வினால் இடம்பெற்றுவந்த, இடம்பெற்று வருகின்ற மாற்றங்கள் பாரதூரமானவை. வெளியில் பரவலாக அறியப் படாதவை. அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடியவை.

மேற்கூறியவற்றுள் முதன்மையானவை பெண்களது வாழ்க்கையில் ஏற்படும் பாரதூரமான மாற்றங்களாகும். இத்தகைய மாற்றங்களின் ஆரம்பம் நெடுவழிப் பயணங்களின் போதுதான் ஏற்பட ஆரம்பிக்கின்றது. ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல நேரிடுகின்றபோது அத்தகைய பயணங்கள் நீண்ட பயணங்களாகவுள்ளன. இடைவழிகளில் பல இடங்களில் தங்க வேண்டியேற்படும். இவ்வாறான தங்குமிடங்களுள் சில மிருகங்கள் அடைக்கப்படும் கொட்டில்களாகக்கூட இருப்பதுண்டு. ரஷ்யா இத்தகைய இடங்களுள் முக்கியமானதொன்று.

இங்குள்ள உஸ்பெகிஸ்தானிலுள்ள பன்றிக் கொட்டிலில் ஏற்பட்ட அனுபவமொன்று பின்வருமாறு அமைந்துள்ளது. "பெண்களைக் குடிக்கச் சொன்னார்கள். அவர்களோடு செக்ஸ் சேட்டை செய்தார்கள். நாங்கள் பெண்களை எப்படிப் பாதுகாப்பது என்று சிந்திக்க முதல் எங்களுக்குப் பொல்லுகளால் அடித்தார்கள். வொட்கா மயக்கத்தில் இருந்த எங்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. பெண் களை அந்த இருவரும் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்கள்.

தடுப்பதற்கு எங்களுக்குத் திராணியில்லை. பக்கத்தில் இருந்த ஒரு வீட்டில் வைத்து அவர்களை வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள்.

பேராசிரியர்.ச.யோகராசா,
கிழக்கு பல்கலைக் கழகம்,

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் (திருமணம் முடிக்கவென வந்தவர்) அழுதழுது இருந்து விட்டு ஒருவர் தன்னிடமிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியை உடைத்து, தனது இரண்டு கைகளின் நரம்புகளையும் அறுத்தார். இரத்தம் ஒழுகிய போதுதான் எங்களுக்கு விபரீதம் புரிந்தது. இரத்தம் பெருகப் பெருக மயக்கமாகி விட்டார். கொஞ்ச நேரத்தில் அவரின் உயிர் பிரிந்தது. எனது கண்களுக்கு முன்னால் தற்கொலை செய்துகொண்ட அவரைப் பார்த்து நானும் மற்றவர்களும் பிரமை பிடித்து நின்றோம். பன்றிகளைத்

தவிர எங்களது அழுகுரல்கள் எவருக்கும் கேட்கவில்லை.

மனம் வெதும்பினோம். பணம் கொடுத்துவரும் அவலத்தை நாம் நேரடியாகக் கண்டு துடித்துப் போனோம். உதவிக்கு யாருமில்லாத அந்தப் பனிக் காட்டில் அப் பெண்ணின் பிரேரத்தைக் கொண்டு போய் வைத்தோம். கொஞ்ச நேரத்தில் அந்தப் பிரேரத்தைப் பனி மூடிக் கொண்டது. அடையாளமே தெரியவில்லை எங்களை அவர்கள் இருவரும் தொடர்ந்து போதையில் வைத்திருந்தார்கள்."

அந்நியர்கள் மட்டுமன்றி தமிழர்களான ஏஜென்சிமார்கூட பெண்களுக்கு இத்தகைய தொந்தரவுகள் பலவற்றை ஏற்படுத்தத் தயங்குவதில்லை. மிரட்டிப் பணம் பறித்தல் இவற்றுள் ஒன்று. பணங் கட்ட முடியாத நிலையில் ஏற்படும் விபரீதங்களிலொன்று சிறுகதையொன்றில் பதிவாகியுள்ளது.

"ஆர்?"

"அது நான் சிவா கதைக்கிறன், இஞ்சை மொஸ்கோவில் நிற்கிறன்"

"என்ன புதினம்?"

"கேட்ட காசு தராததாலை புனிதாவை கோட்டலிலை விட்டிட்டு வந்த நாங்களெல்லே.

அவளுக்கென்ன? றெட்லைட் ஏரியாவில கொண்டுபோய் விட்டிட்டாங்கள்?

அவள் செத்துப் போனாள். சவத்தை குறுக்கு றோட்டில கிடந்து பொலிஸ் கண்டு பிடிச்சிருக்கு."

கொன்ரைனர் (கொள்கலன்கள்) பயணங்கள் பெண்களுக்கு தரும் துயரங்கள் தாங்க முடியாதவை. பின்வருவது இவற்றிலொன்று.

"ஏறியவுடன் ஒரு கொன்ரைனர் கூட்டாளி மெதுவாக காதோரம் வந்து எல்லோருக்கும் சொன்னார். "இஞ்சை பேசக் கூடாது, மலம் சலம் கழிக்கக் கூடாது.... "பொலிஸ் நாய் மோப்பம் பிடித்துவிடும், ஆகவே கவனம்"

அஸ்மியா என்னட்டை வந்தாள். அவள் எனது சொந்தக்காரப் பெண் என்று கொன்ரைனர் கூட்டாளிக்குச் சொல்லியிருந்தேன். அல்லது அதுக்கு வேற சண்டை பிடிப்பார்கள். யார் அவளுக்கு பக்கத்தில இருக்கிறது என்று.

"அண்ணா.... தயங்கினாள்

என்ன?

எனக்கு.... எனக்கு.....

என்ன உனக்கு?

வந்திட்டுது..

சரி பரவாயில்லை. கொஞ்சமிரு. அங்காலை ஒரு இடம் இருக்கு."

அதிலை போய் எனது சேட்டைக் கழட்டி கிழித்துக் கொடுத்தேன். இந்த நேரத்தில் அவள் மிகவும் கஷ்டப்பட்டாள். அடிவயிற்று வலியால் துடித்தாள். சேட்டைக் கழட்டிக் கிழித்துக் கொடுத்த போது அவள் விம்மி விம்மி அழுதாள்.

இந்தியாவில் டெல்லியிலுள்ள ஹோட்டல் ஒன்றிலே தங்கவைக்கப்பட்ட பெண்கள் -இருவருக்கு ஏற்பட்ட அனுபவங்களிலொன்று, இது

"..........வெளியே யாரோ கதவை அண்மித்து வரும் சத்தம் கேட்கின்றது. மிக மெதுவாக அவர்களின் அறைக்கதவு தட்டப்படுகின்றது. இருவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ள மட்டும் முடிகின்றது.

கதவை யார் தட்டினாலும் திறக்க வேண்டாம் என்று ஏஜென்சி (முகவர்) வேறு சொல்லியிருக்கிறார். இவர்களின் ரிக்கற் விடயம் சரிவந்தால் இரவு வந்து சந்திப்பதாக அவர் சொல்லிவிட்டிருந்தார். அவராயிருக் குமோ?

"ஏஜென்சி" என்று லதாவைப் பார்த்து வாயசைத்தாள் நளினி

"ஊகூம் ஊகூம் பெடியள்" என்று மெதுவாக மறுதலித்தாள் லதா

"......................."

நீண்ட நேர இடைவெளிக்குப் பின் மீண்டும் கதவு தட்டப்படுகின்றது.

"யார்?" எனக் கேட்டாள் நளினி எதுவித பதிலுமில்லை. ஆனால் தொடர்ந்து தட்டப்பட்டது கதவு.

ஒருவித துணிவை வரவழைத்துக் கொண்டு கதவைத் திறந்தாள் நளினி.

அதே பஞ்சாபிக்காரன் அதிகாரத் துடன் அறைக் கதவை உள்ளே பூட்டினான்.

தொல்லை இரவுகள் மீண்டும் தொடர்கின்றன. இப்போது இவனிடமிருந்து தப்பிக்க வேண்டும். இன்னும் எத்தனை எத்தனை இரவுகள் இப்படித் தப்பித்துக் கொள்ள இயலும்?

தமிழர்கள் அதிகமாகவுள்ள சிங்கப்பூரிலே தங்கிச் செல்கின்ற பெண் களுக்கு ஏற்படும் தொல்லைகள் ஏஜென்சி களால் மட்டுமன்றி உறவினர்களாற்கூட நிகழ்வதுண்டு.

சிங்கப்பூரில் தனது உறவினரான ஏஜென்டினால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட ஒரு பெண் சேர வேண்டிய நாட்டிற்குச் சென்றபின், அவனைப் பழி வாங்குவதற்காக அவனது தம்பியைக் காதலிப்பது போன்று நடிக்கின்றாள். அவன் நல்லவனென்று அறிந்துகொண்ட பின்னர், திருமணஞ் செய்து குடும்ப வாழ்வில் ஈடுபட்ட வேளையில் ஒரு நாள், ஏஜென்சி தம்பியைத் தேடி வந்தபின் அவளைப் பயமுறுத்தி முன்னர் போன்று செயற்படத் தூண்டுகின்றான். அவளோ ஆவேசமாகச் சீறுகின்றாள். பின்வருமாறு கூறுகின்றாள்.


"அப்ப உன்னட்டை அம்பிட்டு பயத்திலை பலியாகிப் போனது உண்மை தான். ஆனால் நீ இப்ப பாக்கிற ஆர்த்தி வேற. நான் எதுக்கும் துணிஞ்சிட்டன்... ஆனால் ஒன்றுமட்டும் சொல்லுறன். ஏஜென்சி ஆக்களைக் கூட்டிக் கொண்டு வாறன் எண்டு இனிமேலும் சிங்கப்பூர் பக்கம் நீ போனால் நான் சும்மா இருக்கமாட்டன். உன்னைப் பற்றின முழுவிபரமும் எழுதி என்ர பிரண்ட் கிட்ட குடுத்திருக்கிறன். எனக்கு ஏதாவது நடந்தால் அந்த லெட்டர் உடனடியாக பொலீஸ் கிட்ட போகும்."

குறிப்பிட்ட எதிர்ப்பு அந்த வெளிநாட்டின் தமிழ்ச் சமூகச் சூழல் என்ற படியால் நடந்திருக்க வேண்டும். ஆயினும் ஆபூர்வமாகவே அத்தகைய வாய்ப்புக் கிட்டுமென்பதில் ஐயமில்லை.

மேற்கூறியவாறு புகலிடம் நோக் கிய நெடுவழிப் பயணங்களில் இடைவழி களில் பெண்களுக்கு நிகழ்கின்ற அவலங் கள் யாவும் வெளித் தெரியாதவை. அதிர்ச்சி மேல் அதிர்ச்சி தருபவை. எனவேதான் இது பற்றி அண்மையில் மறைந்த எழுத்தாளர் கி.பி.அரவிந்தன் ஒரு தடவை இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"இந்தப் பயணங்களின் இடை வெளியில்தான் நமது சமூகத்தின் விழுமியங் கள், பெறுமானங்கள் ஏன் பௌத்திரங்கள் எல்லாமே உடைந்து நொறுங்கிப் போகின்றன.

# நேரம் நல்ல நேரம்



திருமதி .ஜனதா ஜோர்ஜ்
(ஓய்வுநிலை ஆசிரியர்)

'சுப நேரம்' என்ற ஒன்றில் அதீத நம்பிக்கை உள்ள ஒருவர் ஒரு வேலையைச் செய்வதாக இருந்தால், முதலில் நல்ல நேரம் எப்பொழுது வருகின்றது என பஞ்சாங்க நாட்காட்டியைப் பார்த்துக் கொள்வார். பலர் இந்த நல்ல நேரம் பற்றி மனப் பாடமே செய்து வைத்திருப்பர். ஆனால் நமக்கு கிடைக்கும் நன்மைகள் யாவும் நல்ல நேரத்திலும், தீயவை யாவும் கெட்ட நேரத்திலுமா நடைபெறுகின்றன?

நாம் எதிர்பார்க்கும் குறித்த நல்ல செய்தி இன்றைய நாளிலும் வரலாம்; மறுநாளிலும் வரலாம்; அல்லது பல மாதங்கள் கழிந்தும் கூட வரலாம். ஒரு நாளில் நல்ல நேரம் என நாட்காட்டியில் குறிக்கப் பட்ட நேரத்தில் ஒருவருக்கு நல்லதும் அதே வேளை மற்றொருவருக்கு தீயதும் நிகழ்ந்து விடுகின்றதே. இது எப்படி?

தொழில் வாய்ப்புக் கிடைத்திருக்கும் செய்தி, நல்ல வியாபாரம் நடந்து அதிக இலாபம் கிடைத்திருக்கும் செய்தி, பதவி உயர்வு, சம்பள உயர்வு, நல்ல பரீட்சை முடிவு இவை போன்றவை எல்லாம் பலருக்கும் கிடைக்கப்பெற்ற நேரங்களில் அவர்கள் "நமக்கு நல்ல நேரம் போலிருக்கு" என்று சொல்லிக் கொள்வார்கள். அதே வேளை தீயது நடந்தால் "இப்பொழுது நேரம் சரியில்லைப் போலும்" என்று ஆறுதலடைவதையும் பார்த்திருக்கின்றோம். ஏன் நாமே இத்தகைய ஒரு நிலைக்கு உட்பட்டிருக்கலாம். பரீட்சை முடிவொன்றை எதிர்பார்த்திருக்கும் ஒருவர், தான் நினைத்திருக்கும் நல்ல நாளில் அது வெளிவர வேண்டும். அந்த நாளில் வந்தால் முடிவு நல்லதாக அமையும் என எதிர்பார்த்தால் அது முடியுமா? அவர் பரீட்சையில் காட்டிய திறமையைப் பொறுத்தே முடிவு முன்ன

தாகவே தீர்மானிக்கப்பட்டிருக்கும். மேலும் பரீட்சை முடிவுகள் ஒரு நிர்வாக அலகின் திட்டமிடப்பட்ட தொழிற்பாட்டுத் திட்டத் திற்கு அமைய எந்த வேளையிலும் வெளியி டப்படலாம்.

நல்ல நேரங்கள் பொதுவாகப் பார்க் கப்படுவதற்கான காரணங்கள் பலவாக உள்ளன. முக்கிய காரியங்கள் தொடர்பில் திட்டங்களை வகுப்பதற்கும், அவற்றை நெறிப்படுத்துவதற்கும் சில நாட்கள் தேவைப்படுகின்றன. எனவே அந்த நாட் களில் அக்காரியங்கள் தொடர்பில் சம்பந் தப்பட்டவர்கள் ஒன்றுகூடிப் பேசுவதற்கும், மனதளவில் நல்ல நம்பிக்கையை ஊட்டு வதற்கும் வசதியாகவே குறித்த சில நாட்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

பெரும்பாலும் வேலை நாட்கள் தவிர்ந்த ஏனைய விடுமுறை நாட்களில் (சனி, ஞாயிறு, பூரணை தினம்) கல்வி, கல்விசாரா கருத்தமர்வுகள், கலைவிழாக் கள், விளையாட்டுப் போட்டிகள், வேலைத் திட்ட செயற்பாடுகள் சார்பான ஒன்றுகூடல் கள், நூல் வெளியீடு, அறிமுக விழாக்கள், கௌரவிப்பு பட்டமளிப்பு நிகழ்வுகள் மற்றும் மங்கள நிகழ்வுகள் உள்ளிட்ட இன்னோ ரன்ன நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இவை குறித்த தினங்களில் நடைபெறுவதற்கு அவ்விழாக்களுக்கென அழைக்கப்பட்ட அனைவரதும் பிரசன்னமே முக்கிய காரணமாகும்.

குறித்த நிகழ்வுகளில் அனைவரும் பங்குபற்றுவதன் மூலம் பலரது கருத்துக் களும் உள்வாங்கப்பட்டு பரஸ்பரம், கருத் துப் பரிமாற்றம் நிகழ்வதோடு, விடயம் தொடர்பான நல்ல தீர்மானங்கள் எடுக்கப் பட்டு, அவற்றினூடாகப் பலரும் பயனடை வர். மேலும் போட்டி நிகழ்வுகளாயின் அனைவரும் தமது திறன்களை வெளிப் படுத்துவதற்கும், மங்கள நிகழ்வுகளாயின் அனைவரதும் வாழ்த்துக்கள் கிடைப்பதற் கும் அனைவரது வருகையும் அவசிய மாகின்றது.

ஆகவே இந்த சந்தர்ப்பங்களுக்கு "நல்ல நேரம்" என்ற பதத்தை விட "பொருத் தமான நேரம்" அல்லது "பொருத்தமான காலம்" என்று கூறுவதே சாலப் பொருத்த மானதாகும்.

"பருவத்தே பயிர் செய்", "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்"
என்ற சான்றோர் மொழிகள் நல்ல நேரம் கருதி அமைந்தவையல்ல. மாறாக பொருத்தமான கால நேரம் கருதியே அமைந்தவையாகும்.

நம் முன்னோர்கள், குறிப்பாக விவசா யத்தை ஜீவனோபாயமாகக் கொண்டவர்கள். பயிர்ச் செய்கையில் விதை விதைத்தல் முதல் அறுவடை செய்தல் வரையான செயற்பாடுகளை வானிலை, காலநிலை, பருவகாலம் என்பவற்றுக்கு ஏற்பவே திட்ட மிட்டு செய்து வருகின்றனர். தற்காலத்திலும் கூட சில காலங்களில் சில பயிர்களை சுபநேரம் பார்த்து விதைத்தாலும் பொருத்த மான காலம் அல்லாது அவை பயன்தர மாட்டா. அவை முளையிலே கூட கருகி விடுவதுமுண்டு. இதனையே ஔவையும் தனது மூதுரையில்

"அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா.... தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்களெல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா"

மூதுரை :- 05

என்று கூறியுள்ளார். இங்கு ஒரு நற்செயல் நடைபெறுவதற்கு நல்ல நேரமன்றி பொருத்தமான காலமே ஏற்றது எனக் குறிப்பிட்டுள்ளதைத் தெளியலாம்.

சில கள விளையாட்டுக்கள் (சர்வதேச விளையாட்டுக்கள் உட்பட) நடைபெறும் தினங்கள் காலநிலை, பருவ மாற்றங்களுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்றன. அதிக மழைவீழ்ச்சி, அதீத பனிப்பொழிவுகள் கள விளையாட்டுக்கள் நடைபெறுவதற்குப் பொருத்தமற்றவை. பருவம் தப்பிய இத்தகைய சில இயற்கை நிகழ்வுகளால் சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள் பாதிக்கப்பட்டு வரும் வரலாறுகளும் உண்டு. இவை சுமுகமாக நடந்தேறுவதற்கு சுபநேரங்களன்றி பொருத்தமான கால நேரங்களே சாதகமானவை.

உலகப் பொதுமறையான திருக்குறளில் காலத்தின் பொருத்தப்பாட்டை காட்டுவதற்கு திருவள்ளுவர் அரசியல் பகுதியில் காலமறிதல் என்ற ஒரு அதிகாரத்தையே வைப்புச் செய்துள்ளதை அவதானிக்கலாம். பத்துக் குறள்களாலும் ஒரு காரியம் நன்முறையில் நிறைவேற பொருத்தமான காலமே சிறந்ததென அவர் வலியுறுத்துகின்றார்.

"பருவத் தோடொத்த ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு". குறள் - 482

"காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர். குறள் - 485

இவ்விரண்டு குறள்களும் அரசர் பகையரசருடன் படையெடுத்து வெற்றி பெறுவதற்குப் பொருத்தமான காலநேரத்தைப் பயன்படுத்த வேண்டுமென சிறப்பாக வலியுறுத்துகின்றனவாயினும் மக்கள் அனைவருக்கும் ஏற்றதாகவே உள்ளன. மேலும் புறநானூற்றுப் புலவர் ஒருவர் "காலனும் காலம் பார்க்கும்" என்று பாடியுள்ளமையும் நோக்கற்பாலது.

1812 இல் நெப்போலியன் பொனபாட் சோவியத்ருஷியாவுடன் போர் தொடுத்த வேளை, அதீத பனிப்பொழிவின் காரணமாக 20 நாட்களில் முடிய வேண்டிய போர் மேலும் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்றும் இறுதியில் தோல்வியில் முடிந்ததோடு, 2 இலட்சம் படையினர் குளிரால் உயிரிழந்தனர் என்பதும் வரலாறு.

ஒருவர் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்காக சுபநேரம் பார்த்து வீட்டிலிருந்து புறப்படுகின்றார். வீட்டு வாயிலில் பூனை ஒன்று குறுக்கே (தன் தேவை கருதி) சென்றது. இதனை சகுனப் பிழையாகக் கருதிய அவர், சற்று நேரம் வீட்டில் தாமதித்து, பின்னர் புறப்பட்டு பேருந்து நிலையம் சென்றவேளை, அவர் செல்ல வேண்டிய பேருந்து புறப்பட்டுச் சென்று விட்டது. இதனால் மேலும் தாமதம் ஏற்பட்டு வேறு வாகனம் பிடித்து உரிய இடத்திற்குச் சென்றவேளை (தாமதமாக) அங்கே நேர்முகப் பரீட்சை முடிந்து அனைவரும் புறப்பட்டுப் போய்விட்டனர்.

இதனையேதான் "ஐயர் வரும் வரையும் அமாவாசை பொறுக்குமா?" என எம் முன்னோர்கள் பொன்மொழியாகக் கூறி வைத்தனர். அவர் நல்ல நேரம் பாராது முன்னதாகவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் இவ்வாறு தன் எதிர்கால நல்வாழ்வுக்கான ஒரு தொழில் வாய்ப்பை இழந்திருக்க முடியாதல்லவா?

உலகம் முழுவதும் ஒருநாள் 24 மணி நேரம் கொண்டதாகவும், கிறீன்விச் நெடுங் கோட்டை ($0^{0}$) மையமாகக் கொண்டு கிழக்கே ஒவ்வொரு பாகைக்கும் நேரம் 4 நிமிடங்கள் அதிகரித்தும், மேற்கில் 4 நிமிடங்கள் குறைந்தும் செல்வதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இந்த நியதிப்படி கிழக்கே இலங்கையில் ஒரு நாள் விடிந்து, மனிதன் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்க, மேற்கே அமெரிக்காவில் முதல்நாள் இரவில் மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றான்.

அங்கே உறங்கிக் கொண்டிருப்பவனுக்கும், இங்கே இயங்கிக் கொண்டிருப்பவனுக்கும் ஒரே நேரத்தில் நல்லதும் நடக்கலாம், கெட்டதும் நடக்கலாம். இதில் யாருக்கு எது நல்ல நேரம் என்று எப்படிக் கணிப்பது?

பஞ்சாங்க நாட்காட்டியின் படி ஒரு நாளில் 10 - 20 வீதம் தான் சுபநேரம் உள்ளதாயின், அந்த நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் எமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்களையெல்லாம் நாம் தட்டிக் கழிக்க நேரிடும். இது நமது முன்னேற்றத்திற்குத் தடைக் கற்களாக அமையும்.

இந்த பூமியில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் ஒருநாளில் மேற்குறித்த 24 மணி நேரங்கள் தான் இயற்கையின் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

உலகில் பலர் நன்முறையில், இந்த நேரத்தை முகாமை செய்து, பயன்படுத்தி வியக்கத்தக்க பல சாதனைகளைப் புரிந்துள்ளனர். தமது அடுத்த சந்ததியினருக்கும் அச்சாதனைகளின் அரிய கண்டுபிடிப்புக்களைத் தந்து சென்றுள்ளனர். இவர்களெல்லோரும் எல்லாவற்றுக்கும் நல்ல நேரம், சகுனப் பிழை எனப் பார்த்து வாழாவிருந்திருந்தால் இன்று நாமெல்லோரும் கற்கால யுகத்தவர் போலவே வாழ்ந்து கொண்டிருப்போம். நவீன யுகம் எமக்கு மிக எட்டாத தொலைவில் இருந்திருக்கும்.


ஆதலால் நாம் அனைவரும் எமக்குக் கிடைத்துள்ள இந்த அரிய 24 மணி நேரத்தை நேரமுகாமைத்துவத்தைக் கடைப்பிடித்து பயன்படுத்தின் கழிந்து போகும் ஒவ்வொரு பொழுதும் எமக்கு பொன்னான நல்ல நேரங்களாகவே அமைந்துவிடும். இயன்றளவு முயன்று நல்லதையே செய்வோம்: காரியங்கள் கைக்கூடி வரும்போதெல்லாம் அவை நல்ல நேரங்கள் என்று எண்ணுவோம். நல்ல நேரத்தை நாடி, நாம் ஓடுவதை நிறுத்தி. விடாமுயற்சியுடன் நல்ல நோக்கில் செயற்படின் நல்ல நேரம் எம்மிடம் தானாகவே வந்து சேரும்.

"நேரங்களைக் கடந்து நாம் முன்னேறுவோம்
நேரங்கள் வீணே எம்மைக் கடந்து செல்ல இடமளியோம்"

"நேரத்தை முந்துபவர்கள் வெற்றியாளர்கள் ஆகின்றார்கள்
நேரத்தை முந்த விடுபவர்கள் பல சந்தர்ப்பங்களில் வெற்றியை இழந்து விடுகின்றார்கள்".

எனவே நாம் "கடந்த காலங்களில் இருந்து பாடம் கற்று, நிகழ்காலத்தைச் செப்பம் செய்து கொண்டால், எதிர்காலம் எமக்கு வசந்தங்களாக அமையும்"என்பதில் ஐயமில்லை.

# முரண்பாடுகள்



-நெடுந்தீவு மகேஷ்

அந்த மேலதிகாரிகளின் போட்டிக்குள் சிக்குண்டு அல்லலுற்ற முருகையாக்கிளாக்கர் இரண்டு தோணிகளில் கால் வைத்த கதையாக விழி பிதுங்கி நின்றிருந்தார். இரண்டு முதலாளிகளின் கீழ் வேலை செய்வதில் உள்ள சங்கடங்கள் அவரைத் திக்குமுக்காடச் செய்தன. இந்தச் சிரமத்துக்குள் முருகையாக் கிளாக்கர் சிக்குண்டு வேதனைப்பட்டார்.

அரசாங்க அலுவலகங்கள் என்றாலென்ன, தனியார் நிறுவனங்கள் என்றாலென்ன எல்லா இடங்களிலும் பதவிகளில் உயர்ந்திருப்போர் போடும் கூத்தாட்டங்களால் 'நான் பெரியவன். நீ சிறியவன்' என்ற உயர்வு தாழ்வுகளின் பூதாகரமான வடிவங்கள், அதிகாரம் செய்பவர்களின் பட்டம் பதவிகளால் விரிந்த பெருமைகளால் போட்டி பொறாமைகளாய் வடிவம் பெற்று நர்த்தனமிடுகின்றன. வித்துவக் காய்ச்சல்களும் விதண்டாவாதங்களும் இந்த அதிகாரிகள் மட்டத்தில் அவர்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்யவிடாமலும் சரியாகச் செய்யச் தூண்டாமலும் ஒதுக்கி விடுகின்றன.

அத்தகைய ஒரு போலிப் பெருமை பேசலுக்குள் மூழ்கித் தவிக்கும் அதிகாரிகளைக் கொண்டதாக இந்தக் கல்வித் திணைக்களமும் பல்வேறு பிரச்சனைகளுக்குள் ஆழ்ந்து கிடப்பதில் ஆச்சரியமில்லை.

அன்றும் அந்தத் திணைக்களத்திலிருந்து அனுப்பப்பட்ட கருத்தரங்கொன்றுக்கான அழைப்புக் கடிதத்தில் இடம் பெற்ற மேலதிகாரியின் கையொப்பம், பதிலொப்பமானாலும் அது ஆனந்தத்தின் ஒப்பமாகிப் போனதைப் பார்த்த பணிப்பாளர் மதிலிங்கத்தார், கோபம் பொங்க கிளாக்கர் முருகையாவை ஏசிக் கொண்டிருந்தார் "யாருடைய கையொப்பத்தை இதில் வாங்கி அனுப்பியிருக்கிறீர்" என்று கிளாக்கரைக் கேட்டு உறுக்கி உசுப்பினார்.

"அது சேர்.... நீங்கள் லீவில் நின்ற போது உங்களுக்குப் பதிலாக ஆனந்தம் ஐயா கையொப்பம் இட்டவர்" என்று பௌவியமாகப் பதில் சொன்ன கிளாக்கரை மதிலிங்கம் ஐயா எரித்து விடுவதைப் போல் பார்த்தார்.

ஒரே பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்களான பணிப்பாளர் மதிலிங்கமும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆனந்தமூர்த்தியும் பரீட்சைகளின் மூலமும் பல்வேறு முயற்சிகளின் மூலமும் முன்னுக்கு வந்தவர்கள் தாம். இந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு ஒருவரே நியமிக்கப்படலாம் என்ற நியமத்தின் பெயரில் மதிலிங்கம் அவர்களுக்கு அது கிடைத்தது என்னவோ உண்மைதான். ஆனால் அதே திணைக்களத்தில் பணிப்பாளரின் கடமைக்கு உதவும் வகையில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ஆனந்தமூர்த்தி அவர்களின் நியமனம் குறித்து, மதிலிங்கம் ஐயாவுக்கு சிறிது ஒவ்வாத மனம் உண்டு. இதனால் ஆனந்தமூர்த்தி மீது அவருக்கு ஓர் இனம் புரியாத வெறுப்புணர்வு வளர்ந்துகொண்டே வந்தது.

தமக்குச் சமமாக தனக்கும் மேலாக இந்தப் பணிப்பாளர் பதவியில் ஆனந்தமூர்த்தி வளர்ந்து மதிப்புப் பெற்றுவிடக் கூடாது என்பதில் மதிலிங்கத்தாரின் கவனம் நிறையவே இருந்தது. இதனால் திணைக்கள நடவடிக்கைகளில் இருவருக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்படுவது சகசமாகி விட்டது.

பணிப்பாளர் மதிலிங்கம் பிரதிப் பணிப்பாளர் ஆனந்தமூர்த்தியின் மீது கொண்டிருந்த வெறுப்பின் வெளிப்பாடாகவே இப்பொழுது எதிரில் நின்ற கிளாக்கர் மீது அவர் வார்த்தைகளால் ஏறிப் பாய்ந்தார்.

நாளை நடைபெறப்போகும் கருத்தரங்கில் பங்கு கொள்வதற்கென எங்கெல்லாமோ இருந்து அழைக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள், அதிகாரிகள் இந்த மாலை வேளையில் ஒவ்வொருவராக வந்து அங்கே கூடிக்கொண்டிருந்தனர். அவர்கள் தமது வரவைப் பதிவு செய்யும் ஆவலோடு முருகையாக் கிளாக்கரை எதிர்பார்த்து வெளியே நின்றனர்.

மழை முகில் படர்ந்த வானமாய் முகம் கறுக்க பணிப்பாளரின் முன்னே கை கட்டி பதில் சொல்லி நின்ற கிளாக்கருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"என்னுடைய அனுமதியைப் பெறாமல் எப்படி நீர் கடிதங்களை அனுப்பிவைத்தீர்? யார் உமக்கு இந்த அனுமதி தந்தது?"
என்றெல்லாம் கேள்வி மேல் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போன மதிலிங்கத்தாருக்கு மீண்டும் மீண்டும் ஒரே பதிலைச் சொல்லி அலுத்துப்போன கிளாக்கர் மௌனியானார்.

படிப்பு, பட்டம், பதவி, மதிப்பு, உயர்வு எல்லாவற்றையும் அடிக்கடி சொல்லி பெருமை பேசும் மதிலிங்கத்தாரின் வழமையான தற்புகழ்ச்சி வார்த்தைகளை அந்த அலுவலகமே கேட்டுச் சலிப்படைந்திருந்தது என்பதும் உண்மைதான்.

கையொப்பம் வைக்கவும், கடிதம் அனுப்பவும் மதிலிங்கத்தாருக்குச் சமமாக ஆனந்தமூர்த்தி ஐயா உயர்ந்துவிடக்

கூடாது என்பதில் மதிலிங்கம் ஐயா நிறை யவே கவனம் செலுத்தி வந்தார்.

மதிலிங்கத்தார் லீவில் நிற்க நேரிடும் போதெல்லாம் எந்தநிலையிலும் ஆனந்த மூர்த்தியார் கைகளுக்குத் தனது உயர்ந்த பணியின் பங்குகள் போய்விடக் கூடாது என்ற வகையில் எல்லா ஒழுங்குகளையும் முன்னதாகவே நாசூக்காகச் செய்துவைத்து விடுவதில் அவர் கெட்டிக்காரர்.

இன்று அந்தக் கருத்தரங்குக்கான அழைப்புக் கடிதத்தில் கையொப்பம் இடும் சந்தர்ப்பம் ஆனந்தமூர்த்தியின் கைக்குச் சென்றமை குறித்து அவருக்கு அளவற்ற மன எரிச்சல்! இவ்வகைச் சந்தர்ப்பங்கள் ஏற்படாமற் பார்த்துக் கொள்வதில் அவர் ஏற்படுத்திக்கொண்ட கவனத்தில் தோன்றிய தளர்வு அவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்திவிட்டது.

என்னதான் பதில் சொன்னாலும் அதனை ஏற்றுகொள்ளும் மனநிலையில் அவர் இல்லை! என்பதை முருகையாக் கிளாக்கர் மாத்திரமல்ல, அந்த முழு அலுவலகமுமே நன்கு அறிந்திருந்தது.

மௌனத்தைத் தொடர்வதாக முடி வெடுத்துக் கொண்ட கிளாக்கர் அமைதி யாக பணிப்பாளரின் எதிரில் தனித்திருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

அழைப்புக் கடிதத்தில் கையொப்ப மிட்ட ஆனந்தமூர்த்தியார், பணிப்பாளரின் முன்னே தோன்றும் விருப்பற்று, பிரச்சி னைக்குள் மல்லுக்கட்டாமல் தனது அறையி லேயே இருந்து கொண்டார்.

நாளை நடைபெறப்போகும் கருத்த ரங்கும், செயலமர்வும் அமைச்சின் ஏற்பாட் டில் மாவட்டப் பணிமனைகளில் கடமை யாற்றும் உயர் அதிகாரிகளுக்கும் பாடசாலை அதிபர்களுக்குமானது. இதனை நடத்துவதன் மூலம் மாறிவரும் புதிய நிர்வாகச் சீராக்கங்களுக்கேற்ப உயரதிகாரிகளையும் அதிபர்களையும் சிறப்பான வழிப்படுத்தலுக்கு முன்னெடுக்க இது பெரிதும் பயன்படும் என்பதாய் மேலிடம் நம்பிக்கை கொண்டிருந்தது. அத்தகைய எதிர்பார்ப்புடனேயே இந்தக் கருத்தரங்கு நடத்தப்படவிருந்தது.

கிளாக்கரின் மௌனத்தால் உற்சாகம் குன்றிய பணிப்பாளர், தனது நர்த்தனத்தைச் சிறிது நிறுத்தி அறையின் முன் வாயிலை நோக்கிப் பார்வையை விரித்தார்.

கருத்தரங்கில் கலந்துகொள்ள வருகைதந்திருந்த சிலர் தமது வரவைப் பதியக் காத்திருக்கும் காட்சி, அவரது கண் களுக்குத் தெரிந்தது. அவர்களின் வரவைப் பதிவதுடன் நாளை ஆரம்பமாகும் கருத்தரங்கிற்கான முன்னேற்பாடுகளைக் கவனிக்க வேண்டும் என்ற எண்ணமும் அவரை ஒரு முறை தட்டி அசைத்தது.

முருகையா கிளாக்கரை விரைவி லேயே சுமுகமான பார்வைக்குள் உள்வாங் கினார். குரலில் தொங்கிய கடினம் மென்மையானது. அங்கு கூடிவந்த அலுவலர்களையும் அதிபர்களையும் பார்த் ததும் அவர்களுக்கான தங்குமிட வசதி களுக்கு ஏற்புடையதான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு முருகையாக் கிளாக் கருக்கு அறிவுரை வழங்கினார். அவர்களின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ள அவரை விரைவுபடுத்தினார்.

கோபம் வந்தால் உச்சத்தில் ஏறுவதும், கோபம் தணிய பொத்தென்று கீழே பணிவதும் பணிப்பாளர் மதிலிங்கத்தாரின் வழக்கந்தான்!


புதிய கல்விச் சீர்திருத்தம் சார்ந்த செயற்றிட்டங்கள் வாழ்வியல் அனுபவங்களுடன் மனப்பாங்கிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும் மனிதநேயம், சமத்துவம், சமாதானம் எனபவற்றைச் சமூகத்தில் விளங்கச் செய்யும் வீரியத்தை அவை கொண்டவை எனவும் கூறப்பட்டு வருவதைக் கிளாக்கர் முருகையா பலரும் சொல்லக் கேட்டிருக்கிறார். பாடசாலைகளில் கல்வியைப் பாடங்களாகக் கற்று பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்து, பட்டங்களைப் பெற்றுக்கொண்டால் போதுமென்ற நோக்கிலேயே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நாடகமாக நிகழ்கின்றன. மாணவர் தமக்காகச் சிந்திப்பதற்கும், தீர்மானங்களைச் சரியாக எடுப்பதற்கும், அதன்வழி செயற்படுவதற்கும் பொருத்தமானதாக கல்வி இல்லை. பட்டம் பெற்றவர்களின் பார்வையில் பதவியுயர்வுக்கும் பாராட்டுக்கும் தான் கல்வி தேவைப்படுவதைப் போல் மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டப்படவில்லையே எனவும் கிளாக்கர் ஆதங்கப்பட்டார். இன்றைய கல்வியையும் அது வழங்கும் பயன்களையும் எண்ணிப் பார்த்தார். மனம் வேதனைப் பட்டது.

சிந்தனை கலைய நடந்தவற்றைச் சிறிது மறந்து கருத்தரங்க முன்னாயத்த ஏற்பாடுகளுக்கான கோவைகளைக் கையிலெடுத்துக்கொண்டு அறைக்கு வெளியே வந்தார். தனக்குத் தரப்பட்ட பணியில் உற்சாகமானார். அவரைச் சூழ்ந்த கல்விப் புல அதிகாரிகளையும், அதிபர்களையும் தனது வரவைப் பதியும் பணிக்குள் உள்ளீர்த்தார். வந்தவர்கள் எல்லோரிடமும் கையொப்பங்களைப் பெற்றுக்கொண்டாலும் கிளாக்கரின் மனத்தில் துருத்திக் கொண்டிருந்த நாளைய கருத்தரங்கின் உட்பொருள் பற்றியும் அவற்றை நடத்தப் போகும் வளவாளர்களான பணிப்பாளர் களைப் பற்றியும் நினைத்தபோது சிரிப்புத்தான் வந்தது.

முரண்பாடு தீர்வுக்கான கருத்தரங்கும், அதனை நடத்த ஆயத்தமாகும் போதே தமக்குள்ளே முரண்பட்டுப் பொறாமை பகையுடன் கடமையாற்றும் பணிப்பாளர்களும் கேலிக்குரியவர்களாகி முருகையரின் எதிரில் நிற்பது தெரிந்தது.

கல்வியின் நோக்கமும் அதன் வழிகாட்டிகளும் வேறு வேறு பாதைகளால் பயணித்தாலும் பரீட்சையில் சித்திபெற்று பட்டங்களோடு தொழில் தேடி அலைவதும், தொழில் பெற்றுக்கொண்ட வேகத்தில் கடமைகளை மறந்து பெருமைகளை நாடி அரசியல்வாதிகள் முன் பொம்மைகளாக தலை அசைப்பதும் தெரிகிறது. மாறிவரும் கல்விச் சீரமைப்புகள் மந்திரங்களாக உச்சரிக்கப்பட முரண்பட்ட கிரிகைகளே நடாத்தப்படுகின்றன. கல்வியின் பெயரால் சான்றிதழ்களாகவும், பதவிகளாகவும் பலரது கைகளில் குவியும் பொய்மை மலையாகிறது. ஆனால் வாழ்க்கையின் மகத்துவத்துக்குக் கல்வியின் சிறப்புக்கள் உதவவில்லையே! முருகையா கிளாக்கர் தனிமையிலிருந்து பைத்தியக்காரன் போலச் சிரித்தார்.

சிறுவர்கள் உலகின் அருஞ்செல்வங்கள். அவர்களது உலகம் மகிழ்ச்சிகரமானது. பிறந்ததிலிருந்து 18 வயது வரையான காலப்பகுதி சிறுவர்களுக்குரியதாகும். சிறுவர்கள் சமூகத்தில் மிகவும் முக்கியத்துவம் மிக்கவர்களாக காணப்படுகின்றனர். இதனை நாம் உணர்கின்ற மறுகணம் சிறுவர்கள் மீதான இம்சைகள் கொடுமைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் பற்றிய செய்திகள் தினந்தோறும்



முன்பள்ளி ஆசிரியர்களும் தமது பிள்ளைகளுக்கான உரிமைகளை வழங்குவதனைப் பொறுத்தே எதிர்காலத்தில் அப்பிள்ளைகள் சமூகத்தில் நற்பிரஜைகளாக

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் பெற்றோரினதும் முன்பள்ளிஆசிரியரினதும் பங்கு

பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருப்பதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளமை மிகவும் துரதிஷ்டமானதாகும். இவ்வாறான நிலமைகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் பெற்றோர்களினதும் முன்பள்ளி ஆசிரியர்களினதும் பங்கு பெரிதும் முக்கியமானதாகும்.

குழந்தை ஒன்று முதலில் சமூகமயமாக்கல் செயன்முறையைக் கற்றுக் கொள்வது குடும்பத்திலும், அடுத்து முன்பள்ளியிலுமாகும். ஆகவே பெற்றோர்களும் முன்பள்ளி ஆசிரியர்களும் தமது பிள்ளைகளுக்கான உரிமைகளை வழங்குவதனைப் பொறுத்தே எதிர்காலத்தில் அப்பிள்ளைகள் சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ, வளர முடியும். ஒரு இளம் பிள்ளை தான் வாழ்வதற்கும் வாழ்க்கையில் செழுமை பெறுவதற்கும் தேவையான சகல அவசியமான உதவிகளையும் தனது முழுமையான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் தேவையான உதவிகளையும் குடும்பத்தினரிடமும் மற்றும் சமூதாயத்தினரிடமும் உதவிகளை வேண்டி நிற்கிறது. இவை சுகாதாரம், போஷாக்கு, அறிவாற்றல், துண்டுதல் தேட்டத்துக்கும், ஈடுபாடுடைய கற்றலுக்கும் வாய்ப்புகளை வழங்குவதோடு சமூகம் மற்றும் மனவெழுச்சிசார் வளர்ப்பும் பராமரிப்பும் ஒரு பிள்ளை தனது உள்ளார்ந்த ஆற்றலை உணர்வதற்கும்

தனது குடும்பத்திலும் பிற்காலத்தில் சமுதாயத்திலும் முக்கியமான வகிபங்கினை ஏற்பதற்கும் அவசிய மாகின்றது.

பிள்ளை கருவில் உருவாகும் காலம் முதல் ஐந்து வயதினை அடையும் வரையான காலம் ஆரம்ப பிள்ளைப் பராயம் என அழைக்கப்படுகிறது. பிள்ளையின் வாழக்கை வட்டத்தில் இது மிகவும் முக்கியமான பருவமாகக் கருதப்படுகிறது. இப்பருவத்திலேயே பிள்ளையின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றல்கள் உருவாக்கப்படுகின்றன. மனிதனின் விருத்திக்கான அடித்தளமும் இப்பருவத்திலேதான் இடப்படுகின்றது. கருத்தரிக்கும் காலம் உள்ளடக்கப்படுவதற்கான காரணம் என்னவெனில் பிள்ளையின் முதற்கட்ட விருத்தியினை உருவாக்குவதில் தாயின் கருவறைச் சூழல் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

அ. இமக்குலேசியா

பிள்ளையின் வாழ்க்கையில் முதல் மூன்று வருடங்களும் முக்கியமான பருவங்களென பல கற்கைகளும் ஆய்வுகளும் நிருபித்துள்ளன. இக்காலத்திலேயே 80 ற்கு மேற்பட்ட மூளைக்கல இணைப்புக்கள் மூளையில் உருவாவதுடன் மூளையும் அதன் உச்ச வளர்ச்சியைப் பெறுகின்றது. இப் பருவத்திலே பிள்ளை அபிவிருத்திக்கான முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை அடைவதற்குப் பூரணமான மற்றும் பொறுப்புள்ள பராமரிப்பைப் பெறுதல் அத்தியாவசியமானது. இக்காலப் பகுதியில் இடம் பெறும் வளர்ச்சியும் விருத்தியுமே எதிர்கால விருத்திக்கான அத்திவாரத்தை இடுகின்றன. வாழ்க்கையின் முதல் மூன்று வருடங்களின் போதுள்ள வளர்ச்சி மிகவும் துரிதமாக இருக்கும். சூழற் செல்வாக்குடன் கூடிய உணர்வுபூர்வமான பருவமாக இது அமையும்.

ஒரு குழந்தையின் மூளைக்கு எந்தளவு அதிகமான தூண்டுதல் கிடைக்கின்றதோ அந்தளவிற்கு அதிகமான மூளைக்கலங்கள் தூண்டுவிக்கப்பட்டு அவற்றிற்கு இடையே அந்தளவிற்கு அதிகமான இணைப்புக்களும் உருவாகின்றன. இங்கே அவதானத்திற்குரிய விடயம் என்னவென்றால் தகவல்கள், எண்கள், மொழிகள் ஆகியவற்றால் பெறப்படும் அறிவுபூர்வமான தூண்டுதலை மட்டுமே இது குறிப்பதில்லை. குழந்தைகளை அணைக்காமல் தொடாமல் உணர்ச்சிபூர்வமாகத் தூண்டாமல் அவர்களோடு விளையாடாமல் இருக்கும் போது இந்த இணைப்புக்கள் (synapses) அதிகம் உருவாவதில்லை என்பதனை குழந்தை நரம்பியல் ஆய்வுகள் காட்டுகின்றன. ஆகவே ஒரு பிள்ளை எதிர்கொள்வதற்கும் பின்பற்றுவதற்கும் ஈடுபடுவதற்கும் பரவலான துலங்கலுடன் தூண்டுதலளிக்கும் செயற்பாடுகளுக்கும் போதியளவில் வீட்டிலும் முன்பள்ளிகளிலும் பாடசாலைகளிலும் வாய்ப்புகள் இருத்தல் மிக முக்கியமானதாகும். இக்காலப் பகுதிகளிலேதான் சிறுவர்க்ளுக்கான உரிமைகளைப் பாதுகாப்பதன் அவசியம் முக்கியமானதாகும். இவ்வாறான உரிமைகள் பேணப்படாத ஆதரவுச் சூழல் அமையப்பெறாத பிள்ளைகள் ஆளுமைப் பிரச்சினைகள், உளச்சீரின்மைகள், அறிகைக் குறைபாடுகள் மற்றும் கற்றல் பிரச்சினைகள் கொண்டவர்களாகக் காணப்படுவர்.

ஆகவே வீட்டிலுள்ள பெற்றோரும் அங்கு வாழ்வோரும் வெளியே முன்பள்ளி

ஆசிரியரும் சேர்ந்து பிள்ளைக்கு உகந்த ஆரம்ப சூழலை உருவாக்க வேண்டும் பிள்ளை சூழலுடன் ஊடாட்டம் கொள்வதன் அடிப்படையில் சிறுவர் உரிமையும் பாதுகாப்பும், சூழல் வழங்கும் வாய்ப்புக் களிலிருந்தும் நன்மையடைவதற்கு பிள்ளைக்கு சுதந்திரமும் பாதுகாப்பு உணர் வும் இருத்தல் வேண்டும்.

அத்துடன் சமுதாயத்திற்கான நற்பிரஜை உருவாவதற்கான அடித்தளம் இடப்படும் இடம் முன்பள்ளியே எனவும், மூளை வளர்ச்சியின் பெரும்பகுதி பூரண மாவதும் ஆரம்ப நடத்தைக் கோலங்கள் உருவாவதும் முன்பள்ளியிலேயே என்பதனையும் முன்பள்ளி ஆசிரியர் நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். மேலும் இவ் வயது மட்டத்தில் சிறுவர் உரிமை பாது காக்கப்படாது மீறப்படுமிடத்து ஏற்படும் தாக்கம் ஆழ்மனதில் பதிந்து அக் குழந்தை நற்பிரஜையாக உருவாகுவது பாதிக்கப் படும். பிள்ளைகளின் தனித்துவமான திறமைகள் அடையாளம் காணப்படுவதற் கான களம் முன்பள்ளியாகக் காணப்படு வதால், அத்தகைய தனித்துவமான திறமை களுக்கேற்ப எதிர்கால இலக்கு அமைக்கப் பெறின் பிள்ளையின் எதிர்காலம் பிரகாச மாக அமைவதுடன் சமுதாயமும் நலம் பெறும்.

ஆகவே பருவ வளர்ச்சிக்கேற்ப குழந்தை தனது இலக்கை அடைவதற்கு பெற்றோர் பிள்ளைக்கு அனைத்து வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத் தல் வேண்டும். சிறுவர் உரிமைகளை மதித்தலும் அவை மீறப்படாததை உறுதி செய்தலும் வேண்டும். சிறுவர் உரிமை களை உயிர் வாழும் உரிமை பங்குபற்றும் உரிமை, பாதுகாக்கும் உரிமை, மேம்பாட்டு உரிமை என வகைப்படுத்தி அதனுள் பிள்ளை என்பதன் வரையறை, பாகுபாடு காட்டாமை, பிள்ளைகளின் சிறந்த நலன் கள், கருத்துச் சுதந்திரம், கல்வி, சிறுவர் களை வேலைக்கு அமர்த்தாமை, போதைப் பொருள் துஷ்பிரயோகத்திற்குள்ளாகாமை, பாலியல் ரீதியான சுரண்டலிலிருந்து பாது காப்பு, சித்திரவதையிலிருந்து பாதுகாப்பும், சுதந்திரம் வழங்கலும், ஆயுதப் பிணக்கு களிலில் ஈடுபடுத்தாமை, போன்ற முக்கிய உரிமைகள் சிறுவர்களுக்கு கிடைப்பத னைப் பெற்றோரும் முன்பள்ளி ஆசிரியர் களும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன் முன்பள்ளி ஆசிரியர் முன்பள்ளியின் அகப்புறச் சூழலினை சிறுவர் உரிமை சிறுவர் பாதுகாப்பு ஆகிய வற்றை மேம்படுத்தும் வகையில் பயன்படுத் திக் கொள்ளவேண்டும். அதாவது அகச் சூழல் என்ற வகையில் நாளாந்தம் பிள்ளை கள் பயன்படுத்துகின்ற முன்பள்ளி வகுப் பறைச் சுவர்கள், தளபாடங்கள், பொருட்கள் போன்றவற்றில் சிறுவர் உரிமை பாதுகாப்பு தொடர்பான சித்திரங்கள் வரைதலும் பட அட்டைகள், வாசகங்கள் எழுதியும் காட்சிப் படுத்த வேண்டும்.

அத்தோடு புறச்சூழல் என்ற வகையில் முன்பள்ளி அமைந்துள்ள இடத்தைச் சுற்றியிருக்கும் பௌதீக உயிரியல் கூறுகளின் தொகுதி புறச்சூழல் எனும் தன்மையில் அதனுள் குடும்பம், சமூகம், பொதுஇடங்கள், கோயில், கைவிடப்பட்ட இடங்கள், அறிமுகமான மனிதர்கள், அறிமுகமில்லாத மனிதர்கள் என்பனவும் அடங்கும்.

பிள்ளையினுடைய முன்பள்ளியின் அகத்தே காணப்படுகின்ற அனைத்து அம்சங்களும் மற்றும் சக மாணவர், ஆசிரியர் ஆகியோரின் நடத்தைகளும் பிள்ளையின் உரிமை, பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒழுங்கமைக்கப்படுவதுடன் புறச்



சூழலிலுள்ள பெற்றோர், உறவினர் மற்றும் பெரியோர்களின் அரவணைப்பு மிகுந்த முன்மாதிரி பொதுஇடங்கள் பற்றியதும் அறிமுகமில்லாத மனிதர்கள் பற்றிய்துமான விளக்கம் அவர்களின் செயற்பாடுகள் தனது வாழ்வில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் என்பதனைப் பிள்ளை விளங்கிக் கொள்வதற்கு பெற்றோரும் முன்பள்ளி ஆசிரியரும் வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும். பெற்றோரினதும் முன்பள்ளி ஆசிரியரினதும் முன்மாதிரிகையான நடத்தை பிள்ளையின் நடத்தையில் முக்கிய செல்வாக்கினைப் பெற்று நிற்கின்றது. இதனைப் பெற்றோரும் முன்பள்ளி ஆசிரியரும் விளங்கிக் கொண்டு முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்.

பெற்றோருக்கு அடுத்த நிலையில் சிறுவர்களது நலமான வாழ்வில் அக்கறை கொண்டவர்களாக இருக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் நாளாந்தம். அதிகளவு எண்ணிக்கையிலான சிறுவர்களுடன் மிக நெருக்கமான உறவைப் பேணுபவர்களாகவும். சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்காணும், அடையாளம் காணும் வாய்ப்பினைக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். இன்றைய நிலையில் பிள்ளைகளின் நல்வாழ்வைப் பாதிக்கும் விடயங்களை இனங்கண்டு, அதனைத் தீர்ப்பதற்கு இவர்கள் முன்வர வேண்டும். முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றோருடன் கலந்துரையாடி நல்லுறவைப் பேணுவதுடன் சமூக நபர்கள் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதனூடாக சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். முன்பள்ளி ஆசிரியரும் பெற்றோரும் இணைந்து சமூக நபர்கள் நிறுவனங்களுடன் நல்லுறவைப் பேணு வதனூடாக சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பினைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்பதும் புலனா கின்றது.

'ஒரு குழந்தை நல்லபடியாக முன்னேற வேண்டும் என்றால் அம்மா அப்பா ஆரம்பப்பள்ளி ஆசிரியர் என்ற மூன்று பேர் முக்கியம். நல்ல குணமான வாழ்வு வேண்டும் எனில் இவர்களால் தான் வழிகாட்ட முடியும்"

# தொல்லைதரும் தொற்றா நோய்கள்

**தொ**ற்றா நோய்கள் இன்று தொற்று நோய்களை விட சுகாதாரத்திற் கேடு விளைப்பவனாக உள்ளன. தொற்று நோய்களைப் போல இந் நோய்கள் சமூகத்தில் பரவலாகி வருகின்றமையால் பல்வேறு உயிர் ஆபத்தான நோய்களின் நிலைகள் ஏற்படுகின்றன. இவற்றுக்கு வைத்தியசாலைகளில் நோயாளிகள் நிறைந்த நீரிழிவு, உயர்இரத்த அழுத்தம், ஆஸ்மா நோயாளிகளுக்கான கிளினிக்குகள் சான்று பகர்கின்றன. இன்னொருபுறம் புற்றுநோய் வைத்திய சாலைகள் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றமையையும் காண லாம். சுகாதாரத் திணைக்களம் சிகிச்சைப் பிரிவைப் போலவே வருமுன் காப்பு பிரிவிலும் தற்காலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அதிலும் தொற்று நோய்களைத் தடுக்கும் நடவடிக்கைகள் போலவே தொற்றா நோய்களிலும் அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.




பெருகிவரும் தொற்றா நோய்களில் நீரிழிவு, உயர்குருதி அழுத்தம், உயர் கொலஸ்ரோல், புற்றுநோய், ஆஸ்மா என்பன பரவலாக அதிகரித்து வருகின்றன. நீரிழிவு நோய் கடந்த மூன்று தசாப்தங்களில் ஐந்து மடங்காக அதிகரித்துள்ளது. நாடளாவிய ரீதியில் 15 வீதமானோரும் வட பகுதியில் கிட்டத்தட்ட 20 வீதமானோரும், நீரிழிவு நோயாளர்களாக இருக்கிறார்கள். நீரிழிவு உயர்குருதி அழுத்தம் உயர் கொலஸ்ரோல் என்பன உடனடியாக நேரடியாக ஆபத்துக்களை ஏற்படுத்தாத போதிலும், இந்தநோய் நிலைகள் நீண்ட காலம் தொடரும்போது பாரதூரமான உயிராபத்தான நிலைகளை ஏற்படுத்துவதால், இவற்றை சத்தமின்றிக் கொல்லும் உயிராபத்தான நோய்கள் என்று கூறுவார்கள். இவற்றின் விளைவால் மாரடைப்பு, பக்கவாதம் (ஸ்ரோக்) சிறுநீரக

செயலிழப்பு இதய செயலிழப்பு முதலான தீவிர நோய் நிலைகள் ஏற்பட்டு சடுதியான மரணங்களும் ஏற்படலாம். அத்துடன் பார்வை இழப்பு, அங்க இழப்பு என்பனவும் ஏற்படலாம்.

சுகாதார திணைக்களத்திற்கு சவாலாக இருப்பதுடன் மக்களை வாட்டி மரணத்திற்கு இட்டுச் செல்லும் மற்றொரு நோய் புற்றுநோயாகும். புற்றுநோய்க்கு பல்வேறு மருந்துகளும் சிகிச்சை முறைகளும் நவீன மருத்துவ விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்படுகின்ற போதிலும் இதனால் ஏற்படும் மரணங்களையும் நோயாளர்களின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது. பரவலாகத் தொல்லைதரும் சுவாசத் தொகுதி தொற்றாநோயான ஆஸ்மாவினாலும் பெருந்தொகையானோர் அல்லற்படுகின்றனர். இந்த நோய் முன்னைய நோய்களைப் போன்று உயிராபத்தான நோயாக இல்லாவிடினும் இது நோயாளிகளைக் கடுமையான துன்பத்திற்கு உள்ளாக்குவதுடன், பலரது நாளாந்த வாழ்க்கையையும் புரட்டிப் போட்டுள்ளது.

### தொற்றா நோய்களின் அதிகரிப்புக்கான காரணங்கள்

சமூக மட்டத்தில் தொற்றா நோய்கள் அதிகரிப்பதற்கு இன்றைய மனிதர்களின் வாழ்க்கை முறையே காரணமாக அமைந்துள்ளதாக அறியப்படுகின்றது. சீரற்ற உணவுப்பழக்கம், இயங்குநிலையற்ற வாழ்வு, சூழல் மாசுபடல் எனப் பல விடயங்கள் இதில் அடங்கியுள்ளன. விவசாய தேவைகளுக்காகவும் குடியிருப்புக்களுக்காகவும் காடுகள் வேகமாக அழிக்கப்படுவதும் அதிகரித்த தொழிற்சாலைகளின் கழிவுகள் சூழலை மாசுபடுத்துவதனாலும், இரசாயன உர வகைகள், கிருமிநாசினிகள் உணவைப் பழுதடையாமல் காக்கும் பொருட்கள் தூய்மையற்ற குடிநீர் என பல விடயங்கள் சூழல் மாசுடன் தொடர்புபட்டுள்ளன.

இயந்திர உபகரண வருகையினால் மனித வாழ்வின் இயங்குநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சிறுபிள்ளைகள் முதல் பெரியோர் வரை வெளிக்கள விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றமை குறைந்துள்ளது. எப்போதும் இன்றைய தலைமுறையினர் வீட்டுக்குள்ளே கணனி, தொலைக்காட்சி என்பவற்றின் முன்னால் அமர்ந்திருந்து நேரத்தைக் கழிப்பதனால் அவர்களது உடல் இயக்கம் குறைவாகவே உள்ளது. இதனால் உடல் எடை அதிகரிப்பும் உடற்பருமனும் பரவலாகி வருவதனால் பல்வேறு தொற்றாநோய்கள் ஏற்படுவது அதிகரித்துள்ளது. முன்னர் எமது நாளாந்த கடமைகளை மேற்கொள்வதில் உடல் இயங்குநிலை அதிகம் இருந்தது. கிணறுகளில் அள்ளிக் குளித்தும், குளங்களில் நீச்சல் அடித்தும் குளித்த நம்மில் பலர் இன்று குளியலறையில் துரிதமாகக் குளித்து முடிக்கிறோம். எமது ஆலய வழிபாட்டு முறைகளிலும் உடலியக்கத்திற்கான சாத்தியங்கள் நிறையவே இருந்தன. கோயில்களுக்கு நடந்து செல்லுதல், ஆலயத்ததைச் சுற்றி வழிபடுதல்,தரையில் கிடந்து வழிபடல், அங்கப் பிரதட்சனை, அடி அளத்தல் போன்ற வழிபாட்டு முறைகளில் தேகப்பியாசத்திற்கு நிறையவே வாய்ப்புக்கள் இருந்தன. இன்று ஆலயங்களில் தினசரி வழிபாட்டுக்குச் செல்கின்றவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. திருவிழாக் காலங்களில் மட்டும் ஒன்று

கூடுகின்ற நிலையே அதிகமாக நடைமுறையில் உள்ளது. தேகப்பியாசம் செய்வதற்கான நேரத்தை ஒதுக்குவது குறைந்துள்ளது. தியானம், யோகா என்பன கனவுகளாகி விட்டன.


**உணவுப் பழக்கமும் நோய்களும்**

இன்று பலரும் துரித உணவுகளுக்கு பழக்கப்பட்டுள்ளனர். சிறுவயது தொட்டே பாணும் பணிசுமே காலை உணவாகிவிட்டமையால் சம்பல உணவு கிட்டுவதில்லை. இன்றைய காலகட்டத்தில் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வது அதிகரித்துள்ளமையால் ஆரோக்கியமான நிறைவான சம்பல உணவுகளை அவர்களால் தயாரிக்க முடிவதில்லை. அப்படித் தாயாரிப்பவர்கள் கூட உணவின் போஷாக்குப் பற்றிச் சிந்திப்பதில்லை. மேலும் மதிய உணவைப் பலரும் வெளி உணவுச்சாலைகளில் உட்கொள்கின்றார்கள். வேலை முடிந்துவந்து இரவு உணவை வேகமாகச் சமைக்கும் போது கூட தேவையான சத்துக்கள் பற்றிச் சிந்திப்ப தில்லை. மரக்கறி வகைகள், முழுத்தானிய உணவுகள் பழ வகைகள், என்பன போதியளவு சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. மீன் இறைச்சியைக் கூட ரின்களில் அடைத்து பதப்படுத்தி உண்கின்ற நிலையே இன்று அதிகரித்துள்ளது. மேலும் நவீன தயாரிப்பு உணவுகளான பொரித்த இறைச்சி வகைகள் பீசா போன்றவற்றின் பாவனையும் அதிகரித்துள்ளது.


UNITY COMPUTERS

# Unity PC Systems

COMPUTER Sales, Repairs, Security Camera,
Service & Maintenance, Networking,
All kind of Computer Accessories.





74, Palaly Road,
Illupaiyadi Junction, Jaffna.
0773446194, 0212220666
unitypcja@sltnet.lk

394, 1/1, Galle Road,
Wellawatta, Colombo.
0112361777, 0777890532
unitypc@sltnet.lk

# ஆசாரக்கோவை கூறும் தமிழர் பண்பாடு

-றோ.றெ.றொஷான்

பண்பாடு என்பது ஒரு தனிமனிதனின் அடையாளம். ஒருவருடைய பண்பாடே அவனது நாட்டையும் குணத்தையும் வெளிப்படுத்தி விடுகின்றது. நவீன கலாசாரத்திற்குள்ளும் உலகமயமாதலுக்குள்ளும் மலிவான பண்பாட்டுக் கலப்புகளுக்குள்ளும் இன்றைய தமிழர் சமுதாயம் சிக்குண்டு தனது சுயபண்பாட்டை இழந்து பரிதவிக்கின்றது. தமது பண்பாட்டைப் பேணுவதன்



மூலமே தமிழர் தமது இருப்பைப் பாதுகாக்கவும், பறைசாற்றவும், முடியும். மனிதன் எப்படியும் வாழலாம் என்றிருந்த பண்டைய தமிழர் வாழ்விலே "அவன் இப்படித்தான் வாழ வேண்டும்" என்று கூறி மனித வாழ்வை நெறிப்படுத்திய பெருமை சங்கமருவிய காலத்திற்றோன்றிய அறநூல்களின் பாற்படும். அந்த அறம் கூறும் நூல்களில் தமிழர்கள் எப்படி வாழ வேண்டும் என்ற வரையறை சொல்லும் பண்பாட்டு இலக்கியமாக ஆசாரக்கோவை விளங்குகின்றது.

தமிழர்களுக்கென்று ஒரு தனித்துவம் உண்டு. அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு, பேணப்பட்டு வந்த பண்பாட்டு அம்சங்கள் விஞ்ஞானத்தன்மை வாய்ந்தவை. அவர்களுடைய பண்பாடே ஏனைய இனங்களின் நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சிக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வந்துள்ளது என்பதனை, தமிழரது பண்டைய பண்பாட்டு வரலாற்றைக் கூர்ந்து அவதானிப்பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

இலக்கியங்கள் என்பவை மனிதனின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் சமயப் பண்பாடுகளை மீட்டுருவாக்கம் செய்வதற்கு வழிகோலுவனவாக அமைகின்றன.

ஒரு இலக்கியத்தை நாம் விளங்கிக் கொள்வதன் மூலம், அவ்இலக்கியம் எழுந்த காலத்தையும், அதன் பின்னணியையும் விளங்கிக் கொள்ள முடியும். அந்த வகையிலே ஆசாரக்கோவை நூலில் சங்க மருவிய காலத் தமிழரிடையே வழக்கிலிருந்த பண்பாட்டுக் கூறுகளை இனங் கண்டு கொள்ள முடியும்.

ஆசாரக் கோவை என்பது அடிப்படையில் ஒரு அறம் கூறும் இலக்கியமாகும். இது ஆசாரம் + கோவை என்னும் இரண்டு சொற்களின் பிணைப்பாக அமைந்துள்ளது. "ஆசாரம்" என்ற சொல்லுக்கு கிரியாவின் தற்கால அகராதியானது " பொது ஒழுக்கத்துக்கான அல்லது, சமய, குல, ஒழுக்கத்துக்கான நெறிமுறைகள் (Moral , Ethical , Caste) Codes and Practices" என்று பொருள் கூறுகின்ற அதேவேளை "கோவை" என்பதற்கும்

1. ஒரு ஒழுங்கில் அமைந்த தொடர்ச்சி Continuity, Choernce;

2. தொகுப்பு Collection ( of essays) ஆய்வுக்கோவை எனப் பொருள் தருகின்றது.

எனவே ஆசாரக் கோவை என்பதற்கு மனிதர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகளைக் கோவைப்படுத்திய நூல் என இலகுவில் பொருள் கூறலாம்.

## இலக்கியமும் பின்னணியும்

ஆசாரக்கோவை தோன்றிய சங்க மருவிய காலத்து அரசியல், சமூக, சமய மற்றும் பொருளாதார நிலையை விளங்கிக் கொள்வதன்மூலம் அது கூறும் தமிழர் பண்பாட்டை விளங்கிக் கொள்ள முடியும். அவற் றைப் பின்வரு மாறு ஆராய லாம்.

சங்கமருவிய காலம், தமிழ் இலக் கிய வரலாற்றில் சங்க காலத்துக்கும் பல்லவர் காலத்துக்கும் இடைப்பட்ட காலமாகும். இக்காலத்தை ஆ.வேலுப் பிள்ளை அவர்கள் "அறநெறிக் காலம்" என்கிறார். இக்காலத்து நூலான ஆசாரக் கோவைக்கு மூலநூலாக அமைவது "ஆரிடம்" என்னும் வடமொழி நூலாகும். இந் நூலில் குறள்வெண்பா, சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை எனப் பல வெண்பா வகைகளில் செய்யுள்கள் அமைந்துள்ளன. நூறு வெண்பாக்களை உள்ளடக்கிய இந்நூலின் ஆசிரியர் "கயத் தூர்ப் பெருவாயில் முள்ளி யார்". வணகயத் தூர் என்பது இவரது ஊர்ப் பெயர். முள்ளியார் என்பது இவருடைய இயற் பெய ராகும். இவர் சைவசமயத்தைச் சேர்ந்தவர்.

## சமூகப் பின்னணி

மனிதன் எப்படியும் வாழலாம் என வாழ்ந்த சங்க காலத்து மக்களின் வாழ்க்கை தோல்வியிலே முடிவடைந்தமையினால் அவன் இப்படித்தான் வாழ வேண்டும் என்று கூறி மனித வாழ்வை நெறிப்படுத்தி, வழிப் படுத்தத் தோன்றிய அற இலக்கியங்களுள் இதுவும் ஒன்றாகும். வடமொழியில் உள்ள "ஸ்மிருதிகள்" இன்ன இன்ன வருணத்தார் இன்ன இன்ன ஆசாரங்களைப் பின்பற்றுவர் எனப் பொதுவாகக் கூறுகின்றன. மாறாக ஆசாரக்கோவையில் இவ்வாறு சாதிக்கொரு பண்பாடு எனப் பிரித்துக் கூறப்படவில்லை. மக்கள் அனைவரும் ஆசாரங்களைப் பின்பற்றுவதன் மூலம் பண்பாட்டைப் பேண வேண்டும் என்று பொது நிலையிலேயே வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையிலே இந்நூல் தன் காலத்துப் பழக்கவழக்கங்கள், நம்பிக்கை கள், ஆசாரங்கள், சமூக மதிப்பீடுகள் போன்றவற்றை ஆவணமாக்க முயன்றுள் ளமை புலனாகின்றது.

கோவைகள் என்பவை பொதுவாக ஒரு பொருளையோ விடயத்தையோ, தவற விடாது பாதுகாப்பாகச் சேர்த்து வைப்ப தனை நோக்கமாகக் கொண்டவை. இவ் வகையில் கால' வெள்ளத்தால் தமிழர் பண்பாட்டுக்கூறுகள் அழிந்து விடாது காப்பதனை நோக்கமாகக் கொண்டே இந்த ஆசாரக்கோவை நூலும் எழுந்துள்ளது எனலாம்.

## ஆசாரக் கோவையில் கூறப்படும் பண்பாட்டின் அடிப்படைகள் – எட்டு

ஒருவன் பண்பாட்டைக் கடைப்பிடிக்க முயலுகின்ற போது, எட்டு விடயங்கள் தொடர்பாகத் தன்னை முழுமையாக அர்ப் பணித்திருக்க வேண்டும் எனக் கூறப்படு கின்றது. அவையாவன.

✧ **நன்றி அறிதல்** -
பிறர் தனக்கு செய்த நன்மையை மறவாமை

✧ **பொறையுடைமை** -
அறியாமல் பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்தல்.

✧ **இன் சொல்** -
எவரிடமும் கடும் சொல் கூறாது இனிமையாகப் பேசுதல்.

✧ **எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை** -
உயிர்கள் வருந்தும்படி தீமை செய்யாதிருத்தல்.

✧ **கல்வி** -
சிறந்த கல்வியை மறக்காமல் கற்றல்.

✧ **ஒப்புரவு** -
உலக நடப்பை அறிந்து அதைத் தவறாது பின்பற்றல்.

✧ **அறிவுடமை** -
எதைப்பற்றியும் தானே சிந்தித்து உண்மையைக் காணுதல்.

✧ **நல் இனத்தவரோடு நட்டல்** - .
கல்வி, அறிவுடையரோடு நட்புக் கொள்ளல் என்பனவாகும்.

## தனி மனித பண்பாட்டுக் கூறுகள்

பண்பாடு முதலில் ஒரு தனி மனித னைச் சேர்ந்த ஒன்று. தனிமனிதனிலிருந்தே சமூகம் என்ற அமைப்பு உருப்பெறுகின்றது. அந்த ரீதியில் பண்பாட்டைத் தனிமனிதப் பண்பாடு, சமூகப் பண்பாடு என இரு வகை களில் நோக்கலாம். ஆயினும் தனிமனித பண்பாட்டு கூறுகளின் கூட்டுச் சேர்க்கை யாகவே சமூகப் பண்பாடு அமைந்துள்ளது.

## அ. கடவுள், ஐங்குரவர் வழிபாடு.

அதிகாலையில் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து, அன்றைய நாளில் செய்யப் போகும் காரியங்களைச் சிந்தித்து தந்தை, தாயை வணங்கி அந்த நாளைத் தொடங்கும் பண்பாட்டுச் சிறப்பை ஆசாரக்கோவையின் செய்யுள் ஒன்று கூறுகின்றது. இதனால் தான் இக் காலத்தை சேர்ந்த ஔவையும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனக் கூறுகின்றார்.

கடவுளை வணங்குவது என்பது ஒரு தனிமனிதனின் தனிப்பட்ட உரிமை. காலை யில் தமிழர்கள் தம்மைச் சுத்தம் செய்த பின்னரே தன் இஷ்ட தெய்வத்தை வணங்க முன் வருவார். மாலையில் நின்றபடி இறைவனைத் தொழுவது தமிழர் பண்பாட் டில் இல்லை என்கிறது பின்வரும் பாடல்.

"நாளந்தி கோறின்று கண்கழீஇத் தெய்வத்தை
தானறியு மாற்றாற் றொழ தொழுக அல் கந்தி
நின்று தொழுதல் பழி".

அரசன், ஆசிரியர், தாய், தந்தை, தனக்கு முன்பிறந்த தமையன் ஆகிய இவர் களைத் தேவர்கள் போல் எண்ணி வணங் கும் தமிழர் பண்பாட்டைக் குறிப்பாக ஐங்குரவர் வழிபாட்டையும் இந் நூலில் காணலாம்.

## ஆ. நீராடல்

நீராடுவது என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கும் உரியது. எனினும் ஏனைய இனத்தவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே நீராட வேண்டிய சந்தர்ப்பங்களில் பல தனித்துவங்களும் வேறுபாடுகளும் உள்ளன. அவற்றுள் நீராட வேண்டிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு கூறப்படுகின்றன.

இறைவனை வணங்குவதற்கு முன்பும், தீய கனவைக் கண்ட போதும், தூய்மை இல்லாத போதும், உண்ட உணவை வாந்தி எடுத்த பின்பும், மயிர் களைந்த பின்பும், உண்பதற்கு முன்பும், நீண்ட உறக்கத்திற்குப் பின்னரும், சிறு நீர், மலம் கழித்த பின்பும் ஒருவன் நீராடித் தூய்மை பெற வேண்டும் எனக் கூறுவதோடு

" நீராடும் போழ்தில் நெறிப்பட்டார்
எஞ்ஞான்றும் நீத்தார் உருமியார் திளையார்
விளையாடார் காய்ந்ததெனினும் தலை
யொழிந்து ஆடாரே ஆய்ந்த அறிவினவர்"

என்னும் பாடல் மூலம், நீரில் எச்சில் உமிழாமை, நீருக்குள் மூழ்கி விளையாடாமை, காய்ச்சல் ஏற்பட்ட காலத்தில் தலைக்குக் குளிக்காமை. போன்ற நீராடும்போது தவிர்க்கப்பட வேண்டியவை பற்றியும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## இ. உடை உடுத்தும் முறை

ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு இனத்தவருக்கும் தனித்துவமான உடை உடுத்தும் முறை என ஒன்றுண்டு. "ஆள் பாதி ஆடை பாதி" எனக் கூறுவது இதன் அடிப்படையிலேதான். ஒருவனது ஆடை அணியும் முறை அவனது பின்புலத்தைக் கண்டறிய உதவுகின்றது.

" உடுத்தலால்நீராடார் ஒன்றுடுத் துண்ணார்
உடுத்தாடை நீருட் பழியார் விழுத்தக்கார்
ஒன்றுடுத்து என்றும் அவை புகா தென்பதே
முந்தையோர் கண்ட முறை"


என ஆசாரக்கேவையில் உடை உடுத்தும் முறையிலே பல பண்பாட்டுக் கூறுகள் அமைந்து காணப்படுகின்றன. ஆடை அணியாமல் நீராடாமை, இரண்டு ஆடைகளையாவது அணிந்து பந்தியில் அமர்தல், தாம் உடுத்திய ஆடையை நல்ல நீரிலே பிழியாமை, ஓர் ஆடையை அணிந்து கொண்டு அவைக்குச் சொல்லாமை போன்ற தனிமனித பண்பாட்டுக் கூறுகளை மேலும் காணலாம்.

## ஈ. உண்ணும் முறை

உணவுப் பழக்கவழக்கம் பற்றி பல விடயங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

" நீராடிக் கால் கழுவி வாய் பூசி மண்டலஞ்
செய்துண்டாரே யுண்டாரெனப்படுவர்"

அதாவது நீரில் குளித்துக் கால் கழுவி, வாயைத் துடைத்து, உண்ணும் பாத்திரத்தைச் சுற்றவும் நீர் தெளித்து உண்ண வேண்டும் என்பதோடு, உணவை உண்ணும்போது கிழக்குத் திசையைப் பார்த்து உண்ணுதல், உணவை போற்றி துதித்து உண்ணுதல் என்பனவும் கூறப்படுகின்றது.



உணவை உண்ணக்கூடாத முறை கள் பற்றிக் குறிப்பிடுகையில்

"கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடை
யும் உண்ணார்"

என்று படுத்தபடி உணவு உண்ணாமை, மிகுதியாக உண்ணாமை, பசி அடங்கிய நிலையில் உண்ணாமை எனத் தனித் தனியான உணவு பற்றிய முறைமைகள் கூறப்படுகின்றன.

இவை மட்டுமன்றி தம்மை விட வயதில் பெரியவரோடு சரிசமமாகப் பந்தி

யில் அமர்ந்து உண்ண நேரிடும் போது, அவர் உண்ணத் தொடங்கும் வரை காத்திருப்பதும், அவர் உண்டு எழு முன் தான் எழுந்து செல்லாத நிலையும், பெரியோருக்கு வலப்புறத்திலே இருந்து உண்ணாமை போன்ற நெறிமுறை அடங்கிய உணவுப் பழக்க வழக்கங்கள் இதில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

மேலும் உணவருந்தும் போது இனிப்பான உணவுகளை முதலிலும், கசப்பான உணவுகளை இறுதியிலும், ஏனைய சுவையுள்ளவற்றை இடையிலும் உண்ண வேண்டும் என்பதும் பின்வரும் செய்யுள் அடியால் கூறப்படுகின்றது.

"கைப்பன வெல்லாங் கடைதலை தித்திப்ப".

நீரைப் பருகும் போது இரு கைகளினாலும் குடிக்காத தன்மையும், பெரியோரால் தரப்படும் பொருளை வாங்கும் போது ஒரு கையால் வாங்காமை, அதுபோன்று எவருக்கும் ஒரு கையால் கொடாமை போன்ற பண்புகளும் பதிவு செய்யப் பட்டுள்ளன.

## உ. உறங்கும் முறை

உறக்கம் என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. அது ஓய்வைக் குறிப்பதாகவே அமைகின்றது. இருப்பினும், தமிழர்களிடத்தே உறங்கும் முறைகள் தொடர்பாக பல்வேறு பண்பாட்டுத் தனித்துவங்கள் இருந்துள்ளன.

"வாயிற்படிக்கு நேராக கட்டிலை இட்டுப் படுக்க மாட்டார்கள்" மேலும் கட்டிலை வாயிலை நோக்கிப் போட்டு இறந்தவரையே வைத்திருப்பர். இதன் காரணமாகவே தமிழர்கள் உறங்கச் செல்லும்போது வாயிலை நோக்கி கால் நீட்டி உறங்குவதில்லை.

"கிடங்குங்காற் கைகூப்பித் தெய்வம் தொழுது வடக்கொடு கோணந் தலை செய்யார்".

என்ற செய்யுளூடாக, உறங்கும்போது இறைவனைக் கைகூப்பி வணங்கியும், வடக்குத் திசை, கோணத் திசையிலே தலை சாய்த்து உறங்கச் செல்லாதிருக்கும் செய்தியும் கூறப்பட்டுள்ளது.

இவைபோன்று தனிமனித பண்பாட்டு நிலையிலே ஆண் தன் மனைவியோடு சேர்ந்திருக்க வேண்டிய நாள், பெண் தனது கணவனை விட்டுப் பிரிந்திருக்க வேண்டிய நாள் என்பன பற்றியும் கூறி நிற்கின்றது.

## சமூகப் பண்பாட்டுக் கூறுகள்.

சமூகம் என்பது தனிமனிதனையும், அவனோடு தொடர்புபட்ட குழுமத்தையும் ஒன்றிணைக்கும் ஒரு தொகுதி என்றே கூறலாம். தனி மனித பண்பாட்டுக் கூறுகளை சமூகப் பண்பாட்டுக் கூறுகளாகவும் கருத இடமுண்டு. எனினும் சமூகப் பண்பாடு என்னும்போது ஒருவரது தனிப் பட்ட விருப்பு, வெறுப்புக்கள் மறுக்கப்பட்டு சமூக நலனே முன்னிலைப்படுத்தப்படுகின்றது. அந்த வகையிலே, இந்நூல் தமிழரது சமூகப் பண்பாட்டுக் கூறுகளைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளது.

## அ. விருந்தோம்பல்

தமிழர் பண்பாட்டின் உச்ச நிலையாக விருந்தோம்பலைக் கூறலாம். விருந்தோம்பும் பண்பாடு பற்றி இந்நூல் கூறுபவை

" விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை இவர்க்கூண் கொடுத்தல்"

இச் செய்யுளின் மூலம் தாம் உணவு உண்பதற்கு முன் பிறருக்கு உண்ணக் கொடுத்துப் பெறும் மகிழ்விலே இன்புறும் தமிழர் பண்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் தமக்காக மட்டும் உலை வைக்க மாட்டார்கள், மற்றவர்களுக்கு உழைத்துக் கொடுப்பதற்காகவே உண்ணும் இயல்பினர் என்றும், தமக்கென்று வாழாது பிறருக்கென்று வாழும் இயல்பினர் என்றும் கூறுகின்றதனைக் காணலாம்.

## கற்பு

சங்க இலக்கியங்கள் முதல்தொட்டு இக்கால இலக்கியங்கள் வரை பெண்கள் மட்டத்தில் கற்பெனும் பண்பு வலியுறுத்தப் படுவதனைக் காணலாம். ஏனைய இனப் பெண்களோடு ஒப்பிடுகையில் தமிழ்ப் பெண்கள் மத்தியில் "கற்பு" என்பது ஒரு பண்பாட்டு விழுமியமாக போற்றப்பட்டுப் பேணப்பட்டு வந்துள்ளது. காப்பியங்களில் கூட கண்ணகி, சீதை, நளாயினி எனப் பல்வேறு பெண் பாத்திரங்கள் மூலம் கற்பெனும் பண்பாடு வளர்க்கப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம்.

"தம்மேனி நோக்கார் தலையுளரா
கைந்நொடியார்
எம்மேனி ஆயினும் நோக்கார் தலைமகன்
தன்மேனி அல்லால் பிற"

என்பதனூடாக, கற்புடைய பெண்டிர் தம் கணவரின் உடலைத் தவிர வேறு ஆடவரின் உடல் அழகை இரசிக்க மாட்டார்கள். அத்தோடு பரத்தையருக்குரிய கைநொடித்தல், தலையைக் கோதி அவிழ்த்து விடுதல், தம் உடலைத் தாமே இரசித்தல் ஆகிய சொற்பாடுகளைச் செய்ய மாட்டார்கள் என அக்காலத்தே வழக்கிலிருந்த கற்பு பற்றிய சிந்தனைகள் பதியப்பட்டுள்ளன.

"வண்ண மகளிர் இடத்தொடு தம்மிடம்
ஒள்ளியம் என்பார்"

என்ற பாடலின் மூலமாக நற்குடியில் பிறந்த தமிழர் பரத்தைகள் வாழும் இடங்களுக்கு அருகே குடியிருக்க விரும்ப மாட்டார்கள் என்று கூறுகின்றது.

இவ்வாறாகத் தமிழரின் பண்பாட்டிலே போற்றப்பட்ட விருந்தோம்பல் மற்றும் கற்பு பற்றிய நிலைப்பாடுகள் குறித்து ஆசாரக் கோவையில் பல விடயங்கள் இடம் பெறுவதைக் காணலாம்.

## பண்பாட்டுக்கு விதிவிலக்கானவர்கள்

பண்பாடு தனி மனிதனாலும், சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பின்பற்றப்பட்டு வருவதனாலே நிறைவடைகின்ற ஒரு செயற்பாடாகும். இருப்பினும் இப் பின்பற்று தலை அல்லது பண்பாட்டைத் தொடர்ச்சியாகப் பேணுதலை மேற்கொள்ளப் பலராலும் பல சந்தர்ப்பங்களில் முடியாமற் போகலாம். ஆசாரக்கோவை பண்பாட்டைப் பேண முடியாமற் போகின்றவர்கள் பற்றியும் கருத்துரைத்துள்ளது.

பண்பாட்டைச் சரியான முறையில் பேண முடியாதவர்களாக அறியாத தேசத்தான், ஆதுலன் (வறியவன்), மூத்தான் (வயதில் மூத்தவன்), இளைஞன், அஞ்சினன் (அச்சப்படுபவன்) உண்பான் (போஷணைப் பிரியன்), அரச தொழிலை மேற்கொள்வோன், மணாளன், உயிரிழந்தவர்கள் ஆகியோரைக் குறிப்பிட்டுள்ளது.

அந்நிய தேசத்தான் ஒருவன் ஒரு நாட்டில் வாழ வேண்டிய நிலையில் தமிழர் பண்பாட்டைச் சரியாகக் கடைப்பிடிக்க முடியாது போகும்.

ஆதுலன் என்கின்ற வறியவனும் வறுமையின் நிமித்தம் சில தமிழர் பண்பாட்டு அம்சங்களை மீறி நடக்க வேண்டி ஏற்படும்.

மூத்தான் என்னும் வயதில் முதியோன் தனது வயது முதிர்வினால் ஏற்படும் உடல் பலவீனம் காரணமாக சில பழக்க வழக்கங்களை முறையாகக் கடைப் பிடிக்க முடியாத நிலையும், இளம் சிறுவயதி னராயின் குறிப்பாக உணவு உட்கொள்ளல், நீராடுதல், வழிபாட்டு முறைகள் மட்டில் சரியானபடி கடைப்பிடிக்க முடியாமல் போகும்.

எடுத்தவற்றுக்கெல்லாம் பயந்த சுபாவம் கொண்டவனும் உணவு உண்பதில் அதித விருப்பம் காட்டும் பேருண்டிப் பிரியனும் பழக்கவழக்கங்களைச் சீராகக் கடைப்பிடிக்க முடியாத நிலை ஏற்படும்.

மேலும் அரசியல் தொழிலில் ஈடுபடு வோர் அரசியல் விடயமாகப் பல்வேறு நாடுகளுக்கும் செல்ல வேண்டியும் பல பண்பாடுடையவர்களுடன் பழக வேண்டியும் ஏற்படுவதனாலும் பல பண்பாட்டு விழுமி யங்களைப் பின்பற்ற முடியாமலாகலாம்.

மணாளனாக இருப்பவன் திருமணம் சார்ந்த சடங்குகள் நிமிர்த்தம் மரபுமுறை களை கடைப்பிடிக்க முடியாது போகலாம்.

உயிரிழந்தவர்கள் எதையும் கடைப் பிடிக்க முடியாதவர்கள் ஆகின்றார்கள்.

மேற்கூறப்பட்டவை அந்தந்தநிலை களில் வாழும் பெண்களுக்கும் பொருந்தக் கூடியவை என்பதும் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

## பண்பாட்டைப் பேணுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள்

ஆசாரக்கோவையில் கூறப்பட்ட பல பண்பாட்டுக் கூறுகள் தமிழர்களிடத்தே அரிதாகவே வழக்கில் உள்ளன. அவற்றில் சில அழிந்தும், மறைந்தும், மறந்தும் போயின. இவற்றுக்குக் இன்னோரன்ன காரணங்கள் உள. எனினும் அவற்றுக்கு அடிப்படையான முக்கிய காரணங்களைப் பின்வருமாறு ஆராயலாம்.

கால மாற்றத்துக்கு ஏற்ப மனிதனின் அனைத்து விடயங்களும், நாகரீகங்களும் மாற்றம் அடைந்து வந்துள்ளதனைப் பண்பாட்டு வரலாற்றைப் பயில்வதன் மூலம் அறிந்து தெளியலாம். அந்த வகையிலே பண்பாடும்கால மாற்றத்துக்கு உட்படு கின்றது.

அரசியற் காரணிகளால் ஓர் இனம் தனது பண்பாட்டை, கலை கலாச்சாரத்தைப் பேண முடியாமலும் போகின்றது. யுத்தம், இடப்பெயர்வு, இன அழிப்பு, பண்பாட்டுச் சிதைப்பு போன்றவற்றின் ஊடாக பண்பாட்டை பேண முடியாத நிலை ஏற்படு கின்றது.

தாய் நாட்டைவிட்டு அந்நிய நாடுகளு க்கு, கல்வி, தொழில், உயிர் வாழ எனப் பல்வேறு காரணங்களுக்காக புலம்பெயரும் மக்களால், அந்நிய நாட்டிலே தமது மொழி, பண்பாட்டை பேணிக் காப்பதிலே பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

மிகை உற்பத்திகள் ஏற்படுகின்ற இடங்களிலே பண்பாட்டுசிதைவுகள் ஏற்படு வதனைச் சங்க இலக்கியங்களில், குறிப்பாக மருதத்திணை சார்ந்த செய்யுள்களில் தெளிவாகக் காணலாம்.

அந்நியச் செலாவணியின் வருகை, ஏற்றுமதிப்பொருளாதாரம், தன்னிறைவுப் பொருளாதாரச் சிந்தனைகள் போன்றவற் றால் அந்தஸ்துடையோர் பண்பாட்டுக் கூறு

களைத் தமது சுயதேவை, விருப்பு, வெறுப் புக்களுக்கு ஏற்ப கடைப்பிடிப்பதனையும் விமர்சித்து ஒதுக்குவதனையும் காணலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னர் நவீன சிந்தனை முறைமைகள் தோன்றிய போதிலும் அவை இன்று பெருவிருட்சமாக அனைத்து துறைகளிலும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன.

உயர்கல்வி, அறிவியல் வளர்ச்சி, கணினி அறிவு, சினிமா, சின்னத்திரை, ஊடகங்களின் பன்முக வளர்ச்சி, தொடர் பாடல் வசதிகளின் பெருக்கம். போன்றன காரணமாகத் தமிழர் தமக்கென்று சுயமான தொரு பண்பாட்டைப் பேணுவதிலே சிக்கல் களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

மொழிக்கலப்பும், பண்பாட்டுக்கலப் பும் நாளுக்குநாள் வளர்ந்து இன்று மலிந்து காணப்படுகின்றன. இருப்பினும் ஒருசார ரால் அவை இன்னமும் இறுகக் கடைப்பிடிக் கப்பட்டு வருவதனையும் காணலாம்.

## தொகுப்புரை

"பண்பாடு" என்பது ஓர் அடையாளம். மொழிக்கலப்பு, பண்பாட்டு கலப்பு என்பன ஒருவகையான இன அழிப்பாகவே அமை கின்றது. இன்றைய நவீன போக்குகளுக் கும், இலகுவான வாழ்க்கைக்கும் பழக்கப் பட்டு அடிமையாகிப்போன தமிழ் சமுதாயத் துக்குப் பண்டுதொட்டே பயின்று வந்த பண் பாட்டை பேணுவது, கடைப்பிடிப்பது என்பது மிகக்கடினமான ஒன்று.

நாளுக்கு நாள் தமிழர் பண்பாட்டுக் கூறுகள் மேற்சொன்ன காரணங்களால் மறைக்கப்பட்டும், நடை முறை வாழ்க்கைக்குச் சாத்தியம் இல்லாத னவாறு ஆக்கப்பட்டும் உருப்பெற்றுள்ளன.

எனவே இளைய சமுதாயம் பழமை யான பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்கத் தவறின். தமிழர் இருப்பும் கேள்விக்குறி யாகிப் போகும். அவர்களுக்கு விழிப்புணர் வூட்ட ஆசாரக்கோவை போன்ற பண்பாட்டு ஆவணங்கள் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். எது எவ்வாறாயினும், ஆசாரக் கோவை சாதிக்கொரு நீதி கூறாது ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயத்துக்கும் பொருந் தக் கூடிய பண்பாட்டுக்கூறுகளை மேற்கோள்காட்டிச் சென்றுள்ளது எனலாம்..

## துணை நின்ற நூல்கள்


1. ஆசாரக்கோவை,(2007), (மூலமும் உரையும்) தமிழ்ப்பிரியன், கற்பக புத்தகாலயம், சென்னை.
2. இரகுநாதன் ம.,பண்டைத்தமிழர் பண்பாட்டுத்தடங்கள், (2009), SSR பிறின்டர்ஸ், யாழ்ப்பாணம்.
3. கிரியாவின் தற்கலத்தமிழ் அகராதி, (2004),க்ரியா, சென்னை.
4. கைலாசபதி.க,பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், (1999),குமரன் புத்தகசாலை, சென்னை.
5. கொன்றை வேந்தன்,(2013), (பதிப்பு) சிவஞானசுந்தரம்.இ, இனிய தென்றல் பப்ளிக்கேசன்ஸ், கொழும்பு.
6. சண்முகதாஸ்.ம, பண்டைத்தமிழர் வாழ்வியற் கோலம், (2002),குமரன் புத்தக நிலையம், கொழும்பு.
7. வேலுப்பிள்ளை. ஆ, தமிழ் இலக்கி யத்தில் காலமும் கருத்தும்,(1999), ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.



க. சின்னத்தம்பி
(ஓய்வுநிலை கல்வியியற் பேராசிரியர்)

# உளவியல் அடிப்படைகளும் தற்காலப் பிரயோகமும்

உளவியல் பற்றிய அறிவு அனைவருக்கும் அவசியம் என்னும் நிலையில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒருவர் என்னென்ன விடயங்களின் செல்வாக்குக்கு உட்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பது பற்றியோ அல்லது என்னென்ன விடயங்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பது பற்றியோ அறிந்து கொள்ளாது, ஒருவர் தனது வாழ்க்கைப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தல் இயலாத காரியமாகும்.

பிள்ளைகளின் வளர்ப்பு முறைகளும் இளமைக்கால அனுபவங்களும் அவர்களது பிற்கால விருத்தி நிலையைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்ற காரணத்தினால் அவர்களின் ஆசிரியர்களும் பெற்றோர்களும் உளவியல் பற்றிய அறிவைத் தேடிக்கொள்ளுதல் பெரிதும் பயனுடையது. இவ்வாறான நிலைப்பாட்டின் நடைமுறைப் பயன்நோக்கி உளவியல் பற்றிய பிரதானமான சில கருத்துக்களை உள்ளடக்கியதாக இந்த ஆக்கம் அமைக்கப்பட்டுள்ளது. உளவியல் சார்ந்த அறிவுத் தேடலுக்கு இவை பெரிதும் உதவ வல்லன.

## 1. உளவியல் என்பதன் பொருள்

ஒருவரது நடத்தை, உள்ளம் என்பவை பற்றிய அறிவியல் ரீதியான படிப்பு உளவியல் ஆகும். அதாவது அவரது அறிகைகள், எழுச்சிகள், நடத்தை என்பவை பற்றியதாகும். "விலங்குகளினதும் மனிதர்களினதும் நடத்தை பற்றிய அறிவியல் முறையிலான கற்கை" உளவியலாகுமென சில உளவியலாளர்கள் வரையறை செய்வர்.

உதாரணமாக, பின்வரும் வினாக்களுக்கு உளவியல் விடை தர வேண்டும்.

- குறித்த நிலைமைகளில் மக்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர்?
- குறித்த ஒரு வகையில் நாம் செயற்படுவதற்காக எவ்வாறு சிந்திக்கின்றோம்? ஏன் அவ்வாறு சிந்திக்கின்றோம்?

- எவ்வாறு மனவெழுச்சிகள் உருவாகின்றன? பிறருடனான எமது இடைவினைகள் மீது இவற்றின் தாக்க விளைவு யாது?

நடத்தை : பொதுவாக, எம்மால் நேரடியாக அவதானிக்கப்படக்கூடிய செயல்களையும் துலங்கல்களையும் குறிப்பிடுகின்றது. நடத்தை என்பது இரு நிலைகளில் நோக்கப்படுதல் அவசியம். புறவயமாக அவதானிக்கக்கூடிய வெளிப்படையான செயற்பாடுகள் ஒரு வகையின. குறித்த உயிரி பெறுகின்ற அனுபவம் மற்றையது. பின்னைய வகையினைப் புறவயமாக அவதானித்தல் இயலாது. மாறாக, அவதானிக்கப்படும் நடத்தை ஊடாக அனுமானஞ் செய்யப்படுகிறது.

உளம் : சிந்தனைகள் உணர்வுகள் போன்ற அகநிலைகள், உளத் தொழிற்பாடுகள் என்பவற்றைக் குறித்து நிற்பது. அகநிலைகள், தொழிற்பாடுகள் என்பவை நேரடியாக காண முடியாதவை. அவதானிக்கப்படக் கூடிய, அளவிடப்படக் கூடிய துலங்கல்களிலிருந்து அனுமானிக்கப்படுபவை.

எனவே, எமது வாழ்வின் ஒவ்வோர் அம்சத்துடனும் உளவியல் தொடர்புடையது உளவியல் எனலாம்.

## 02. உளவியலின் இலக்குகள்

- மக்களும் ஏனைய உயிரினங்களும் எவ்வாறு நடந்து கொள்கின்றன என்பதனை விபரிக்கும் பொருட்டு
- இந் நடத்தைகளுக்கான காரணங்களை விளங்கிக் கொள்ளும் பொருட்டு
- என்ன நடந்தது? ஏன் நடந்தது? என்பவற்றுக்கு அப்பாற் சென்று, குறித்த நிலைமைகளில் மனிதனதும் விலங்குகளினதும் நடத்தைகள் எதிர்காலத்தில் எவ்வாறு இருக்குமென எதிர்வு கூறும் பொருட்டு.
- என்ன நடந்தது? ஏன் நடந்தது? என்ன நடக்கும்? என்பவற்றுக்கான காரணங்களை அறிந்து, அந் நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு.
- உளவியலறிவைப் பிரயோகித்து நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதனூடாக மனிதநல மேம்பாட்டை பெற்றுக்கொள்ளும் பொருட்டு.

என ஐந்து பிரதான நோக்கங்களை மையமாகக் கொண்டு உளவியலறிவு ஈட்டப்படுகின்றது.

## 03. உளவியலின் கிளைகள்.

உளவியலானது, தனியான ஒரு கல்விக்கற்கை ஒழுங்காக 1880களில் தோற்றம் பெற்றது. எனினும் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பெரும்பாலான உளவியலாளர்கள் தமது செயற்பாடுகளைக் கற்பித்தல், ஆய்வுகள் என்பவற்றுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தியிருந்தனர். 1950கள் தொடக்கம் புதிய பிரயோக உளவியல் துறைகள் வெளிக்கிளம்ப ஆரம்பித்தன. இவற்றினைப் பொது உளவியல், பிரயோக உளவியல் என இரு பிரிவுகளாக நோக்க முடியும்.

பொது உளவியல் - அடிப்படை உளவியல் எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் என்பன இங்கு நோக்கப்படுகின்றன. தொடக்ககாலத்தில் உளவியல் ஆய்வுகளின் பொருட்டு கீழின விலங்குகள் பறவைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறான ஆய்வுகளின் ஊடாகப் பெறப்பட்ட முடிவுகள் மனித நடத்தைகளுக்கு விளக்கமளிப்பதற்கு பயன்படுத்தப்பட்டமை இங்கு நோக்கற்பாலது.

பிரயோக உளவியல் - பொது உளவியற் புலத்தில் எடுத்தாளப்படும் உளவியல் எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் என்பன குறிப்பான துறைகளில் அல்லது நிலைமைகளில் பிரயோகப்படுத்துதல் தொடர்பானது பிரயோக உளவியல் ஆகும். சமூகச் சூழலில் பெரும்பாலான ஆய்வுகள் அமைவதனை நாம் இங்கு அவதானிக்கலாம்.

## உளவியலின் கிளைகள்

உளவியலில் தனித்துவமான, தெளிவான வரையறையுடன் கூடிய பல கிளைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் உளவியல் வினாக்கள், பிரச்சினைகள் என்பவற்றை வெவ்வேறு வரையறையில் நோக்குகின்றன. ஆயினும் மனித சிந்தனை மற்றும் நடத்தை பற்றி விளக்கமளிப்பதில் ஒரு பொது இலக்கை இவை கொண்டுள்ளன. பிரதான கிளைகளும் சில இங்கு தரப்படுகின்றன.

*** பிறழ்நிலை உளவியல்:**

மனிதனின் வழமைக்கு முரணான நடத்தைகள் தொடர்பாக அக்கறை காட்டப்படுகின்றது. பெரும்பாலும் சீர்மியர்கள், உளச்சிகிச்சை உளவியலாளர்கள், உளச் சிகிச்சையாளர்கள் ஆகியோர் இத்துறையிற் பணி புரிபவர்களாவர்.

*** நடத்தை உளவியல்:**

நிபந்தனைப்படுத்தல் எனும் செயற்பாட்டின் ஊடாக நடத்தைகள் யாவும் உருவாகுவதாகக் கொள்ளப்படுகின்றது. இக்கொள்கையின் முக்கியத்துவம் இன்று நலிவுற்றுக் காணப்படுகின்ற போதிலும் இத்துறைசார் உத்திகள் பல உளச் சிகிச்சை, கல்வி ஆகியவற்றின்பால் இன்றும் பிரயோகத்திலுள்ளன.

*** உயிரியல் உளவியல்:**

மனித நடத்தையில் மூளையின் செல்வாக்கு எத்தகையது என ஆராயும் இத்துறையானது உடற்தொழில் உளவியல் என்றும் அழைக்கப்படுகின்றது.

*** அறிகை உளவியல்:**

ஊக்கல், பிரச்சினை விடுவித்தல், தீர்மானமெடுத்தல், சிந்தித்தல் கவனம் போன்ற அக நிலைமைகளில் அக்கறை செலுத்தும் துறை இதுவாகும். பலரின் கவனத்தையும் ஈர்க்கின்ற ஒரு துறையாக இது வளர்ந்து கொண்டிருக்கின்றது.

*** ஒப்பியல் உளவியல்:**

விலங்குகளின் நடத்தைகள் பற்றிய ஆய்வுகளில் அக்கறை செலுத்துகின்றது இத்துறை. விலங்கு நடத்தை பற்றிய அறிவானது, மனித நடத்தை பற்றி அகலமாகவும் ஆழமாகவும் விளக்கம் பெறுவதற்கு வழியமைக்கின்றது.

*** விருத்தி உளவியல்:**

இத்துறையானது பிள்ளைப்பருவம் தொடக்கம் முதிர் பருவம் வரையிலான வாழ்க்கைக்காலம் முழுவதிலும் ஏற்படும் விருத்தி பற்றி நோக்குகின்றது. தனது வாழ்க்கைக் காலத்தில் மனிதன் ஏன்? ஏவ்வாறு? மாற்ற முறுகின்றான் என்பதனை விளங்கிக்கொள்ளுதலும் விளக்கமளித்தலும் பற்றி இங்கு நோக்கப்படுகின்றது. உடல்விருத்தி, அறிவாற்றல் விருத்தி, மனவெழுச்சி விருந்தி, சமூக விருத்தி, புலக்காட்சி விருத்தி, ஆளுமை விருத்தி ஆகியன உட்பட மனித வளர்ச்சியின் சகல அம்சங்களும் இங்கு உள்ளடங்குகின்றன.

✳ **கல்வி உளவியல்:**

பாடசாலைகள், கற்பித்தல், கற்றல், மாணவர், ஆசிரியர், பெற்றோர், நிர்வாகிகள் என்றவாறு பல்வேறு கல்வி சார்ந்த எல்லா விடயங்களுடனும் அக்கறை காட்டுவது இப்பிரிவு.

✳ **பரிசோதனை உளவியல்:**

மனித மேம்பாட்டை முதன்மை நோக்காகக் கொண்டு மனிதனது மூளை நடத்தை என்பவை பற்றிய ஆய்வுகளில் அறிவியல் சார் முறைகளைப் பின்பற்றும் துறையாக இது.அமைகின்றது.

✳ **சட்ட உளவியல்:**

உளவியல் மற்றும் சட்டம் என்பனவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றியதான ஒரு சிறப்புத் துறையாக இது அமைகிறது. நீதிமன்றத்தில் உளவியல், குற்ற நடத்தை பற்றிய கொள்கைகள், குற்றத் தடுப்பு உத்திகள் ஆகிய மூன்று முக்கிய வகைப் பிரயோகங்கள் சட்ட உளவியலில் கூடுதலான கவனத்தைப் பெறுகின்றன.

✳ **ஆளுமை உளவியல்:**

ஒவ்வொரு மனிதனையும் தனித்துவமானவனாக ஆக்குகின்ற அவனது சிந்தனைக் கோலங்கள், உணர்வுக் கோலங்கள், நடத்தைக் கோலங்கள் என்பவற்றில் இப்பிரிவு கவனஞ் செலுத்துகின்றது. கிக்மண்ட் பிராய்ட் முன் வைத்த உள சமூக விருத்திக் கொள்கை என்பன இத்துறை சார்ந்த பிரபலமான இரு கொள்கைளாகும்.

✳ **சமூக உளவியல்:**

சமூக நடத்தையை விளங்கிக் கொள்ளுதலையும் அதற்கு விளக்கமளித்தலையும் முன்னெடுப்பதாக இப்பிரிவு அமைகின்றது. குழு நடத்தை, சமூக இடைவினைகள், தலைமைத்துவம், சொல்சார் தொடர்பாடல், தீர்மானமெடுத்தலில் சமூகஞ்சார் செல்வாக்கு போன்ற விடயங்கள் இங்கு நோக்கப்படுகின்றன. ஏனையவர்களின் உண்மையான, கற்பனையான அல்லது உணரப்பட்ட பிரசன்னத்தின் காரணமாக மக்களின் சிந்தனைகள், உணர்வுகள், நடத்தைகள் என்பன எத்தகைய செல்வாக்குக்கு உட்படுகின்றன என்பது பற்றிய ஓர் அறிவியல் ரீதியான கற்கை சமூக உளவியல் ஆகும்.

✳ **சீர்மிய உளவியல்:**

பொருத்தமான தெரிவு அல்லது மாற்றத்தை மேற்கொள்வதற்கான அல்லது மனத்தெளிவின்மையைத் தாழ்த்துதற்கான ஆற்றலை ஒருவரிடத்து ஏற்பட வைத்தல் சீர்மியச் செயற்பாடு ஆகும். ஆலோசனை கூறல், ஆற்றுப்படுத்தல், உளவளத்துணை ஆகிய பதங்களும் இதனையே குறித்து நிற்பன. சீர்மியநாடிக்கு அறிவுரைகளோ அன்றி நெறிப்படுத்தலோ இங்கு வழங்கப்படுவதில்லை. இது ஒரு வகையில் ஒரு கலந்துரையாடலே உள்ளத்துள் அடக்கி வைக்கப்பட்ட கோபம், பதகளிப்பு, துக்கம் போன்ற எதிர் மனவெழுச்சிகள் வலுவடைந்து காணப்படுதல் குறித்த ஆளுக்கு தீங்கு விளைவிப்பவையாக அமையலாம். இவற் றினை விரிவாக ஆராய்ந்து, குறித்த நபர் தன்னை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு உதவும் வகையிலான கலந்துரையாடலுக்கு சமூக உளவியல் பற்றிய அறிவு பெருந்துணை புரிகின்றது.

## 4. உளவியலின் பிரயோகம்

பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் மட்டுமன்றி வைத்தியசாலைகள், சிகிச்சை நிலையங்கள், சீர்மிய முகவர்கள், விசேட ஆய்வு நிறுவனங்கள், பாடசாலைகள், சிறைக்கூடங்கள், அரச திணைக்களங்கள், வியாபார மற்றும் கைத்தொழில்

தாபனங்கள் எனப் பல இடங்களிலும் உளவியலாளர்கள் பணியாற்றத் தொடங்கினர். சிலர் இதனைச் சுயதொழிலாகவும் கொண்டனர். அதாவது மனிதனின் நாளாந்த வாழ்வியற் பிரச்சனைகளுக்கு உளவியலின் பிரயோகம் விரைவு கண்டது. நாளாந்த வாழ்வில் உளவியலைப் பிரயோகிப்பதற்கான சில வழிமுறைகள்

உளவியலென்பது மாணவருக்கும் புலமையாளருக்கும் உளச்சிகிச்சையாளருக்கும் மாத்திரம் தானா? பரிசோதனைகள் ஆய்வுகள் என்பவற்றின் பெறுபேறுகள் நாளாந்த வாழ்விலும் பிரயோகிக்கப்படக் கூடியன. உளவியலை நாளாந்த வாழ்வில் பிரயோகிக்கக்கூடிய சில வழிமுறைகள் உதாரணமாக இங்கு தரப்படுகின்றது.

- ஊக்கலுக்குள்ளாக
- தலைமைத்துவ திறன்களை மேம்படுத்த
- சிறந்த தொடர்பாளராக
- பிறரை நன்கு விளங்கிக் கொள்வதற்கு கற்றுக்கொள்ள
- மிகத்திருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ள
- உங்கள் ஞாபகத்திறனை சீர்படுத்துக
- புத்திசாலித்தனமான நிதிசார் தீர்மானங்களை மேற்கொள்ள
- உங்கள் பணியில் சிறந்த பெறுபேற்று நிலைகளைப் பெற்றுக் கொள்ள
- உயர் உற்பத்திதிறனுடையவராக
- உடல் நலம் மிக்கவராக

ஆளுமை விருத்தியுடன் தொடர்புடைய பிரதான உளவியல் எண்ணக் கருக்கள் சில.

**மனவிரக்தி**

ஒருவரின் செயலுக்கு அல்லது அடைய விளையும் இலக்குத்தடை ஏற்படும் போது அவரிடம் தோன்றும் உணர்வு விரக்தி எனப்படும். இத்தடையானது புறவிசை (புறக்காரணிகள்) காரணமாகவோ அகவிசை (அகக்காரணிகள்) காரணமாகவோ ஏற்படலாம். உண்மையாக என இல்லாது கற்பனையான முறையிலும் அகக் காரணிகள் அமையலாம். பெரும்பாலான நிலைமைகளில் உளக்காரணிகளே விரக்தி ஏற்படுவதற்குக் காரணமாகின்றன. பொறாமை, பயம், குற்ற உணர்வு, நம்பிக்கையின்மை, தோல்வி, தனிமை, துரோகம், வெட்கம், இயலாமை உணர்வு போன்ற எதிர்மனவெழுச்சிகள் தொடர்ந்தும், தீவிரமாகவும் அமைவதால் உண்டாகும் மனவெழுச்சி சமநிலையின்மையின் வெளிப்பாடே மனவிரக்தி ஆகும்.

**அறிகை ஒத்திசையின்மை:**

ஒருவர் தனது அறிகைகளிடையே உறுதித்தன்மை இல்லாமையை அவதானிப்பதன் காரணமாக அவரிடத்து இனிமையற்ற உணர்வு எழுதல் அறிகை ஒத்திசையின்மை எனப்படும். தனது சுய எண்ணக் கருவுக்கும் தனது நடத்தைக்கும் இடையே வேறுபாடு அவதானிக்கப்படும் வேளையில் இந்த ஒத்திசையின்மை .மிக வலுவாகக் காணப்படும். ஒத்திசையின்மையானது, மனப்பாங்கில் மாற்றம், நடத்தையில் மாற்றம், சுயஉறுதிப்பாடு அல்லது நடத்தையை நியாயப்படுத்துதல் போன்றவற்றை ஏற்படுத்தலாம். தன் செயலுக்காக ஒருவன் வெட்கப்படல். இதன்போது இந்நபர் சுய நியாயப்படுத்தலில் ஈடுபடுவதைக் காணலாம். எம்மில் பலர் நம்மைப் புத்திசாலிகள் எனவும் நியாயமானவரெனவும் நம்புகிறோம். எனவே முட்டாள் தனமானதும் சுய அழிவை ஏற்படுத்தக் கூடியதுமான செயலெ

தனையும் செய்யும் எண்ணமானது ஒத்திசையின்மையை ஏற்படுத்துகின்றது. இவ் அசௌகரியமான மன அழுத்தத்தைக் குறைக்கும் பொருட்டு "எப்படியோ ஒரு நாள் இறக்க வேண்டியவன் தானே எனவே பரவாயில்லை" என்பன போன்ற சாட்டுக்களை முன்வைக்கின்றனர்

**✸ தன்னியல் கௌரவம் :**

தன்னியல் கௌரவம் என்பது ஒருவரிடத்தே ஏற்படுகின்ற ஒரு வகை உணர்வு ஆகும். ஒருவர் தன்னைப்பற்றித் தானே பெற்றுக்கொள்ளுகின்ற அபிப்பிராயம் எனவும் இதனைக் குறிப்பிடலாம். ஒருவர் தன்னைப்பற்றி ஒரு சிறந்த அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொண்டாராயின் உயர் தன்னியல் கௌரவம் அவரிடத்தில் ஏற்பட்டுள்ளது எனலாம். அதாவது தமது பலங்களையும் பலவீனங்களையும் உண்மையாகவே ஏற்றுக்கொள்ளவும், அதேவேளை எவ்வித சந்தேகமுமின்றி தான் பெறுமதி மிக்கவர் தான் என்பதில் உறுதியாயிருத்தலுக்குமான ஆற்றலைக் கொண்டிருத்தல். பிள்ளைப் பருவத்திலேயே தன்னியல் கௌரவம் பெருமளவு விருத்தி காண்கின்றது என்பது துறைசார் வல்லுநர்களின் கருத்தாகும்.

**✸ கற்றல் :**

கற்றல் என்பது அனுபவத்தினூடாக அறிவைப்பெறல் எனப் பொருள்படும். அதாவது கற்போனிடத்து ஆரம்பத்தில் காணப்பாடாத அறிவுக்கூறு இப்போது உண்டு என்பது நியாயிக்கப்படுகின்றது. கற்றல் எவ்வாறு நிகழ்கின்றது? எவ்வாறு மேம்படுத்தப்படலாம்? என்பன போன்ற இன்னோரன்ன வினாக்களுக்கு விடைதர முயல்கிறது கல்வி உளவியல். ஒவ்வொரு சிந்தனாகூடமும் கற்றல் தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களையும் செயற்பாடுகளையும் வலியுறுத்தி நிற்கின்றன. நடத்தையியல் வாதிகள் நிபந்தனைப்படுத்தல் முறையிலும், கெஸ்டால்ற்வாதிகள், அகக்காட்சி முறையிலும், களக்கொள்கையினர் உளவியல் விசைகள் சார்பாகவும் கற்றல் நிகழ்வதாக என்றவாறு விளக்கம் தருகின்றனர்.

**✸ ஊக்கல் :**

குறித்த ஒரு செயலில் ஈடுபடுவதற்கான ஓர் உந்துசக்தி அல்லது உளவிசை எனலாம். இந்த உளச் செயற்பாட்டினை விளக்குவதற்கு இயல்பூக்கக் கொள்கை, தேவைக் கொள்கை, உளப்பகுப்பாய்வுக் கொள்கை, மானிடவியற் கொள்கை எனப் பிரபலமான ஊக்கற் கொள்கைகள் பல உள.

**✸ ஞாபகம் :**

பெற்றுக்கொண்ட அறிவை நனவு நிலைக்கு கொண்டு வருதல் ஞாபகப் படுத்தல் ஆகும். மனிதனுக்கு மிகவும் இன்றியமையாத ஒரு சொத்து என இதனைக் குறிப்பிடலாம். ஞபாகத்துடன் தொடர்புடைய காரணிகள், அதனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி அறிவதற்கும் பயன்பெறவும் உளவியலறிவு உதவுகிறது.

**✸ உளச்சீராக்க முறைகள்:**

தோல்விகளைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் மனவெழுச்சி, விரக்தி ஆகிய வற்றின் ஆதிக்கத்தைத் தாழ்த்தும் நோக்கில் மனிதன் சில உளச்சீராக்க உத்திகளைப் பின்பற்றுகிறான். எதிர்த்தல், பின்வாங்குதல் என இரு வகையான இவை அவனது பிரச்சினைகளைத் தீர்ப்பவை அல்ல. தாக்கத்தின் வலிமையைத் தாழ்த்த வல்ல போலியான, தற்காலிக செயற்பாடுகளாகும். உளச்சீராக்க முறைகள் பல உள்ளன. நியாயங்காணல் என்பது

பொதுவாக எல்லோராலும் பின்பற்றப்படும் ஒரு முறையாகும்.

✸ **சமூக இடைவினை :**

இருவர் அல்லது அதற்கும் மேற்பட் டோருக்கிடையே இடம்பெறுகின்ற செயல் கள் அல்லது தொடர்பற்ற செயற்பாடுகள் சமூக இடைவினைகள் எனப்படும். இங்கு ஒவ்வொருவர் மனத்திலும் மற்றவரின் பிரசன்னம் உணரப்படுத்தல் அவசிய மாகும். அதாவது ஒவ்வொருவரும் மற்ற வரின் அனுபவங்கள் அல்லது உத்தேசிப் புக்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும் அல்லது அவற்றில் தாக்கவிளைவை ஏற்படுத்த வேண்டும்.


இதன்பொருட்டு அவர்கள் ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்க வேண்டுமென்ற அவசியமும் கிடையாது. உதாரணமாக தொலைதூரத்தில் உள்ள நண்பர்கள் ஒருவருக்கொருவர் கடிதங்களை எழுதும் போதும் சமூக இடைவினை இடம் பெறுகின்றது. தொழிற் போட்டி கொண்ட இருவரில் ஒருவரின் தொழில்சார் பணியை மற்றவர் புறக்கணித்தலும் சமூக இடைவினைக்கு ஓர் உதாரணமாகும்.

✸ **விருத்திப்பணிகள் :**

தற்கால சமூகங்களில் ஒவ்வொரு வரும் தமது வாழ்க்கைக் காலம் முழுவது மூடாக கற்க வேண்டிய ஏராளமான பணிகள் மனித விருத்தியை இயைபுபடுத்துகின்றன எனும் கருத்துக்கு அமைவாகவே விருத்திப் பணி எனும் எண்ணக்கரு அமைகிறது. ஒவ்வொரு வளர்ச்சிப்படி நிலையிலும் கற்றுக்கொள்ள வேண்டிய விருத்திப்பணி களை உளவியலாளர்கள் குறிப்பிட்டுள் ளனர்.

இவ்விருத்திப் பணிகளை வெற்றி கரமாக நிறைவேற்றும் பட்சத்தில் அவர்கள் சந்தோசத்தை அடைவதுடன் பின்னர் வர வுள்ள பணிகளையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பர். விருத்திப்பணிகளை வெற்றி கரமாக நிறைவேற்ற முடியாதவர் கள் துன்பத்தை அனுபவிப்பராகவும் சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெறமுடியாத வராகவும் பின்னர் சந்திக்கும் பணிகளில் தோல்விகளைச் சந்திப்பவராகவும் காணப் படுவர்.

தனியாளின் தேவைக்கும் சமூத்தின் கேள்விக்குமிடைப்பட்ட நிலையில் விருத்திப்பணிகள் இருப்பதனை நாம்



உணர வேண்டும். செயற்துடிப்பான கற்போன் செயற்துடிப்பான சூழலுடன் இடைவினையுறுவான் என இங்கு கருதப் படுகிறது.

**உசாத்துணைகள்**

1. க.சின்னத்தம்பி, க.சுவர்ணராஜா (2011) அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும், கொழும்பு, சேமமடு பதிப்பகம்.

2. Kolb, David (1984) Experiential learning: Experience as the source of learning and development. Englewood cliffs, NJ: Prentice – Hall.

# ரியூசன்



வேதநாயகம் தபேந்திரன்

"ரியூசன் கல்வி" என்ற சொல்லை அறியாதவர் எவருமில்லை எனலாம். நானும் ஒரு ரியூசன் செல்லும் மாணவனாக இருந்துள்ளேன். தற்போது ரியூசனுக்குச் செல்லும் இரு பிள்ளைகளின் தந்தையாகவும் உள்ளேன்.

ஆதலால் எனது ரியூசன் கால நினைவுகளை இரைமீட்டு அசைபோட்டு, அதன் பின்னர் எனது பிள்ளைகளின் ரியூசன் காலத்தையும் தரிசிக்கின்றேன்.

தனியார் கல்வி நிறுவனம் (Tution center) பாடசாலைக் கல்வியில் பின்தங்கி யிருக்கும் மாணவர்களின் கல்வித் தேவையை நிறைவு செய்ய உருவானது.

அதாவது மாணவனுக்கு குறை நிரப்புக் கல்வியை வழங்க உருவாகிய நிறுவனமே "ரியூசன் சென்ரர்" எனப் பொதுமக்களால் அழைக்கப்பட்டு வருகின்றது.

இன்று இலங்கை முழுவதும் தனியார் கல்வி நிலையங்கள் இருந்தபோதிலும் இந் நிறுவன அமைப்பு வேர்விட்டு வளர்ந்து விருட்சமாகிய ஆரம்ப இடம் யாழ்ப்பாணம் தான் எனலாம்..

1980 களின் முற்பகுதியிலே தான் எனது ரியூசன், பிரவேசம் அமைந்தது. யாழ்நகரில் ஆசிரியவளம் நிறைந்த முன்னணிக் கல்லூரி ஒன்றில் நான் கல்வி கற்றேன். அந்த பாடசாலையில் திருப்தி யடையக் கூடியளவிற்கு கல்வியை வழங்கும் நல்லாசிரியர்கள் நிறைந்து இருந்தனர்.

காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரையும் பாடசாலை நடைபெற்ற காலம் அது. பிற்பகல் 4.30 மணியளவில் தான் என்னால் பாடசாலையில் இருந்து வீடு வர முடியும். ரியூசன் ஒரு "பஷனாக" பரவி வந்த காலம் அது. நான் ஆறாம் ஆண்டு படித்த காலம் முழுவதும் ரியூசன் போக

வில்லை. மாலை முழுவதும் விளையாட்டென ஆனந்தமாக பொழுது கழிந்தது. ஏழாம் வகுப்பிற்கு நான் வந்தபோது, எனது தந்தையார் “அயல் அண்டையாரின் பெடி பெட்டைகள் எல்லாம் ரியூசனுக்குப் போகுதுகள். உங்கட பெடியன் ஏன் போகவில்லை” என்ற புறுபுறுப்புக் கேட்டு என்னையும் ரியூசன் சென்ரர் ஒன்றில் சேர்க்க, தானே சென்று அனுமதி பெற்று வந்தார்.

எனது வீட்டிலிருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் ரியூசன் நிலையம் இருந்தது. முதல் நாள் தனது சைக்கிளில் என்னை ஏற்றிச் சென்று இறக்கினார். பின்னர் நானே ஓரிரு நாட்கள் ஒழுங்காகப் போவது போலப் பாசாங்கு செய்தேன். பின் இடையிடையே பாடசாலைப் பாடக்குறிப்பை ரியூசன் கொப்பியில் எழுதி விட்டு மாலை முழுவதும் விளையாட்டாகப் பொழுதைக் கழித்தேன். பத்தாம் வகுப்பு, பதினொராம் வகுப்பு வர சாதாரண பரீட்சை வருகிறதெனக் கவனமெடுத்துப் படித்தேன்.

அக் காலத்தில் ரியூசன் நிலையங் கள் பெரும்பாலும் கிடுகால் வேய்ந்த ஓலைக் கொட்டகைகளாகத் தான் இருந்தன. ரியூசன் அனுமதிக் கட்டணத்தினை சேரும் முதல் வருடத்தில் வாங்கினால் பின்பு வரும் வருடங்களில் வாங்க மாட்டார்கள்.

மாணவன் ஒருவரின் அடைவு மட்டத்தைப் பார்த்து தனிக் கவனம் எடுத்து கரை சேர்க்க முயற்சிப்பார்கள். ரியூசன் வராத மாணவர்களின் வீடு தேடிப்போய் வகுப்பிற்கு வரச் சொல்லி வற்புறுத்தி கவனம் எடுத்துக் கொள்வார்கள்.

மாதாந்தக் கட்டணத்தை வாங்குவதற்கு தயாராக நின்று மாணவரையும் பெற்றோரையும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் பண்பு அப்போது மிகக் குறைவானதாகவே இருந்தது.

திறமையுள்ள வறிய மாணவர்களுக்கு இலவசமாகக் கற்பிக்கும் ரியூசன் நிலையங்கள் அப்போது அதிகமாக இருந்தன.

வாணி விழா, பரிசளிப்பு விழா தவிர வகைவகையான விழாக்களை உருவாக்கி பணம் வசூலிக்கும் பண்பு மிகக் குறைவானதாக இருந்தது.

உயர்தரம் படித்த, வேலையற்ற பட்டதாரிகள் ரியூசன் துறையில் பெருமளவு இருந்தார்கள். பிரபல கல்லூரிகளில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கல்லூரியில் கற்றலை விசுவாசமாக மேற்கொள்ளாது “ரியூசனுக்கு வா வடிவாகப் படிப்பிக்கின்றேன்” எனக் கூறும் பண்பும் மிகக்குறைவாகவே காணப்பட்டது.

மாணவத் தலைவர் முறை, வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நடாத்திய ரியூசன் நிலையங்களும்கூட இருந்தன.

பெற்றோர், ரியூசன் நிலைய ஆசிரியர், நிர்வாகிகளுக்கிடையில் நல்லுறவு மிகப் பலமாக இருந்தது.

இன்றையதைப் போன்று வாழ்க்கை வசதிகள் மலையளவு உயராத அந்தக் காலத்தில் பெற்றோர் தாழ்வுச்சிக்கலுக்கு உட்படுவதைக் குறைக்கும் நடத்தைக் கோலங்கள் பின்பற்றப்பட்டன.

காலம் மாறியது, காட்சியும் மாறியது, தற்காலத்தில் ஓலைக் கொட்டில் ரியூசனை எங்காவது கிராமப்புறத்தில் காண முடியும். நிரந்தர அல்லது அரை நிரந்தரக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டு பாடசாலைகளுக்குப்

போட்டியான நிலையங்களாக ரியூசன் நிலையங்கள் ஆகி விட்டன.

மாணவர்களைக் கட்டாயப்படுத்தி முழுப்பாடங்களையும் எடுக்கச் செய்து பணம் பெறும் கட்டாய வியாபாரம் தற்பொழுது நடக்கின்றது. நிர்வாகிகள் அனுமதிக் கட்டணம் என்ற பெயரில் ஒரு குறித்த தொகையை வருடா வருடம் மாணவனிடம் வசூலித்து தமது பையினுள் போடுகின்றனர்.

O/l, A/L வகுப்புக்களுக்கு மட்டும் மாணவன் ரியூசனுக்குபோன காலம் மலை யேறிவிட்டது. முன்பள்ளிப் பருவத்திலேயே ரியூசன் செல்லும் நடைமுறை வழக்கத்தில் வந்துவிட்டது. முதலில் முதலாம், இரண்டாம் வகுப்பு எனத் தொடங்கிய இம் முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெரும் பலப் பரீட்சையானது.

இத் தரத்தில் பயிலும் பெற்றோருக்கு மனச் சுமையும், பணச் சுமையும் மிக அதிகம். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை யில் வெட்டுப் புள்ளிகளைத் தாண்டிய மாணவர்களின் பெற்றோரிடம் பண வசூலிப்பு, ஆண் ஆசிரியருக்கு சேட், பெண் ஆசிரியருக்கு சாறி அன்பளிப்பாக வழங்குதல், எழுத்தில் எழுதாத கட்டாய நடைமுறைகள்.

இதனைக் கொண்டாட மாபெரும் வெற்றி விழா. பாடசாலைகளிலும் இதே நிலை தான். பெற்றோருக்கு மனநிறைவு ஒரு பக்கம். பணச் சுமை ஒரு பக்கம். வெட்டுப் புள்ளியை எட்டிப் பிடிக்காத மாணவச் செல்வங்களின் ஆர்வங்கள், ஆற்றல்கள் கருக்கப்படும் நிலை.

கால்கோள் விழா, ஆசிரியர் தினம், வாணி விழா, பரிசளிப்பு விழா, கல்விச் சுற்றுலா, அந்த தினம், இந்த தினம் என வசூலிப்புக்கள் பலரகம்.

இந் நடைமுறைகளால் ஏராளம் பெற்றோர்கள் மிவும் சலித்து களைத்துப் போய் விடுவார்கள். வருடம் முழுவதும் ஓரிரு ஆடைகளுடன் மாணவன் போய் வர முடியாத நிலை. கலர் கலராக ஆடைகள் உடுத்தி "ஸ்ரைல்" காட்ட வேண்டிய நிலை. தேவைகள் பெருக என்ன செய்வதென பெற்றோர்கள் தடுமாறும் நிலை.

மேற்கத்தேய நாகரிகம், இணையம் வழியாக அண்ட்ராய்ட் (Android) தொலைபேசி மூலம் உள்ளங்கைக்குள் வர மாணவனும் அதன் வயப்பட்டுப் போகின் றான். இது ரியூசன் எல்லைக்குள் பழக்கப்பட அது மாணவனது ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது.

ரியூசனில் ஆசிரிய மாணவ உறவு நிலைகளும் ஒப்பீட்டளவில் சீரழிவு நிலையை அடைந்து விட்டது.

கொழும்பு போன்ற மாநகரங்களில் உயர்தர வகுப்பு மாணவர்களைத் தம்வசம் கவர்ந்திழுப்பதற்காக மதுபாவனையில் சில மாணவர்களுடன் தாமும் பகிர்ந்து பங்கு கொள்ளும் சில ஆசிரியர்களும் இருப்ப தாகப் பெற்றோர்கள் குறைபடுகின்றனர்.

பிரபல முன்னணி கல்லூரிகளில் ஆசிரியவளம் நிறைவாக உள்ளது. அனைத் துப் பாட ஆசிரியர்களும் திறமையாகக் கற்பித்தாலும் கூட மாணவன் ரியூசனுக்குப் போவதில் அதிக அக்கறை காட்டுகின்றான். அங்கே ஏதோ அதி விஷேசம் உள்ளதாக

வும் அதனை அவன் பார்க்க அவசரப்படுவதாகவும் தோன்றுகின்றது. இது ஒரு உளவியல் சார்ந்த விடயமாகும். எமது காலத்தில் க.பொ.த. சாதாரண தரம் பரீட்சைக்குத் தோற்றி உயர்தரம் படிக்கத் தகுதி பெறாத மாணவர்கள் ரியூசன் நிலையங்களில் பேப்பர்கிளாஸ் (Paper class) எனும் வகுப்பிற்கு சென்றனர்.

ரியூசன் நிலையங்கள், தனியார் பாடசாலை போன்ற அமைப்புடன் இயங்கி அவர்களை சாதாரண பரீட்சையில் சித்திபெற வைத்து கரை சேர்க்கும் வேலையைத் திறம்படச் செய்தன.

பண மீட்டும் இலாப நோக்கம் பெருமளவிற்கு இருந்தாலும் கூட கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் போன்ற முக்கிய பாடங்களில் கவனமெடுத்து மாணவரைத் திறம்படச் சித்திபெற வைத்தார்கள்.

சாதாரண பரீட்சை 2,3,4 முறைகள் எழுதி உயர்தரத்திற்கு தகுதி பெறும் நிலை அப்போது ஏளனமாகப் பார்க்கப்படவில்லை. இந்த "பேப்பர் கிளாஸ்" எனப்பட்ட அமைப்புமுறை தற்போது மிகப் பெருமளவில் ஒழிந்து விட்டது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாக வேண்டுமென்ற அவா, போட்டா போட்டி நிலை எமது காலத்தில் மிக உயர்வாக இருந்தது.

உயர்தரப் பரீட்சையை 2ஆம், 3ஆம் முறை எழுதுவது மிகப் பெருமளவிற்கு இருந்தது. "வெளிவாரிப் பட்டப்படிப்பு" என்ற ஒரு கல்வி அலகு இயங்குவது தெரியாத மாணவர்களே மிகப் பெருமளவில் அக்காலத்தில் இருந்தார்கள். இதனால் பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமென்ற ஒரே நோக்கில் ரியூசனுக்கு சென்று உயர்தரப் பரீட்சையை 2ஆம், 3ஆம் முறையும் எழுதும் மாணவர்கள் தொகை அதிகமாக இருந்தது. ஆனால் தற்போது இப் பரீட்சையை 2ஆம், 3ஆம் முறை எழுதும் போக்கும் விருப்பும் குறைவடைந்து விட்டன.

வெளிவாரிப் பட்டப்படிப்பு, உயர் தொழிநுட்பக் கல்லூரிகளில் டிப்ளோமா படிப்பு, கணினிசார் தொழிற்றகைமைப் படிப்பு என மாணவர்களின் நாட்டம் பல திசைகளில் சென்று விடுகின்றது.

இதனால் பாடசாலைக் கல்வியை வழங்கும் கல்வி நிலையங்களை விட வெளிவாரிப் பட்டப்படிப்பு, கணினிசார் தொழிற்றகைமைப் படிப்பு என கல்வி நிலையங்களின் செல்வாக்கு அதிகரித்து விட்டது. ரியூசன் பரப்பு பல நவீன வடிவங்களை எடுத்துள்ளது.

பெற்றோர்களின் வாழ்க்கைத்தர வசதிகளும் மிகப் பெருமளவில் அதிகரித்து விட்டன. இதனால் பாடசாலைக் கல்வியைத் தவிர இசை வகுப்புக்கள், இணைய வழிக் கற்கைகள் என பிரத்தியேக ரியூசனின் பரப்புக்களும் அதிகரித்துவிட்டன.

கால மாற்றம் இத்தகைய வலுவுள்ள தனியார்துறை என்ற ஒரு நிலையை அடைய வைத்துவிட்டது. பெற்றோர்களின் கல்விச் சுமைகளும் பல வடிவங்களில் அதிகரித்து விட்டன.

ரியூசன் துறை வரப்போகும் காலத்தில் பல புதிய புதிய வடிவங்களை எடுப்பதற்கு வழிகோலத்தான் போகின்றது.

முதுசொம்




திருக்கோணேஸ்வரம் கோணேசர் சுவாமிப் பாறையில் இந்த இராவணன் வெட்டு காணப்படுகின்றது. இலங்கை வேந்தன் என்று பெருமையுன் சிறப்பிக்கப்பட்டவனும், சிறந்த சிவபக்தனுமாகிய இராவணேஸ்வரன் சிவலிங்கத்தைப் பெற்றுச் செல்வதற்காக தெட்சணகைலாசம் எனப் போற்றப்படும் திருக்கோணேஸ்வரத்திற்கு வருகை தந்து, சிவபெருமானை நோக்கித் தவமிருந்தான். தனது தாயார் வழிபடுவதற்காக உத்திர கயிலைக்குச் சென்று தவஞ்செய்து பெற்றெடுத்த சிவலிங்கத்தை இழந்துவிட்ட இராவணன், நாரதரின் அறிவுரைப்படி தெட்சண கயிலாயமாகிய திருக்கோணேஸ்வரத்திற்கு வந்து மீண்டும் ஒரு லிங்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவே சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான்.

இறைவன் அவனது தவத்திற்கு இரங்காமை கண்ட இராவணன், பக்தி வைராக்கியத்தினால், அகங்காரம் கொண்டு கோணேசர் அமைந்துள்ள குன்றையே வெட்டிப் பிளந்து எடுத்துச்செல்ல முனைந்தான். அதற்காக அவன் வெட்டிய அடையாளம்தான் இராவணன் வெட்டு. இராவணன் வழிபாடு செய்துவந்த கோணேஸ்வரத்தில் பக்தி வைராக்கியத்தின் சின்னமாக இன்றும் இராவணன் வெட்டு காணப்படுகின்றது. இது கடல் மட்டத்தில் இருந்து 350 அடி உயரமான குன்றில் கோணேசர் கோயிலுக்கு அருகே கிழக்குப் பக்கமாகக் கடலுக்குச் செங்குத்தாக அமைந்திருப்பது அற்புதமாக இருக்கும். இந்த வரலாற்றை தெட்சண கயிலாய புராணம் கூறுகின்றது.

ஒல்லாந்தர் - பிரித்தானியர் ஆளுகைக் காலங்களில் இப்பகுதி "காதலர் பாயும் இடம்" (Lovers Leap) என அழைக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள ஈஸ்வரங்களான நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸவரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரம் திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் ஆகிய இறைபக்தி மிக்க அடியவர்களினால், பாடல் பெற்ற தலமாக விளங்குகின்றது.


இத்தகைய பெருமைகள் கொண்ட கோணேசப் பெருமானின் அருட்கடாட்சத்தினால், பல்வேறு வரங்களைப் பெற்று இலங்கையை ஆண்டு வந்ததனால், இராவணனுக்கு ஈஸ்வரப் பதவி கிடைத்ததாக புராணங்கள் கூறுகின்றன. இதனால், இராவணன், இராவணேஸ்வரன் என்று அழைக்கப்பட்டான். இன்றும் கூட திருக்கோணேஸ்வர உற்சவ நாட்களில் வேதியரினால் ஓதப்படும் மந்திரத்தின் ஒரு வரியில் "இராவணேஸ்வராய நமக" என்று இராவணனின் பெயரில் மந்திரம் சொல்லப் படுவது, இராவணனின் பெருமையைக் காட்டுகின்றது.

இராவணனுக்கு ஆறு ஆண் சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் இருந்ததாக இராவண காவிய வரலாறு கூறுகின்றது. அவர்களில் செல்வத்திற்கு அதிபதியாக விளங்கும் குபேரனும் ஒரு சகோதரன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆறுதல்

## எமது வெளியீடுகள்






















With Best Compliments From :

# GOWRIY Printers

Quality Offset Printers for Cartoons, Greeting Cards, Calenders, Diaries & Books.

207, Sir Ratnajothi Saravanamuthu Mawatha, Colombo - 13
(Wolfendhal Street)

Tel : 011 2432477, Tel / Fax : 011 2423433. E - mail : gowriyprint@yahoo.com